In 1619 the Portuguese for the first time succeeded in annexing Jaffna to their Asian empire. But on account of the continuing Tamil opposition to Portuguese rule they were not in a position to use Nallur as their capital. This resulted in the choice of the present site of the fort of Jaffna as the Portuguese headquarters. Filipe de Oliveira, the Portuguese officer who was in control of Jaffna after the annexation, began on the fifteeteenth of August 1620 to build a small fort enclosing the Franciscan Church of Our Lady of Miracles in the place which is now occupied by the enlarged fort. When this fort was built the Portuguese forces at Nallur were withdrawn to this place. But it was in 1621 that de Oliveira transferred the capital from Nallur to the new town of Jaffnapatao. This place was easier to defend as it could be reinforced by sea.

The fortification of the new town commenced only in 1624. The real foundation of the modern town may be

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

said to have been laid in that year. *None of the buildings of the time of the* Jaffna rulers seems to have been spared and the nucleus of the modern town consisted of only the structures erected by the Portuguese. Among these were some churches, including the renowned Franciscan church of Our Lady of Miracles, the Misericordia (a charitable institution for the relief of the poor and the sick, the education of foundlings, orphans and the burial of the dead) founded by de Oliveira, a hospital, the house of the Captain-Major, three convents founded by the three Catholic orders and a Franciscan College. While the work on the fortification was in progress there was a tempest in 1627 which caused much damage to the town.

This incredible storm wrought much havoc over Jaffna. The fortification of the town was resumed after the storm. After de Oliveira, his successor Lancarote de Seixas continued the work and it was completed only in 1632. It appears that under the Portuguese the town did not grow beyond this fortified area, except for some residences just outside. The Portuguese did not enjoy sufficient peace for any expansion of the town to take place. There were several attacks on the town before its final capitulation to the Dutch in 1658.These attacks must have resulted in considerable damage to the town. We find that as early as 1637, only five years after the fortification work was completed. Lopo Gomes de Abrew was busy rebuilding part of the walls.

However, by 1658 it was one of the largest and strongest forts that the Portuguese had in Asia. It was larger than the fort that the Dutch had built *in the capital of their Asian* empire, namely Batavia (modern Jakarta,capital of Indonesia). Its walls were of unusual height and thickness.

When the Dutch occupied the town, the church and the houses were repaired, and the place was planted with 200 or 300 coconut trees. They also pulled down many of the dwelling houses which stood too close to the canal and the fort. During the period of Dutch rule the main buildings in the town were the houses (huys) of the various administrative officials such as the Commandeur, Capiteyn, Coopman, Onder Coppman, Predicant, and the Krankbezoeker. There was a large church in the fort. As in the Portuguese period, there were also churches in Vannarponnai and Chundikuli, but these were not part of the town at that time.

Eighteenth and Nineteenth Centuries

The Dutch no doubt enlarged the town and by the end of the eighteenth century there was, besides the main fort, a section without any walls called the Pettah (Tamil **pettai** - outer-town) or Black Town which was very populous.

Under the British, Jaffna town began to grow as a provincial capital The outer-town or Pettah became more important and the fort receded into the background. In 1800 it was already having several thousand residents and the measures adopted by successive officials, chief among whom were Colonel Barbut, P. A. Dyke and W. C. Twynham, helped the growth of this town to the position of the second largest in the island under the British.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The opening of new schools, churches, streets and government departments early in the nineteenth century gradually changed the appearance of the town. At the beginning of the century there stood an orphanage and a Lutheran Church at the site of the present Jaffna Central College and this property was bought by missionaries in 1816 and turned into an English school and chapel. That was the school, opened in 1817 as the Jaffna Wesleyan English School, which later became the Jaffna Central College. Close to that was built in 1823 St. Peter's Church which still stands here. Similar schools and churches were soon built in many parts of the town.

Before the end of he century. Jaffna had earned a reputation among the British as a seat ot Tamil learning and culture. The following description in the **Illustrated London News (Supplement**, April 25, 1863, p.401)- is an indicat on of the image it had projected at that time:

"The flower ot the Tamil race. is perhaps to be found in the north of Ceylon. Here undoubtedly the purest Tamil is spoken in the present day; and since Madura, in the Madras Presidency (reputed in ancient times and under the august influence of the Pandian Kings, the Ptolemies of India. to have been the Athens of Southern Hindostan), ceased to be a seat ot learning under repeated aggressions from the barbaric hordes of Hyder Ali and Tippoo Sahib, Jaffna, the capital of the north of Ceylon, has become the great focus of the Tamil servants. Here Oriental learning yet flourishes side by side with Occidental seminaries and colleges....There are few places in the East where one could find a community of men as orderly, intelligent and industrious as the Tamils of Jaffna."

By the middle of the nineteenth century a hospital which grew into the present Government Civil Hospital had been built. At the beginning it was not a government concern but was run by the Jaffna Friend-in-Need Society. It was taken over by the government in 1906 and was opened in 1907 as the Government Civil Hospital. By he third quarter of the century the town had become very congested and several sanitary problems had cropped up. Cholera was one of the diseases that spread at this time and there was a major epidemic in 1866-67.

By the end of the century most of the sanitary problems seem to have been solved and the town once again looked clean and beautiful.

Twentieth Century

At the beginning of the twentieth century an important development took place and that was the introduction of the railway. In March 1902 a line was opened from Kankesanturai to Chavakachcheri through the Jaffna town and in September it was extended up to Pallai. In 1905 it was linked with Anuradhapura and thus the northern line from Colombo was completed. Another important development that took place around this time was the setting up of the first Local Board for the Jaffna town. Later, on 1st January 1923 an

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Urban District Council was established in Jaffna. In 1940 this was changed into an Urban Council. Nine years later, on 1st January 1949, Jaffna was declared a Municipality.

The years after independence have seen much development in the city of Jaffna. Several new buildings, such as the Public Library, the Post Office, the Railway station, the Open Air Theatre, the Veerasingham Hall, the Model Market and tourist hotels which have all become important landmarks in the town, have been erected during this period. Fashionable residences have also come up in several parts of the town. The Municipal Council has been making a number of improvements to the town. These have helped to change the face of Jaffna to a considerable extent.

(*This is an abridged and modified version of: K. Indrapala, 'The City of Jaffna-A Brief History'*, **The Jaffna Municipal Council Silver Jubilee Souvenir,** 1974)

யாழ்ப்பாண நகரத்தின் வரலாறு

கிறிஸ்துவுக்கு முற்பட்ட நூற்றாண்டுகளில் யாழ்ப்பாணத்தில் ஒரு சிற்றிராச்சியம் இருந்தது எனக்கொள்ள இடமுண்டெனினும், அதன் தலைநகர் எங்கிருந்தது என்பது தெரியவில்லை. தற்போதைய யாழ்ப்பாண நகரம் இடைக்காலத்து யாழ்ப்பாண அரசின் தலைநகராக இருந்தது. பதினாறாம் நூற்றாண்டில் போத்துக்கீசர் வந்தபோது தமிழ் மன்னர்களுடைய அரண்மனை நல்லூரில் அமைந்திருந்தது. 1619-இல் போர்த்துக்கீசர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய பின்னர் யாழ்ப்பாணக் கோட்டை அவர்களாலே கட்டப்பட்டது. இதனை மையமாகக் கொண்டே புதிய யாழ்ப்பாண நகரம் வளர்ந்தது. புதிய நகருக்கான அரண்களை அமைக்கும் வேலை 1624-இல் தொடங்கியது. இது 1632-இல் முற்றுவிக்கப்பட்டது. 1658-இல் ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய பின் மீண்டும் சில மாற்றங்கள் செய்யப்பட்டு நகரம் பெரிதாக்கப்பட்டது கோட்டைப் பகுதியை விட, வெளியே பேட்டை என்னும் பகுதியும் காணப்பட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆங்கிலேயர் ஆட்சியின்போது பல புதிய தேவாலயங்கள், பாடசாலைகள், இல்லங்கள், வர்த்தகநிலையங்கள் ஆகியவை கட்டப்பட்டு நகரம் வளரத் தொடங்கி து. 1902-இல் காங்கேசன்துறையிலிருந்து யாழ்ப்பாண நகரம் வழியாகச் சாவகச்சேரி வரை புகையிரதப்பாதை திறக்கப்பட்டது. 1905-இல் இது கொழும்புப் பாதையுடன் இணைக்கப்பட்டது. 1923-இல் யாழ்ப்பாணத்தில் நகர மாவட்ட சபை ஒன்று அமைக்கப்பட்டது. இது 1940-இல் நகர சபையாக மாறி, 1949-இல் மாநகர சபையாகியது. இதன் பின்னர் பல புதிய கட்டிடங்கள் அமைக்கப்பட்டு, நகரத்தின் தோற்றம் மாற்றமடைந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

JAFFNA BEFORE THE DAWN OF HISTORY

Dr. James T. Rutnam

The prehistoric and protohistoric archaeology of Jaffna is an indispensable prelude to the true appreciation of our history. Until about a decade ago very little was known about the prehistory and protohistory of Jaffna, and one had to be content with the legends of the Nagas of the Pali chronicles that passed for history. But today the situation has changed. The discovery of the first megalithic burial site in the Jaffna District, in one of the Anaikoddai mounds, in December 1980 has opened up a quite new chapter in Jaffna's remotest past, and this has been followed by startling discoveries of ancient habitation sites in several parts of the peninsula.

The discoveries made by an archaeological survey team from the University of Jaffna during the first two weeks of December 1980 are indeed sensational For the first time now a scientific study of the proto-history of Jaffna has been made possible by these archaeological discoveries at the mounds of Anaikoddai, about four kilometres north of Jaffna town.

One of these mounds had been harbouring a veritable burial complex dating back to pre-Christian times, until it was laid bare by workmen removing earth to fill the Navanthurai Lagoon. It was at this point that a team from the Jaffna University had moved in to save some of the precious artefacts and skeletal remains from being subjected to a second burial in another place that was being reclaimed from the lagoon.

The discoveries include skeletal remains from extended burials and urn burials, iron tools such as spearheads and daggers, parts of copper rod, a large amount of black-and-red ware that is typical of megalithic sites in Sri Lanka and South India, Roman rouletted ware and even objects with dateable writing, one of which goes back to the third century B. C.

There is a reference by the Dutch writer Valentyn to some finds suggesting a sort of Roman settlement in the first century A.D. in Mantai in Manner, more or less comparable to Arikamedu on the opposite coast of South India. But the evidence now appearing is of very much greater significance, for they confirm the lurking anticipation a few of us have had, since the discovery in the twenties of the urn burials at Pomparippu, that there was a megalithic phase common to the whole of South India and Sri Lanka preceding the early historic period.

Looking back it would seem that we had treated the large number of discoveries in many parts of the country where evidence of a megalithic phase had been observed with very little appreciation, not to say indifference, of their far-reaching significance.

As far back as 1896 I evers had found an ancient burial place in Gurugalhinna in the Anuradhapura district. This had been also noted by H. C. P. Bell in 1892. It was a megalithic site, but the report of further investigations by Godakumbura

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

in 1965 has yet to see the light of day. Hugh Nevill is on record as having discovered a cinerary urn at Malikam Pitti in 1877. A. C. Hocart announced the discovery of the Pomparippu urn burials in 1924.

It will be sufficient here to note a few names of places where discoveries had been made of urn burials, dolmens, cists, extended burials, black-and-red ware, etc., all pointing to a megalithic phase in Sri Lanka. These are, to be brief, the Gedige in Anuradhapura, Katiraveli in the Batticaloa district, Padavigampola in the Kegalle district, Gurugalhinna in the Anuradhapura district, Kokebe in the North Central province, Makewita in the Gampaha district, Ibbankatuwe in the Matale district, Okanda, Habarana. Tissamaharama, Asmadala, Mummaragoda, Itikala, Bambaragastalawa, Kudumbigala and Panamamoderagala.

Vimala Begley and others of the University of Pennsylvania did some excavation in Pomparipau in 1970. Begley had estimated as many as eight thousand graves in the three or four acres that form the megalithic cemetery at Pomparippu.

Commenting on some of these sites, S. Paranavitana in his work entitled *Sinhalayo* published in 1967, wrote on page 7: "These megalithic sites and urn fields are found throughout the regions inhabited by Dravidian-speaking people. The burial customs to which they bear witness are referred to in early Tamil literature. It is therefore legitimate to infer that the people who buried their dead n dolmens and cists as well as in large iearthen-ware jars, were Dravidians". He continued on page 9: "The few megalithic monuments and urn burials discovered in Ceylon are obviously an overflow from South India."

We have now discovered that these are far from being "few", and with further study are also compelled now to accept that they are not an "overflow" from South India but part of a single matrix of culture and identity that bound South India and Sri Lanka together in the past. While Paranavitana had chosen to call the bearers of this culture Dravidians, we would prefer to avoid names for the present and to confine our attention purely to scientific study free of political chauvinism or religious fanaticism. Is there much point in wanting to know in the present context which came first, the chicken or the egg?

Scholars seem to attach great importance to the discovery at Anaikoddai. Jaffna seems to have shared a common culture with Tamil Nadu in the pre-Christian and early Christian centuries. Roman rouletted-ware has been found at such sites as Uraiyur and Kaveripatinam in Tamil Nadu, and its presence at Anaikoddai shows that Jaffna too was, as Warmington had observed in 1925, in its own way influenced by the Roman trade with Tamil Nadu in the 2nd and 3rd centuries.

The excavation at Kantarodai in 1970 had exposed megalithic cultural artefacts, specially black-and-red ware, in the earliest phase of that site, dating to the 2nd century B. C.

One noticeable fact at Anaikoddai was the discovery of a large number of potsherds with graffitti marks compara-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ble with those of South India. No Buddhist Jain or Brahminical influence is revealed by any one of these finds. The Pomparippu finds compare in some cases with those at Adichanallur in the Tinnevelly District, which some date as early as the 9th century B. C.

One is reminded on this occasion of the prophetic words of Dr. Paul E. Pieris, when he declared publicly at a meeting of the Royal Asiatic Society as far back as 1919: "I hope the Tamil people will realise that in truth there is buried in their sands the story of a much more fascinating development than they had hitherto discovered for, 2000 years ago, Jaffna was an important and flourishing district. Coins in abundance have been discovered indicating a flourishing condition of commerce not only in Roman times but far anterior to that."

வரலாற்றுக்கு முந்திய யாழ்ப்பாணம்

நீண்ட காலமாக யாழ்ப்பாணத்தின் வரலாற்றுக்கு முந்திய நிலைபற்றி அறிய பாளி நூல்களிலுள்ள கட்டுக் கதைகளையே நம்பியிருக்க வேண்டியிருந்தது. கடந்த சில ஆண்டுகளாக நடத்தப்பட்ட தொல்லியல் ஆராய்ச்சிகளின் விளைவாக இந்நிலை மாறி, இன்று நம்பகமான விஞ்ஞானச் சான்றுகளை இப்பிரதேசத்தின் ஆதிகாலம் பற்றிப் பெற்றுள்ளோம். சிறப்பாக ஆனைக்கோட்டையில் 1980இல் நடத்தப்பட்ட அகழ்வாராய்ச்சி ஒரு புதிய அத்தியாயத்தையே தொடக்கியுள்ளது. யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி, இலங்கையின் பல பாகங்களிலும் இற்றைக்கு ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு பெருங் கற்பண்பாடு பரவியிருந்தது பற்றி இப்பொழுது எம்மால் அறிய முடிந்துள்ளது. கிறிஸ்துவுக்கு முற்பட்ட நூற்றாண்டுகளிலும் கிறிஸ்தவ சகாப்தத்தின் ஆரம்ப நூற்றாண்டுகளிலும் தமிழ் நாட்டிலும் யாழ்ப்பாணத்திலும் ஒரு பொதுப்பண்பாடு பரவியிருந்தது என இப்பொழுது அறிய முடிந்துள்ளது. தமிழ் நாட்டுடன் உரோமர்கள் நடத்திய வர்த்தகம் யாழ்ப்பாணத்திலும் செல்வாக்கினை ஏற்படுத்தியிருந்தது ஆனைக்கோட்டையில் மட்டுமல்லாது கந்தரோடையிலும் பெருங்கற்பண்பாட்டு அம்சங்கள் அகழ்வாராய்ச்சியின் போது வெளிப்பட்டுள்ளன. யாழ்ப்பாண மண்ணில் முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்கள் புதைந்து கிடக்கின்றன என்று ஒரு காலத்தில் கலாநிதி போல் பீரிஸ் கூறியதன் உண்மை இப்பொழுது நினைவுக்கு வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்து நவீன தமிழ் இலக்கியம்

— பேராசிரியர் அ. சண்முகதாஸ் —

எங்கள் நாட்டின் நவீன தமிழ் இலக்கியம் இந்த நூற்றாண்டின் ஆரம்பத்துடனேயே படைக்கப்படத் தொடங்கியது என்று கூறுவது தவறாகாது. ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சியிலே மூன்று முக்கியமான கட்டங்களை நாம் இனங்காணக்கூடியதாயுள்ளது. முதலாவது கட்டத்திலே தோன்றிய இலக்கியங்களிலே இந்த நாட்டினுடைய பண்புகள் எவற்றினையும் நாம் காணமுடியவில்லை. அரசகேசரியின் இரகுவம்சம் போன்ற நூல்களெல்லாம் அந்த வகையிலேயே அடங்குகின்றன. இரண்டாவது கட்டத்தினைச் சார்ந்த இலக்கிய ஆக்கங்களிலே ஓரளவு இந்நாட்டு 'மண் மணம்' வீசுவதைக் காணலாம். சின்னத்தம்பிப் புலவருடைய பறாளை விநாயகர் பள்ளு, நட்டுவச் சுப்பையனாருடைய கனகி புராணம் போன்றவற்றை இக்கட்டத்தைச் சார்ந்த இலக்கியங்களாகும். ஈழநாட்டின் இயற்கை வளங்களைச் சின்னத்தம்பிப் புலவர் இளைய பள்ளியின் வாயினாலேயே கூறவைக்கின்றார். வரன்முறையான வர்ணனைகளாக அமைந்தபோதிலும் இந்த நாட்டினை நினைந்து அவை கூறப்படுகின்றன என்பதை நாம் உணருகிறோம். கனகிபுராணத்திலே

தாலக் கனியொன் றினுக் காகத்
  தரைமேல் மாந்தர் பலர் திரண்டு
வேல்கத் திகள் கொண்டெறிந்து
  விசயம் பொருந்தும் வள நாடன்
மால்பற் றிய மனத் தின னாக
  வந்தான் கனகே மன்றினுக்கு
நீலக்கருங் கார்மேக
  நியூற்ற னிவன் காண் நேரிழையே

என்னும் பாடலிலே யாழ்ப்பாணத்திலே ஒரு பனங்காய்க்காகப் பெருஞ்சண்டை புரியும் சமூகப் போக்கொன்றினைச் சித்திரிக்கிறார் புலவர் சுப்பையனார். இது போன்று ஈழநாட்டின் சிற்சில பண்புகளைக்கொண்ட இலக்கியங்கள் இரண்டாவது கட்டத்தைச் சார்ந்தனவாகும். ஈழநாட்டுக்கே தனித்துவமானவையாகவும், தமிழ் நாட்டு இலக்கியங்களினின்று வேறுபட்டனவாகவும் அமையும் இலக்கியங்களே மூன்றாவது கட்டத்தைச் சார்ந்தன. இக் கட்டத்தைச் சார்ந்த இலக்கியங்களை ஈழநாட்டு நவீன தமிழ் இலக்கியங்கள் என்று கூறினும் அமையும். இவற்றைக் கவிதை, நாவல், சிறுகதை நாடகம் என்னும் நான்கு வடிவங்களாகப் பகுத்து விபரிக்கலாம்.

கவிதை

இந்த நாட்டின் தேசிய எழுச்சிக் கால கட்டத்திலே வாய்ந்த கவிஞர்களின் ஆக்கங்கள் ஒருவகையில் ஈழத்து நவீன கவிதைத் தோற்றத்துக்கு வழி சமைத்தன எனலாம். நவாலியூர் சோமசுந்தரப் புலவர், ப. கு. சரவணபவன், முதுதமிழ்ப் புலவர் மு. நல்லதம்பி, பாவலர் ப. துரையப்பபிள்ளை போன்றோர் பழைய செய்யுள் வடிவங்களையும் புதிய சந்தமுடைய வடிவங்களையும் கையாண்டனர். செய்யுட் பொருளிலும் மாற்றமேற்பட்டுள்ளதையும் இவர்களுடைய பாடல்கள் காட்டுகின்றன.

மாவலிகங்கைப்புனலாந் தாவணியை வீசி
மாதிரமெலாம்மணக்கும் வாசனையைப் பூசி
காவலரின் கண்மருட்டும் கன்னிஎங்கள் தேயம்
காசினியி லிவளைப்போற் கன்னியில்லை யில்லை

என்று சரவணபவன் பாடும் செய்யுள் வடிவம் பழையதாக அமைந்தபோதிலும் அதிலே ஒரு புதிய சந்தச்சுவை அமைந்துள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளது. இப் பாடல் இடம்பெறும் ஈழ நாட்டுக் குறம் என்னும் பிரபந்தம் ஈழநாட்டின் இயற்கை வளங்களையும் ஏனைய விவரங்களை யும் கூறுகின்றன. நவாலியூர் சோமசுந்த ரப் புலவரின் பாடல் வடிவங்களிலே பழை மைப் பண்பும் புதுமைப் பண்பும் ஒருங்கே அமைந்துள்ளன.

''பருத்தித்துறை யூராம்
பவளக்கொடி பேராம்
பாவைதனை யொப்பாள்
பாலெடுத்து விற்பாள்''

என்னும் பாடற் சந்தம் புதுப்பொலிவினைக் காட்டி நிற்கின்றது. ஓரளவு பழைமை வாடை வீசும் செய்யுள் வடிவங்கள் மூல மாக சமூக விடயங்களாகிய புதுமைப் பொருளைக் கூறுவனவாக அமைகின்றன பாவலர் துரையப்பபிள்ளையின் பாடல்கள். ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம் தொகுப்பாசிரியர் ஆ. சதாசிவம் பிற்காலத் துக் கவிஞர்கள் சிலரையும் பழைமை-புதுமை தழுவியவர்களாகக் குறிப்பிடுகிறூர். அவர் கூறுவதாவது: ''பழமையும் புதுமையுந் தழு விய சிறந்த பாடல்களைப் பாடிய புலவர்க ளுட் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கோர்: வித் துவான் வேந்தனர், பண்டிதர் சிவப்பிரகா சம், நாவற்குழியூர் நடராசன், யாழ்ப்பா ணன், நவாலியூர் நடராசன் முதலியோரா வர்'' இக் கூற்று ஒருவகையிலே பொருத்த மானதெனவுங் கூறலாம். மரபுவழிச் செய் யுள் வடிவங்களிலே பாடல்கள் பாடும் வித் துவான் வேந்தனரே,

''பாலைக் காய்ச்சிச் சீனி போட்டுப்
பருகத் தந்த அம்மா
காலைத் தூக்கிக் கண்ணி லொற்றிக்
கட்டிக் கொஞ்சும் அம்மா.''

என்று புதிய பாணியிலே கவிதை வடிக்கி றூர். ஈழத்து நவீன கவிதையின் முக்கிய மான அம்சமான பேச்சோசை இப் பாட லிலே நன்கு இழையோடுவதைக் காண லாம். இதேபோன்று நாவற்குழியூர் நடரா சனும்,

''கேட்குது மணி யோசை யொன்று
கிண் கிணீர் என
வாட்டுதந்த வனிதை காலின்
வளைசிலம் பொலி''

போன்ற கவிதைகள் மூலம் புதுமைக் கவி ஞர்களாகவும் கணிக்கப்பட்டார்கள்.

இவர்களை விடச் சற்று வயதிலே இளைய வர்களாகிய மகாகவி, நீலாவணன், முரு கையன் போன்ற கவிஞர்கள் ஈழத்து நவீன கவிதைகளை முற்றுகப் படைத்தவர்கள் என்று கூறலாம். இவர்களுடைய அடி யொற்றி எத்தனையோ கவிஞர்கள் இன்று கவிதை புனைகிறூர்கள். எனினும் இன்று வரையும் இவர்கள் மூவருமே ஈழத்து நவீன கவிதைக்குச் சிறந்த எடுத்துக்காட்டுக்களா கத் திகழ்கின்றனர். இம் மூவருள்ளும் மகா கவி முதன்மைக் கவிஞராகத் திகழ்கிறூர். அவர் பாடிய குறும்பா பாரதிக்குப் பின் தமிழ்க் கவிஞன் ஒருவனல் படைக்கப்பட்ட ஒரு புதுமை வாய்ந்த கவிதை இலக்கியமா கும். குறுகிய பாக்களால் ஆனது என்றும், குறும்பு நிறைந்த பாக்களால் ஆனது என் றும் குறும்பாவுக்கு விளக்கங் கொடுக்க லாம்.

''முத்தெடுக்க மூழ்குகிறுன் சீலன்- அவன்
முன்னலே வந்துநின்றுன் காலன்
சத்தமின்றி வந்தவன்தன் கைத்தலத்தில்
பத்து முத்தைப்
பொத்திவைக்கப் போனுன் முச்சூலன்''

என்பது போன்ற பாடல்கள் இத் தொகுப் பிலே இடம்பெற்றுள்ளன.

ஈழத்து நவீன கவிதையின் முக்கியமான பண்பாக அமைவது பேச்சோசையாகும். இப் பண்பினை மேற்குறிப்பிட்ட கவிஞர்கள் மூவருடைய படைப்புக்களிலும், அவர் வழி வந்த கவிஞர்களுடைய படைப்புக்களிலும் காணலாம். இப் பண்பு ஈழத்துக் கவிதை யிலே மேலோங்குவதற்குக் காரணம் அறு பதுகளிலும் அதன் பின்னரும் இந்த நாட் டிலே செல்வாக்குப் பெற்றுவந்த கவியரங் குகளேயாகும். மக்களுக்கு நேரடியாகப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாச்சொல்லும் இக் கவியரங்குகள் பல கண்டவர்கள் மகாகவி, முருகையன், நீலாவணன் போன்ருேர். இவ்வரங்குகளுக்காக எழுதப்பட்ட கவிதைகள் தவிர்க்க முடியாதபடி பேச்சோசைப் பண்புடையனவாக அமையவேண்டியேற்பட்டது. இப் பண்பு நாளடைவிலே பொதுவான கவிதைப் பண்பாக மாறிவிட்டது. மகாகவியினுடைய கோடை, கண்மணியாள் காதை, ஒரு சாதாரண மனிதனது சரித்திரம், வீடும் வெளியும் போன்ற இலக்கிய ஆக்கங்களிலே இப் பேச்சோசைப் பண்பினை நன்கு காணலாம்.

ஈழத்து நவீன கவிதையின் ஓர் அங்கமாகத் திகழ்கின்றது 'புதுக்கவிதை.' தருமு சிவராமு, மு. பொன்னம்பலம், தா. ராமலிங்கம், வ. ஐ. ச ஜெயபாலன், எம். ஏ. நுஃமான், சண்முகம் சிவலிங்கம், திக்குவல்லைக் கமால், மேமன்கவி போன்றவர்களும் இன்னும் பலரும் புதுக்கவிதை படைத்துள்ளார்கள். எனினும் ஈழத்தில் எழுந்த பல புதுக்கவிதைகள் வெறுஞ் சொல்லடுக்குகளாகவே அமைந்துவிடுகின்றன. யாப்பு வரையறையை மீறுவதே முக்கிய நோக்காக அமையினும், கவிதைக்குரிய இயற்கையான பேச்சோசை, சீர்ப்பிரமாணம் ஆகியவற்றினையாவது புதுக்கவிதைகள் கொண்டு அமையவேண்டியது அவசியம். ஆனல் துரதிஷ்டவசமாகப் பெரும்பாலான கவிதைகளிலே இவை காணப்படவில்லை (மேலும் விளக்கத்துக்குப் பார்க்க: அ. சண்முகதாஸ் ''கவிஞரும் மொழியும்'' 'சிந்தனை' தொகுதி I மலர் 1, இலங்கைப் பல்கலைக் கழகம், யாழ்ப்பாண வளாகம், 1976, பக். 37-51).

நாவல்

நாவல் ஒரு நவீன இலக்கிய வடிவம் எனக் கொண்டோமெனில், ஈழத்து நவீன நாவல் வரலாறு சென்ற நூற்ருண்டின் இறுதிப் பகுதியிலேயே தொடங்கிவிட்டது எனக் கூறலாம். 1885ல் வெளியான சித்திலெப்பையின் அஸன் பேயுடைய கதை ஈழத்தின் முதல் நாவலாகும். எனினும் இந்நாட்டின் சமகாலப் பாத்திரங்களைக் கொண்ட நாவல்களான வீரசிங்கன் கதை (1905), உதிரபாசம் (1915) ஆகியனவற்றை சி. வை. சின்னப்பாபிள்ளையே முதன் முதலில் எழுதினர். இந்நாட்டுத் தமிழ் மக்களிடையே காணப்பட்ட நடைமுறைகளை அடிப்படையாகக் கொண்டு மங்களநாயகம் தம்பையா (நொறுங்குண்ட இருதயம், 1914 தேம்பாமலர், 1929), ம. வே. திருஞானசம்பந்தபிள்ளை (காசிநாதன் நேசமலர், 1924,) இடைக்காடர் (நீலகண்டன் அல்லது ஒரு சாதி வேளாளன், 1925) போன்ருேர் நாவல்கள் எழுதினர்.

ஈழத்துத் தமிழ் மக்களின் வாழ்க்கைப் பிரச்சினைகளை சற்றுக் கூர்ந்து நோக்கி, அப் பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு க. தி. சம்பந்தன் (பாசம், 1947), சு. வேலுப்பிள்ளை (மன நிழல், 1948), அ. செ. முருகானந்தம் (யாத்திரை), கனக. செந்திநாதன் (விதியின்கை, 1953, வெறும்பானை, 1956), வ. அ. இராசரத்தினம் (கொழுகொம்பு, 1955-56) போன்ருேர் நாவல்களைப் படைத்தனர்.

தமிழ் மக்களின் பல்வேறு வகைப்பட்ட பிரச்சனைகளின் நடுவே நின்று, அப் பிரச்சனைகளாலே தாக்குண்ட மனிதர்களைக் கதை மாந்தர்களாகக் கொண்டு, ஈழத்துத் தமிழ்ப் பேச்சு வழக்கினையே பெரும்பாலும் உபயோகித்து நாவல் எழுதும் போக்கு 1950களின் பிற்பகுதியிலே உண்டாகியது. இப் போக்கினைப் பிரதிபலிக்கும் நாவலாசிரியர்களாக இளங்கீரன் (நீதியே நீ கேள், 1959 தென்றலும் புயலும், இங்கிருந்து எங்கே முதலியன, டானியல் (பஞ்சமர், 1972, கோவிந்தன், 1983 முதலியன), செங்கை ஆழியான் (வாடைக்காற்று, பிரளயம், காட்டாறு, முதலியன), செ. கணேசலிங்கன் (நீண்டபயணம், 1965, சடங்கு 1966; செவ்வானம், 1967; தரையும் தாரகையும், 1968; மண்ணும் மக்களும், 1970;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளமையின் கீதம், *1983* முதலியன), நந்தி (மலைக்கொழுந்து, *1964;* தங்கச்சியம்மா முதலியன), எஸ். பொன்னுத்துரை (தீ, *1961;* சடங்கு, *1971*), அருள் சுப்பிரமணியம், (அவர்களுக்கு வயது வந்துவிட்டது, *1973*), அ. பாலமனோகரன், (நிலக்கிளி, குமாரபுரம் முதலியன) முதலியோர் விளங்குகின்றனர். இவர்களுள் இன்று தமிழ் மக்களின் சமூக நடைமுறைகளை ஊன்றி நோக்கித் தரமான நாவல்கள் எழுதிக் கொண்டிருப்பவர்களாக எஸ். டானியல், செங்கையாழியான் ஆகிய இருவரையும் விதந்து குறிப்பிடலாம்.

சிறுகதை

சிறுகதையும் நாவலைப்போல் ஒரு நவீன இலக்கிய வடிவமாகும். மேலைத்தேயத்தவர் தமிழுக்கு அறிமுகஞ்செய்துவைத்த வடிவமாகும். ஈழத்தில் 1930களின் பிற்பாதியிலேயே சிறுகதைகள் எழுதப்படத் தொடங்கின. சி. வைத்தியலிங்கம், இலங்கையர்கோன், க. தி. சம்பந்தர், சோ. சிவபாதசுந்தரம் ஆகியோர் எமது நாட்டுச் சிறுகதை வரலாற்றின் முன்னோடிகளாவர். கலைமகள், கிராம ஊழியன், மணிக்கொடி, ஆனந்தவிகடன், சூறாவளி, ஈழகேசரி முதலியவற்றிலே இவர்களுடைய சிறுகதைகள் வெளியாகின. இவர்களுள் இலங்கையர்கோன் ஒருவருடைய சிறுகதைகள் மாத்திரமே ஒரு தொகுப்பு நூலாக வெளிவந்துள்ளது என்பது மனங்கொள்ளத்தக்கதாகும். 1962-ஆம் ஆண்டு இலங்கையர்கோனின் மனைவி அவருடைய பதினைந்து கதைகள் கொண்டதாக **வெள்ளிப்பாதசரம்** என்னும் சிறுகதைத்தொகுதியை வெளியிட்டார். இலங்கைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையிலே பயின்று வந்தவர்களுக்கு இது பல காலமாகப் பாடநூலாக அமைந்து வந்துள்ளது.

ஈழத்துச் சிறுகதை வரலாற்றிலே இரண்டாவது தலைமுறை எழுத்தாளர்களெனக் கூறும்படியாக 1940 களிலிருந்து தி. ச. வரதராசன், அ. செ. முருகானந்தம், அ. ந. கந்தசாமி, கனக செந்திநாதன், சொக்கன், தாழையடி சபாரத்தினம், சு. வேலுப்பிள்ளை போன்றோர் எழுதிவந்தனர். தமிழர் பண்பாட்டுணர்வு, மனிதாபிமானம் என்னும் தளங்களில் தம் கால்களை ஊன்றவைத்து சமூக நடைமுறைகளை இக் கதையாசிரியர்கள் நோக்கினார்கள். இவர்களுடைய கதைகளிலே பெரும்பாலும் இலக்கியமொழி நடையே கையாளப்பட்டது.

அரசியல், பொருளியல், சமூகப் பிரச்சினைகளைப் பரவலாகத் தம் கதைப் பொருளாகக் கொண்டும் பாத்திர உரையாடல்களிலே பெருமளவு பேச்சுத் தமிழைக் கையாண்டும் சிறுகதைகளை எழுதத் தொடங்கியவர்களை மூன்றாவது தலைமுறையினராகக் கொள்ளலாம். இவர்களுடைய முயற்சி 1950 களிலிருந்து தொடங்கின செ. கணேசலிங்கன், வ. அ. இராசரத்தினம், கே. டானியல், டொமினிக் ஜீவா, நந்தி, எஸ். பொன்னுத்துரை, காவலூர் இராசதுரை, அ. முத்துலிங்கம், பித்தன், அ. ஸ. அப்துஸ்ஸமது, என். கே. ரகுநாதன், நீர்வை பொன்னையன், தெளிவத்தை யோசப், கே. வி. நடராசன், ஏ. பி. வி கோமஸ், மு. தளையசிங்கம், பவானி ஆழ்வாப்பிள்ளை, அகஸ்தியர் போன்றோரை இத் தலைமுறை சார்ந்தவராகக் குறிப்பிடலாம்.

1961-ல் பல்கலைக் கழகத்திலும் தமிழ் மூலம் கல்வி கற்கும் வாய்ப்பு ஏற்பட்டது. தன் தாய்மொழியிலே சுயமாகச் சிந்திக்கும் ஆற்றலை இப் பல்கலைக்கழகக் கல்வி பலருக்கும் வளர்க்கத் தொடங்கியது இது ஈழத்தின் பல தரமான தமிழ்ச் சிறுகதை நாவல் ஆசிரியர்களையும் உருவாக்கியது. செங்கை ஆழியான், செ. கதிர்காமநாதன், செ. யோகநாதன், செம்பியன் செல்வன், முத்து சிவஞானம், யோகேஸ்வரி கணேசலிங்கம் போன்ற சிறுகதை எழுத்தாளர்களை இலங்கைப் பல்கலைக்கழகம் உருவாக்கியது.

இன்று பெருந்தொகையான இளம் எழுத்தாளர்கள் பல்வேறு கருத்துக்களை மையமாகக் கொண்டு சிறுகதைகள் படைத்து வருகின்றனர். எங்கள் நாட்டுக்கேயுரிய பிரச்சினைகளைப் பொருளாகக் கொண்டு எங்கள் நாட்டுப் பேச்சு வழக்கின் மூலம் சிறுகதைகள் இந்த நாட்டிலே படைக்கப்பட்டுவந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துள்ளன. இதனுல் இவை தமிழ் நாட்டுச் சிறுகதைகளினின்று வேறுபட்டனவாக அமைந்து தனித்தன்மையுடையனவாகின்றன.

நாடகம்

நாவல் அல்லது சிறுகதையைப் போல நாடகம் தமிழ்மொழிக்குப் புதிய இலக்கிய வடிவமல்ல. தமிழ் நாடக மரபொன்று பன்நெடுங்காலமாக எம்மிடையே இருந்து வருகின்றது. ஈழத்தின் நவீன நாடகம் என்று கூறின், அது ஐரோப்பிய நாடக மரபைப் பின்பற்றி எழுதப்பட்ட நாடகம் என்றே, நவீனப்படுத்தப்பட்ட மரபுவழி நாடகம் என்றே குறிப்பிடலாம். தமிழ் மரபுவழி நாடகங்கள் எல்லாம் பாடல்களிலே அமைந்தன. 18-ஆம் நூற்றுண்டிலே கணபதி ஐயர் எழுதிய வாளபிமன் நாடகம் இதற்கு நல்ல எடுத்துக்காட்டாகும். இவ்வாறு செய்யுள் வடிவிலே அமைந்துவந்த நாடகம் உரைநடை வடிவத்திலே மாற்றம் பெற்று அமைந்தது ஒரு வகையிலே நவீனப்போக்கு என்று கூறலாம். அத்துடன் புராண இதிகாசக் கதைகளையே பொருளாகக் கொண்டு வந்த தமிழ் நாடகங்கள் சமூக விடயங்களைப் பொருளாகக் கொண்டதும் இன்னெரு வகையான நவீனப் போக்காகும். இவ்விரு போக்குகளையுமுடையனவாக க. சிதம்பரநாதனின் சாவித்திரிதேவிசரிதம் (1917), க. இராமலிங்கத்தின் நமசிவாயம் அல்லது நான் யார் (1929), சோமசுந்தரப் புலவரின் உயிரிளங்குமரன் (1936), சு. செல்வநாயகத்தின் சாமளா அல்லது இன்பத்தில் துன்பம் (1937), சாராவின் சத்தியேஸ்வரி (1938), என்னும் நாடகங்கள் எழுதப்பட்டு வந்தன. ஐரோப்பிய, சமஸ்கிருத நாடக மரபுகளை அனுசரித்துப் பல நாடகங்கள் எழுதப்பட்டன. பிரான்சிஸ் கிங்ஸ்பெரியின் சந்திரகாசம் (1940), மனேன்மணியம் (194), வெள்ளவத்தை மு. இராமலிங்கத்தின் அசோகமாலா (1943), பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையின் மாணிக்கமாலை (1943) என்பன அத்தகைய நாடகங்களாகும். இதுவரை குறிப்பிட்ட நாடகங்களிலே கையாளப்பட்ட மொழி நடை பெரும்பாலும் செந்தமிழ் வழக்காகவே அமைந்தது.

நாடக மாந்தர் யாவரும் தம்முடைய சொந்தப் பேச்சு வழக்கிலே பேசுவதாக உரைநடையினை அமைத்து சமூக விடயங்களையே பொருளாகக் கொண்டு நாடக இலக்கியங்கள் எழுதும் புதிய போக்கினைப் பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையே தொடக்கிவைத்தாரெனலாம். அவருடைய நானாடகம் (1930), இருநாடகம் (1952) ஆகியன உதாரணங்களாகும்.

1960களிலும் அதன் பின்னரும் இலங்கைக் கலைக்கழகத்தின் நாடகக் குழுத் தலைவராயிருந்த பேராசிரியர் சு. வித்தியானந்தனுடைய முயற்சியினுலும் ஊக்குவிப்பினுலும் பல மரபுவழி நாட்டுக் கூத்துக்கள் நூலுருப்பெற்றன. அலங்காரரூபன் நாடகம் (1962), எண்டிறீக்கு எம்பரதோர் நாடகம் (1964), மூவிராசாக்கள் நாடகம் (1966), ஞான சௌந்தரி (1966) போன்ற பல மரபுவழி நாட்டுக்கூத்துக்கள் இவ்வாறு நூலுருப் பெற்றன. இதே காலகட்டத்தில் வரலாற்று, சமய, இலக்கிய நாடகங்கள் பலவும் எழுதப்பட்டன. சொக்கனின் சிலம்பு பிறந்தது (1962), த. சண்முகசுந்தரத்தின் வாழ்வுபெற்ற வல்லி (1962), தேவனின் தென்னவன் பிரமராயன் (1963) கங்கேஸ்வரி கந்தையாவின் அரசன் ஆணையும் ஆடக சவுந்தரியும் (1965), முத்து சிவஞானத்தின் சேரன் சமாதி (1968), கரவை கிழானின் தணியாத தாகம் (1968), ஏ. ரீ. பொன்னுத்துரையின் நாடகம் (1969), முல்லை மணியின் பண்டார வன்னியன் (1970), எஸ். பொன்னுத்துரைவின் வலை (1972) என்பனவற்றை வகைமாதிரிகளாகக் காட்டலாம்.

ஈழத்தின் முதற் கவிதை நாடக நூல் 1927-ல் வெளியிடப்பட்டது. கதிர்காமர் கனகசபை என்பவரால் ஆங்கில நாடக மரபைப் பின்பற்றி அகவல் யாப்பிலே எழுதப்பட்ட நாடகமே 1927-ல் வெளியாயிற்று. நவீன கவிதைகளாலே நாடகம் எழுதும் போக்கு 1960 களுக்குப் பிறகு ஏறபடடது. இத் துறையிலும் மகாகவி வதந்து கூறத்தக்கவகையிலே ஆக்கங்கள் செய்துள்ளார். அவருடைய கோடை, புதியதொரு வீடு ஆகியன நவீன கவிதை நாடக இலக்கியத்துக்கு நல்ல எடுத்துக்காட்டுக்களாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1970 களில் நந்தியின்குரங்குகள் (1975), கனக. செந்திநாதனின் ஒரு பிடி சோறு (1976), அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் பொலிடோலே கதி (1976), பணமோ பணம் (1977), இரா. பாலச்சந்திரனின் மச்சானைப் பாத்திங்களா (1977), நவாலியூரானின் உலகம் எங்கள் கைகளிலே (1978) என்னும் சமூக நாடகங்கள் வெளியிடப்பட்டன. 1980 களில் கவிஞர் செ. கதிரேசர்பிள்ளையின் வரலாற்றிலக்கிய நாடகத் தொகுதி பாரதம் தந்த பரிசு (1980), யாழ். பல்கலைக்கழகத் தமிழ் இலக்கிய மன்றம் வெளியிட்ட ஆறு நாடகங்கள் (நூலில் வெளியிட்ட ஆண்டு 1979 எனக் குறிப்பிடப்பட்டிருப்பினும் இது உண்மையில் 1980 திலேயே வெளிவந்தது), சி. மௌனகுரு முதலியோரால் தொகுக்கப்பட்ட நாடகம் நான்கு ஆகியன வெளிவந்தன.

நாடகம் மேடைக்கலையாகவே இப்பொழுது நோக்கப்பட்டு வருகின்றது. நாடக இலக்கியம் பற்றிய நினைவுகூட அறிஞர்கள் மனத்திலிருந்து அகலுகின்றது போலத் தென்படுகின்றது. நாடகங்களை இலக்கியமாக எழுதுவார் தொகையும் குன்றிக் கொண்டே போகின்றது. சிறிது காலஞ் செல்ல தமிழ் இலக்கியப் பாகுபாட்டினுள் நாடகம் என்னுமொரு பகுப்பினை நாம் ஏற்படுத்த முடியாமலும் போகக்கூடும்.

முடிவுரை

ஈழத்து நவீன தமிழ் இலக்கியம் பொருளமைப்பிலும் வடிவத்திலும் தமிழக இலக்கியங்களுக்கு ஒப்பாக வளர்ந்து வந்துள்ளது. கவிதையிலே இடம்பெறும் பேச்சோசைப் பண்பும், புனைகதைகளிலும் நாடகங்களிலும் இடம் பெற்றுவரும் ஈழத்துத் தமிழ்ப் பேச்சு வழக்கும் இந் நாட்டு நவீன தமிழ் இலக்கியத்துக்குத் தனித்துவமான தன்மைகளை ஊட்டின எனலாம். ஈழத்து நவீன தமிழ் இலக்கியப் பரப்பை மேலெழுந்த வாரியாகவே இக் கட்டுரை நோக்குகின்ற காரணத்தால் பல எழுத்தாளர்களுடைய பெயர்களையும் ஆக்கங்களையும் இதிலே குறிப்பிட முடியாததுடன், ஈழத்து நவீன இலக்கியங்களை விமரிசன அடிப்படையிலே நோக்க முடியாமலுமுள்ளது.

Modern Tamil Literature of Sri Lanka

The dawn of 20th century saw the beginning of the modern Tamil literary history in Sri Lanka. In the field of poetry, the first half of this century witnessed both traditional and new trends. But at the beginning of the second half, young poets have been injecting new vigour and style to the Tamil poetry. In the sixties, poets like Mahakavi, Nilavanam, Murugaiyan and others have been creating poems with new content and form. Modern literary forms such as the Novel and Short story were introduced to Tamil literature by the Europeans. Thus Sidde Lebbe was able to write the first Sri Lankan Tamil novel in 1885 itself. Novels portraying the life of the Tamils of this country were written only from the beginning of this century. Tamil Short stories have been written from 1930 onwards. Ilankiran, K. Daniel, Senki Aliyan, S. Ponnuthurai, S. Ganeshalingam, Dominic Jeeva, V. A. Rasaratnam, Ilankaiyarkon, S. Kathirgamanathan are some of the names that are popular in the field of Sri Lanka Tamil Fiction.

Tradition dramas were rendered mainly in verse form. From the beginning of this century, as a new development in the Tamil dramatic literature prose has been replacing verse. After professor K. Kanapathipillai who skilfully employed the Jaffna, dialect for the first time by the early fifties to depict the social life of Jaffna Tamil drama in Sri Lanka has begun to portray the various aspects of the Tamilian life. Sokkan, A. T. Ponduturai, Tevan, Kanaka Sentinathan, Mahakavi and many others have been contributing to the development of the Tamil dramatic literature in this Country.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்துத் தமிழ்க் கூத்து மரபு

பேராசிரியர் சு. வித்தியானந்தன்

எமது நாட்டின் நாகரிகத்தையும் பண்பையும் உயிரையும்ஓம்பிவளர்த்த பெருமை கிராமங்களுக்குரியது. இயற்கைக்கு மிக அருகாமையிலிருக்கும் காரணமாக வாழ்வு என்னும் உயிருற்றுடன் கிராமங்கள்நெருங்கிப் பிணைக்கப்பட்டுள்ளன. இத்தகைய கிராமங்களில் வாழும் மக்கள் வளர்த்த அழகுக் கலையே கூத்து. இது பல்லாயிரக்கணக்கான பொது மக்களின் விலைமதிக்க முடியாத சொத்து; அவர்களின் உணர்ச்சிகளையும் செயல்களையும் வெளியிடும் சாதனம். அவர்களின் உள்ளத்திற்கு அழகையும் இன்பத்தையும் அளிக்குமாற்றல் இதற்குண்டு. கூத்திற்குத் தேசிய முக்கியத்துவமுண்டு; அது நாட்டின் கலாச்சார பாரம்பரியத்தின் முக்கிய அம்சம். நாட்டு மக்களின் உள்ளக் கருத்து, குணச் சிறப்பு, கலை, பண்பாடு, வாழ்க்கை முறை முதலியவற்றை எடுத்து விளக்குவது அக்கலை.

பல நூற்றாண்டுகளாக ஈழத்திலே யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு, முல்லைத்தீவு,சிலாபம், மலைநாடு ஆகிய பகுதிகளிற் கூத்துக்கள் ஆடப்பட்டு வந்தன. யாழ்ப்பாணத்திலும், சிலாபத்திலும், மலைநாட்டிலும் இவற்றை ஆடுவோர் தொகை மிகக்குறைவென்றே கூறவேண்டும். ஆனால் மட்டக்களப்பிலும் மன்னாரிலும் பொருளாதாரம் இன்றும் விவசாயத்தையே அடிப்படையாகக்கொண்டது. மக்களின் சமூக வாழ்க்கை சமயத்தோடு பின்னிக்கிடக்கின்றது. எனவே, மன்னார்ப்பகுதியிற் கிறிஸ்தவ மத அடிப்படையிற் பாடப்பட்ட வடபாங்கு தென்பாங்கு நாடகங்களும் சபாக்களும், வாசாப்புக்களும் ஆடப்பட்டு வருகின்றன. மட்டக்களப்பிலே தென்மோடி வடமோடிக் கூத்துக்களும் விலாசங்களும் ஆடப்படுகின்றன.

கூத்துக்கள் பெரும்பாலும் கோயில்களின் முன் நடிக்கப்படுகின்றன. கூத்து ஆடுவதற்கென அமைக்கப்படும் மேடைக் கூத்துக் களரி என அழைக்கப்படும். இது 40 அடி விட்டமுள்ள வட்டமாக இருக்கும். 3 அடி உயரத்திற்கு வட்டம் நிரம்ப மண்ணை உயர்த்தி மண் சிதறாமல் வளைத்து ஓலைகளினாற் கட்டி மேடையாக்குவர். பின்பு அதன்மீது புல்லு (புல்லாங்கத்தை) வெட்டிப்போட்டு, ஆடுவதற்கு ஏற்ப இறுக்கமான களரியாக அமைப்பர். வட்டத்தைச் சுற்றிப் பதினாலு கம்புகள் (கால்கள்) நாட்டப்பட்டு உச்சியில் அவை வளைத்துக் கட்டப்படும். அதன்மேல் குடைவிரித்தது போலச் சீலைகளைக் கொய்து தொங்கவிடுவர். மேடைக்கு அடைப்புக் கிடையாது. எல்லாப் பக்கமும் திறந்தே இருக்கும். களரியை வளைத்திருந்து மக்கள் கூத்தாட்டம் பார்ப்பர். இரவிரவாகக் கூத்து ஆடப்படுவதாற் சிலர் பாய் தலையணையுடன் வந்து சேருவர். இடையிடையே சிறு பாத்திரம் நடிக்கும் போது சிலர் வெளியே சென்று உணவு அருந்துவதும், படுத்துத் தூங்குவதுமுண்டு.

ஒவ்வொரு காலுக்கும் இடையில் ஒவ்வொரு வாளைக்குத்தி நாட்டித் தேங்காய்ப் பாதியை அதன்மேல் வைத்துத் தேங்காய் எண்ணெயில் நனைத்த சீலைத் திரணையைத் தேங்காய்ப் பாதியினுள் வைத்து விடியவிடிய எரியவைப்பர். அந்த ஒளியிலேயே கூத்து நடைபெறும். சில இடங்களில் இருவர் களரியிலே தீப்பந்தங்களோடு தோன்றி, நடிகர் ஆடும்போது அவருக்கு முன்னும் பின்னும் சென்று, தீப்பந்தம் பிடிப்பது வழக்கம். மக்கள் தரையில் வீற்றிருப்பதனாற் களரிக்குத் திரைச்சீலை கிடையாது. ஆனால் ஒவ்வொரு பாத்திரத்தின் வரவுக்கும் சீலை பிடிப்பார்கள். அதனை அவ்வூரைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்த இரு வண்ணூர் செய்வர். அது 'திரை பிடித்தல்' எனப்படும். உடுப்பு அணிந்தவரை உடுப்புப் போட்ட இடத்தி லிருந்து களரிக்கு அழைத்து வருகையில் முன்பு தீவட்டி பிடித்துக் கோலாகலமாகக் கொண்டுவருவர். திரையைப் பிடித்தவுடன் வரவுக்குரியவர் அதன் பின்னால் நிற்பர். அப்பொழுது அவரின் உறவினர் வெடி மத் தாப்பு முதலியன கொழுத்துவர்.

இந்தச் சந்தர்ப்பத்திற்றான் சால்வை கட்டுதல், மோதிரம் கொடுத்தல் முதலியன நடைபெறும் ஒவ்வொரு புது வரவுக்கும் திரைபிடித்து இவ்வாறு செய்வர். பின் கூத்து கதைக்கேற்ப நடைபெற்றுக்கொண்டு போகும். கூத்துப் பழக்கி நடத்துபவர் அண்ணாவியார் எனப்படுவர். இவரே பெரும் பாலும் மத்தளம் அடிப்பார். இவர் களரி யின் நடுவில் நின்று, பாத்திரங்கள் ஆடும் போது அவர்களின் பின்னாற் சென்று மத்த ளம் அடிப்பர். சல்லரிக்காரர், ஏடு படிப் போர், பக்கப்பாட்டுக்காரர் ஆகியோரும் அண்ணாவியாரோடு நடுவில் நிற்பர். இவர் எல்லோரையும் சபையோர் என்றழைப்பது மரபு. பாத்திரங்கள் ஒன்றுசேர்ந்து களரி யிலே தோன்றுவது கொலு எனப்படும். இராமன் கொலு, தருமன் கொலு என்ற பிரயோகங்கள் இதனை விளக்கும். பாத்தி ரத்தின் முதற்றோற்றம் வரவு எனப்படும்; அப்பொழுதுதான் வரவுப் பாட்டும் வரவு ஆட்டமும் இடம்பெறும்.

கூத்தில் இசை, ஆட்டம், உரையாடல் ஆகிய மூன்றும் இடம்பெறும். ஆயினும் பாட்டும் ஆட்டமும் முக்கியமானவை. கதைத் தொடர்ச்சிக்கும் விளக்கத்திற்குமே இடையிடையே உரையாடல் இடம் பெறு கின்றது. ஆட்டமே சந்தர்ப்பங்களையும் பாத்திரங்களின் பண்புகளையும் கதைப் போக்கினையும் விளக்குகின்றது. கூத்து ஆட் டத்தை அடித்தளமாகக் கொண்டது கூத்து ஆடினான், நாடகம் ஆடினான் என்றதொடர்ப் பிரயோகங்கள் கூத்திற்கும் ஆட்டத்திற்கு முள்ள தொடர்பைக் காட்டுகின்றன. மட் டக்களப்பு நாட்டுக்கூத்தில் இன்றும் ஆட் டம் முக்கிய இடம் வகிக்கின்றது. மத்தள அடிக்கும் சல்லரியின் இசைக்கும் ஏற்ப நடிகர் ஆடுவர். கூத்திற்கு மத்தளம் இன்றி யமையாதது. மத்தள அடியே பாத்திரங்க ளின் ஆட்ட மாற்றங்களையும், காட்சி மாற் றங்களையும், இடமாற்றங்களையும் குறிக்கின் றது. மத்தளம் இல்லாது கூத்தில்லை; அதே கூத்தின் உயிர்.

கூத்து முடிந்ததும் கூத்தாடிய அத் தனைபேரும் களரிக்கு வந்துநின்று சாமிமேற் பாட்டுப்பாடி ஆடுவர். அண்ணாவியார் வாழி சொல்லி முடித்தவுடன் தொடக் கும்பிடு தொட்டுக் கும்பிடு என்று மத்தளத்தில் அடித்து, வாயாற் சொல்லுவர் அதன்பின் ஊர்க்கோயிலுக்குச் சென்று பத்துப் பதி னைந்து நிமிடம் கூத்திலே வந்த சில காட்சி களை ஆடுவர். பின், ஊர்ப் பெரிய மனிதர் வீடுகளில் ஆடுவர்; தொடர்ந்து ஊர் முழு வதும் வீட்டுக்குவீடு ஆடுவர். இது வீட்டு க்கு வீடு ஆடுதல் எனப்படும்.

கூத்துப் பழகுவதுபற்றிய மரபும் கவ னிக்கத்தக்கது. அதிகமாக அருவிவெட்டு முடிந்தபின்பே கூத்து ஆரம்பமாகும். வேளாண்மை வெட்டி முடிந்ததும் ஆரம் பிக்கும். கூத்துக்கு ஆட்களைத் தெரிவது சட்டம் கொடுத்தல் எனப்படும். ஆட விரும்புபவர்களை அழைத்துப் பாடச் சொல்லி, குரலுக்குந் தோற்றத்திற்குமேற் பப் பாத்திரங்களை அமைப்பர். பாத்திரத் திற்குரிய பாடல்கள் ஓலையில் எழுதப்பட் டுப் பாத்திரத்திற்குரியவரின் கையில் ஊரிற் பெரியவர் ஒருவரால் கொடுக்கப்படும். தொடக்கத்தில் ஒவ்வொரு இரவும் 10மணி வரை கூத்துப் பழகுவர். 4, 5 மாதம் பழகியபின் சதங்கை அணிதல் நடைபெறும். இது ஒரு விழாவாகக் கொண்டாடப்படும். இவ்விழா பகலிலே நடைபெறும். முதன் முதலிலே சதங்கை அணியும் இவ்வைபவத் திற்கு ஏனைய கிராமங்களிலுள்ளவரையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைப்பர். காலே 7 மணி தொடக்கம் இரவு 7 மணி வரை இது நடைபெறும். இதன்பின் ஒரு தடவை பகலிற் சதங்கை அணிந்து ஆடுவர். இது கிழமைக் கூத்து எனப்படும்.

அரங்கேற்றத்திற்கு ஒரு கிழமைக்குமுன் உடுப்பு அணியாமல் முழுக் கூத்திஜேயும் இரவுமுழுவதும் ஆடுவர். இது அடுக்குப் பார்த்தல் எனப்படும். இவ்வளவும் நிகழ்ந்த பின்னர், குறிப்பிட்ட நன்னளில் அரங்கேற்றம் நடைபெறும். இது முதலாம் களரி எனப்படும். சில நாட்களுக்குப்பின் இரண்டாம் களரி இடம்பெறும். இரண்டாம் களரிக்குப்பின் ஊருக்குள் ஆடும் பழக்கம் இல்லை. கூத்து முடிந்ததும், மணமாகாதவர் மணம் முடித்தலுமுண்டு.

மட்டக்களப்புப் பகுதியில் வழங்கும் கூத்து தென் மோடிக்கூத்து, வடமோடிக் கூத்து, விலாசம் என மூவகைப்படும். இவற்றுள் இப்பொழுது தென்மோடி வடமோடிக் கூத்துக்களே பெருவழக்கிலுள்ளன தென் மோடிக்கும் வடமோடிக்கும் கதைப்போக்கு, இசை, ஆடல், உடை முதலியவற்றில் வேறுபாடு உண்டு. வடநாட்டுப் புராண இதிகாசக் கருத்துக்களைக் கொண்டவை வடமோடி நாடகங்கள். இராமநாடகம், தர்மபுத்திர நாடகம், பப்பிரவாக நாடகம், பதினெட்டாம் போர், கர்ணன் போர் போன்றவை ஈழத்தில் ஆடப்படும் வடமோடி நாடகங்கள். இவை போர்செய்து வெற்றிபெறுவதைக் கூறுவன. இவற்றில் கோபம், வீரம், அழுகை முதலிய சுவைகள் வினவிவரும். ஈழத்திலே நடிக்கப்படும் தென்மோடிக்கூத்துக்களில் பவளவல்லி நாடகம், அலங்கார ரூபன் நாடகம், வானபிமன் நாடகம், நொண்டி நாடகம் முதலியவற்றைக் குறிப்பிடலாம். இவை பெரும்பாலும் தமிழ்நாட்டுக் கதைகளைக் கூறுவனவாய், காதற்சுவை பயந்து, காதல் கைகூடுவதோடு முடிகின்றன. இவற்றில் நகை, வியப்பு போன்ற சுவைகளே பெரும்பாலும் வரும். மேலும் தென்மோடியிற் பழைய முறைப்படியே இசை அமைந்திருக்கும்.

ஆட்டத்திலும் பாட்டிலும் இருமோடிக்கும் வேறுபாடு உண்டு. தென்மோடி ஆட்டங்கள் வடமோடி ஆட்டங்களிலும் நுணுக்கமானவை, கடினமானவை. இதனுல் தென்மோடி நடிகர் வரவு ஆட்டம் ஆடியதும் களைத்துப்போவதனுல் வரவைக் குறிக்கும் பாட்டை அண்ணவியார் அல்லது பக்கப்பாட்டுக்காரர் பாடுவர். வடமோடிக் கூத்துக்கள் நுணுக்கமற்ற காரணத்தினுல் வரவு ஆட்டத்தின் பின்னர் தமது வரவுப் பாட்டை நடிகரே பாடுவர். தென்மோடியிற் பாட்டுக்களை இழுத்துப்பாட, வடமோடியிற் சாதாரணமாகப் பாடுவர். வசனங்களும் இவ்வாறே தென்மோடியில் இழுத்தும், வடமோடியிற் சாதாரணமாயும் சொல்லப்படும். வடமோடியில் நடிகர் ஒரு பாட்டைப் படிக்கப் பக்கப்பாட்டுக்காரர் தொடர்ந்து அதனை முழுதாகப் படிப்பர்; தென்மோடியிற் கடைசிப் பகுதியை மட்டும் பிற்பாட்டுக்காரர் தொடர்ந்து படித்துவிட்டுப் பாட்டு முழுவதற்குமுரிய தருவைப் பாடுவர். கூத்துப் பாட்டுக்களைப் பாடும் முறையை அமைத்துக்காட்டும் ஒருவிதச் சொற்கோப்பே தரு. இவ்வாறு தருப் பாடப்படும்போது, தருவின் தாளத்திற்கேற்ப நடிகர் ஆடுவர். தருப் பாடும் இவ்வழக்கம் தென்மோடிக்கேயுண்டு; வடமோடிக்கு இல்லை.

ஒவ்வொரு மோடிக் கூத்துக்கும் உடையும் வேறுவேருக அமையும். தென்மோடியார் உடல்வருந்த வளைந்து ஆடுவது வழக்கம்; எனவே அவர்களின் உடைகள் வடமோடியார் உடையிலும் பாரங்குறைந்தனவாய் இருக்கும். வடமோடி அரசருடைய முடி கெருடமாகவும், தென்மோடி அரசருடைய முடி பூ முடியாகவும் இருக்கும். கெருடத்தின் உச்சியில் ஒரு குடை இருக்கும். அதற்குச் சந்திர வட்டக்குடையென்று பெயர். வடமோடியில் வில்லும் அம்பும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்டாயுதமும் கட்டாரியும் ஆயுதங்களாக அமையும். தென்மோடியில் வாள் ஒன்றே ஆயுதமாகும். வடமோடியார் அணியும் உடுப்பு பெரும்பாலும் கரப்பு உடுப்பாகும். இது வில்லுடுப்பு எனவும்படும்.

ஒவ்வொரு பாத்திரத்தின் வரவு நடைபெறும்போது வெவ்வேறுவகையான தாளங்களை மத்தளத்தில் இசைப்பர். அத்தாளங்கள் வாயாற் சொல்லப்படும்போது பத வரிசைகள் தாளக்கட்டு எனப்படும். ஆட்டத்திற்குரிய தாளங்களைச் சொற்கோப்பினுலே தொடுத்து அல்லது கட்டி அமைத்தலே தாளக்கட்டு. தாளக்கட்டின் முதற் பகுதியை நடிகரின் வரவுத் தொடக்கத்திலே எட்டுமுறை முதற் பன்னிரண்டு முறைவரை அண்ணுவியார் திருப்பித் திருப்பிப் படிக்க, அதற்குரிய அபிநயம் காட்டி நடிகர் நடிப்பர். இத்தாளக்கட்டுகளுக்கு ஏற்ப ஆடும் ஆட்டங்கள் ஆண்களுக்கும் பெண்களுக்கும் வேறுனவை. ஆண்களுக்குரிய ஆட்டங்கள் உலா, பொடியடி, வீசாணம், எட்டுநாலடி, குத்துமிதி, பாய்ச்சல் முதலியன. தாளக்கட்டுக்கு ஏற்பப் பெண்கள் ஆடும் ஆட்டங்கள் ஒய்யாரம், பொடியடி, வீசாணம், எட்டு, தட்டடி, அடந்தை குந்துநிலை போன்றவையாகும். நடிகருடைய ஆட்டச் சிறப்பினைக் காட்டுவன தாளக்கட்டுக்கு ஏற்ப அவை ஆடும் ஆட்டங்கள். தாளக்கட்டு நாட்டுக் கூத்தின் அச்சாணியாகும்.

மன்னார்ப்பகுதியில் வழங்கும் கூத்துக்கள் மாதோட்டப் பாங்கு, யாழ்ப்பாணப் பாங்கு என இருவகைப்படும். மாதோட்டப் பாங்கைத் தென்பாங்கென்று தென் மெட்டென்றும், யாழ்ப்பாணப் பாங்கை வடபாங்கென்றும் வடமெட்டென்றும் வழங்குவதுண்டு. வடபாங்கிற் கடவுள் வாழ்த்து விருத்தப் பாவிலமைந்த தென்பாங்கில் வெண்பாவிலமையும். தென்பாங்கிற் பாத்திரங்களுக்குச் சபைத்தரு (ஆடல் தரு) கிடையாது. மேலும் தெய்வ வணக்கமும் செயற்படு பொருளும் கதைச் சுருக்கமும் கூறும் தோடையம் என்னும் பாவகை வடபாங்கிலேயுண்டு; தென்பாங்கிலேயில்லை. தென்பாங்கில் நாடகத்தை கனி இன்னிசை மற்றும் பாவகைகளாற் கூறப்படும். வடபாங்கிலே தரு, சிந்து, வண்ணம் முதலிய வற்றினுற் கூறப்படும். தென்பாங்கிற் பாக்கள் பெரும்பாலும் வல்லோசை உடையனவாகவும், வடபாங்கிற் பெரும்பாலும் மெல்லோசை உடையனவாகவும் அமையும்.

தென்பாங்கிற் பாத்திரங்கள் தத்தம் நிகழ்ச்சி முடியப் போய்வரும். ஒரு பாத்திரம் எத்தனைமுறையும் போய்வரலாம், ஒவ்வொரு வரவுக்கும் செலவுக்கும் தனித்தனி தருக்களும் சிந்துக்களும் அவற்றிற்குரிய ஆடல் முறைகளும் உண்டு. உதாரணமாக ஞானசவுந்தரி நாடகத்தில் தருமர் ஏழு தடவையும் பிலேந்திரன் பதினொரு தடவையும் தோன்றுவர். அங்கு ஒவ்வொருமுறை தோன்றும்போதும் தரு. சிந்து, ஆடல் முறைகள் உண்டு. வடபாங்கில் ஒவ்வொரு பாத்திரத்திற்கும் ஒரு வரவே உண்டு. பாத்திர நிகழ்ச்சி மீண்டும் இருந்தால் வரவில்லாமலும் ஆடல் தரு இல்லாமலும் கலந்து கொள்ளும்.

இந்நாடகங்களின் சுருக்கங்களாக அமைவன வாசகப் பாக்கள். வாசகப்பா என்ற சொல் வசனம் கலந்த பாட்டு எனப் பொருள்படும். ஒரே கதையை நாடகமாகவும் வாசகப்பாவாகவும் பாடுதல் உண்டு. உதாரணமாக அந்தோனியார் நாடகம், அந்தோனியார் வாசகப்பா, சந்தொம்மையார் நாடகம், சந்தொம்மையார் வாசகப்பா, மூன்றிராசாக்கள் நாடகம், மூன்றிராசாக்கள் வாசகப்பா எனக் கூத்து நூல்கள் உள்ளன.

மன்னார் கூத்துக்களில் மட்டக்களப்புக் கூத்துக்களைப்போல ஆடல் பிரதான இடம் பெறுவதில்லை. இடைக்காலத்தில் கூத்திலிருந்து ஆடல் விலகிச் சென்றமைக்கு இக் கூத்துக்கள் உதாரணங்களாகும். மன்னார்க் கூத்துக்கள் கத்தோலிக்க மதம் சார்ந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைக் கருக்களைக் கொண்டிருப்பது இதன் இன்னொரு தனித்துவமாகும். இடைக் காலத்தில் ஈழத்துக் கூத்து மரபு கிறித்த வர்கள் கைப்பட்டு வேறொரு நிலைக்குச் சென்றமையை இது காட்டுகின்றது. கிறித் தவர்கள் மக்களோடு தொடர்புடைய கூத் தையே தமது பிரசார ஊடகமாக அன்று கொண்டனர். இம்முயற்சி மன்னாரிற் செல் வாக்குப் பெற்றதனாலேயே மன்னார்க் கூத்து மரபிற் கிறித்தவம் சார்ந்த கதைகள் பிர தான இடம் பெற்றன.

யாழ்ப்பாணத்திலே தென்மோடி, வட மோடி மரபுகள் இருந்துள்ளன. வட்டுக் கோட்டை, உடுப்பிட்டி முதலிய இடங்களில் வழங்கும் கூத்துமரபு வடமோடிக்கு அண் மியதாக உள்ளது. யாழ்ப்பாணக் கரை யோரப் பகுதிகளில் ஆடப்படும் கூத்துக்கள் தென்மோடிச் சாயலுடையவை. இவை தான் மன்னார்ப் பகுதியில் யாழ்ப்பாணப் பாங்கு என்ற பெயருடன் சென்றவையாய் இருக்கக்கூடும். மன்னாரில் வழங்கும் யாழ்ப் பாணப் பாங்கு என அழைக்கப்படும் கூத்துக் களும் யாழ்ப்பாணக் கரையோரப் பகுதியில் ஆடப்படும் கூத்துக்களும் கதைப்பொருள், பாடல்வகைகள், நாடக அமைப்பு ஆகிய வற்றிற் காணப்படும் ஒற்றுமைகள் இதனை உறுதிப்படுத்துகின்றன. யாழ்ப்பாணத்தில் இன்றும் அத்தகைய கூத்துக்கள் விடியவிடிய ஆடப்படுகின்றன. இன்று இத்தகைய கூத் துக்கள் கிறித்தவர்கள் மத்தியிலே செல்வாக் குற்றிருப்பினும் முன்னர் இந்துக்கள் மத்தி யிலும் இக்கூத்துக்கள் செல்வாக்குப் பெற்றி ருந்தமைக்குச் சான்றுகள் உண்டு. வீரகுமா ரன் நாடகம், இராம நாடகம், அனுருத்திர நாடகம் என்பவற்றைச் சைவப்பெரியார் கள் எழுதியுள்ளனர். வட்டுக்கோட்டையில் இன்றும் ஆடப்படும் சடாகரன் வதையும் இம்மரபுக்கு உதாரணமாகும். எனினும் பாசி வழிநாடக மரபினாலும் ஆங்கிலக் கல்வி வருகையினாலும் இக்கூத்து மரபு யாழ்ப்பாணத்தில் வெகுகாலத்துக்கு முன் னரே அருகிவிட்டது.

தமிழ் பேசும் மக்கள் ஈழத்திலே பல நூற்றாண்டுகளாக பரம்பரை பரம்பரையாக வாழ்ந்துவந்த பகுதிகளுள் வடமேற்குப் பகுதியும் ஒன்றாகும். நீர்கொழும்பு தொடக் கம் புத்தளம் வரையிலுள்ள நிலப்பரப்பு பழங்காலத்திலே தமிழ் இந்துக்கள் வாழ்ந்த தாகத் திகழ்ந்தது. பண்டைக்காலத்தில் இந்நிலப்பகுதியில் தமிழ் முழங்கிக்கொண் டிருந்தது. மேன்மைகொள் சைவம் பொது மக்களின் மதமாக இருந்தது, காலக்கிர மத்தில் இப்பகுதியில் வாழும் மக்கள் தம் மதத்தையும் மொழியையும் மாற்றியமைத் துக் கொண்டபோதும் இன்றும் ஆங்காங்கு பல இடங்களிலே தனித் தமிழ்க் கிராமங் களையும் இந்துக் கிராமங்களையும் காணலாம்.

இப்பகுதியில் வாழ்ந்த தமிழ்ப் பேசும் மக்களின் வாழ்க்கையை உருப்படுத்தியது சிலாபத்திலுள்ள முன்னீஸ்வரம் என்ற கோயிலாகும். இக்கோயில் இராப்பூசை முடிந்த பின்னர் நாடகப்பூசை நடைபெற் றது. கோயில் முற்றத்திலே கூடியிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் முன்னிலையில் கூத்துக்கள் ஆடப்பட்டன. மருதங்குளத்தில் பாரதக் கதைப் படிப்பு, வசந்தன் அம்மா னைப் படிப்பு, நாட்டுக்கூத்துக்களாயின தொன்றுதொட்டு வழங்கிவந்தன. நாட்டுக் கூத்துக்களில் முக்கியமாக வானபிமன்நாட கமும், மார்க்கண்டன் நாடகமும் ஆண்டு தோறும் ஆடப்பட்டன. கோயில்களுக்கு அணித்தாயுள்ள வெளிப்புறங்களிலே களரி அமைத்துக் கூத்துக்கள் ஆடப்பட்டன. இப் பகுதிக் கூத்துக்களின் ஆட்டம் மட்டக் களப்பு, யாழ்ப்பாணம் போன்ற பிறபகுதி ஆட்டத்திலிருந்து சிறிது வேறுபாடுடைய தாகக் காணப்பட்டபோதும் பெரும்பாலும் ஏனைய பகுதி ஆட்டத்தை ஒத்திருக்கின்றது. இம்மரபு இன்று சிலாபப்பகுதியில் அருகி விட்டமை மனவருத்தத்திற்குரியது.

தமிழர் வாழும் வன்னிப்பிரதேசத்தில் முல்லைத்தீவுப் பகுதியிற் கூத்து மரபுகள் இன்றும் பேணப்படுகின்றன. யாழ்ப்பாணக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூத்து மரபு அங்கு பல இடங்களில் பரவி இருப்பினும் முல்லைத்தீவுக்குரிய கூத்து மரபினை அங்கு ஆடப்படும் கோவலன் கூத்திலேயே காணலாம். வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோயில் ஆண்டுப் பூசையில் இக் கோவலன் கூத்து ஆடப்படுகின்றது. தென்மோடிச் சாயலுடைய இக்கூத்து ஆட்ட முறையிலும், பாடல் அமைப்பிலும், உடை அமைப்பிலும் மட்டக்களப்புத் தென்மோடியை ஒத்தது, இக்கூத்தில் வரும் வஞ்சிப்பத்தனின் ஆட்டம் விறுவிறுப்பும் அழகும் உடையது. இவ்வாட்ட முறைகள் யாவும் அவசியம் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டியவை.

மலைநாட்டுத் தமிழரிடையே வழங்கும் கூத்துக்களிற் காமன் கூத்து, அருச்சுனன் தபசு என்பன குறிப்பிடத்தக்கவை காமன் கூத்து மலைநாட்டுத் தமிழர் மத்தியில் நடைபெறும் சமயச்சடங்கு சார்ந்த ஒரு கூத்தாகும். மன்மதனைச் சிவபெருமான் நெற்றிக் கண்ணாற் சுட்டெரிப்பதனையும், ரதி சிவனிடம் வரம் வேண்டுவதையும் இக்கூத்து உள்ளடக்கமாகக்கொண்டது. காமனுக்கும் ரதிக்கும் இருவர் வேடம்போட்டு அவர்களுக்குத் திருமணம் செய்வதுமுதல் காமன் அம்பு எய்வது, சிவன் அவனை எரிப்பது, பின்னர் காமனின் அஸ்தியைக் கரைப்பதூடாக, மறுநாள் சிவனைத் துதித்து வரம்வேண்டும் வரை இக்கூத்து நடைபெறும். சிவனை வணங்கி மக்கள் அவருக்குக் கற்பூர ஆலாத்தி எடுத்தலும் உண்டு. இங்கு ஊரே மேடையாகவும் பார்வையாளராகவும் அமைய இக்காமன் கூத்து நடைபெறும். மக்கள் ஒரேநேரத்தில் இந்நாடகத்தில் பார்வையாளராகவும் பங்காளராயும் கடமைபுரிவர்.

மலைநாட்டுத் தமிழர் மத்தியில் ஆடப்படும் இன்னொரு கூத்து அருச்சுனன் தபசு ஆகும். மட்டக்களப்புப் பகுதியில் ஆடப்படும் அருச்சுனன் தபசு நாடகத்துக்கும் இதற்கும் இடையே அளிக்கை முறையில் பலத்த வேறுபாடுகள் உண்டு. மட்டக்களப்பில் இக்கூத்து முழுக்க முழுக்கப் பொழுதுபோக்கிற்குரிய நாடகமாக அமைய, இங்கு அது சமயச்சடங்கோடிணைந்த ஒரு கூத்தாக நடைபெறுகிறது. இக்கூத்திலும் மக்கள் பார்வையாளராயும் பங்காளராயும் அமைவர். இவ்விரு கூத்துக்களும் ஆடலும் பாடலும் நிரம்பியவை இரு நாடகங்களிலும் வரும் சிவன் ஆட்டம் குறிப்பிடற்குரியது. இக்கூத்திற்குத் தப்பு என்ற மேளக்கருவி பாவிக்கப்படுகின்றது இம்மலைநாட்டுக் கூத்துக்களில் மக்கள் கொள்ளும் பங்கு இந்துக் கோயில்களில் நடைபெறும் சூரன் போரை நினைவூட்டுகின்றது.

மேற்கூறிய தகவல்களிலிருந்து தமிழர் வாழும் பிரதேசங்களிலெல்லாம் ஒரு கூத்து மரபு பண்டுதொட்டு இருந்துவந்ததென்பதை அறிகின்றோம். இக்கூத்துமரபு சிங்களவர் மத்தியிலும் செல்வாக்குற்று அவர்களின் நாடக மரபும் மலர உந்துசக்தியாக அமைந்தது. சிங்கள மக்களின் 'நாடகம' என்னும் நாடக வடிவத்திற்கு மூலஊற்றுக்கள் ஈழத் தமிழ்க் கூத்துக்களே. பேராசிரியர் சரச்சந்திரா தமிழ்க் கூத்துக்கள் சிங்கள 'நாடகம்' வளர உதவின என்று நன்றியோடு நினைவுகூருகிறார்.

மன்னாரில் வழங்கும் கூத்துக்களைப் பின்பற்றியே சிங்கள 'நாடகம' கூத்துக்கள் அமைந்திருக்கின்றன. அந்நாடகங்களின் நாடக அமைப்பும் பா வகைகளும் மன்னார்ப் பகுதிக் கூத்துக்கள் போன்றவையே. விருத்தம், இன்னிசை, கலிப்பா, கவி, கொச்சகம், வெண்பா, தோடையம் போன்றபாக்களும் பாவினங்களும் சிங்கள நாடகங்களிலும் அதே பெயர்களுடன் வழங்குகின்றன. தமிழிலே உள்ள எஸ்தாக்கியார் நாடகம், மூவிராசாக்கள் நாடகம், ஞானசவுந்தரி நாடகம் முதலியன எஸ்தாக்கியார், ராஜதுங்கட்டுவ, ஞானசவுந்தரி என்ற பெயர்களில், தமிழ் நாடகங்களின் மொழிபெயர்ப்புக்களாக அமைந்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய காலம் மாறிவரும் காலமாகும். அந்நியம் என்ற பெருவெள்ளத்திலுல் எமது கலை கலாச்சாரம் அடித்துச் செல்லப் பட்டுவிடுமோ என்ற ஐயப்பாட்டுடன் அறிஞரும் ஆர்வலரும் வாழும்காலம். இக் காலகட்டத்தில் எமது பாரம்பரியத்தின் வேர்களைத் தேடுவதும், அவற்றை வெளியே கொண்டுவருவதும், மக்கள் மத்தியிற் பரப்புவதும் அறிஞர் தம் கடமையாகும். நாது எதிர்காலச் சந்ததியினருக்கு நாம் நமது கலை மரபுகளைக் கையளிக்கவேண்டும். அப்படிக் கையளிக்கவேண்டிய மரபுகளுள் நமது கூத்து மரபும் ஒன்றாகும்.

The Folk Dramaiic Traditions of the Tamils of Sri Lanka

Sociological study of early communities in various parts of the world has clearly revealed the important part played by folkart in the social life of these communities. They served not merely a recreational or aesthetic purpose but were integrally related with all the aspects of social life and were a living and dynamic expression of the manifold sides of that life. They were not consciously or deliberately created by any person or persons to serve a specific purpose but grew out of the social life itself, changing and developing as the social life itself changed and evolved. All the important aspects of group life and its major occasions found communal expression through these folk arts and all its customs and manners and phadses of institional life were reflected in them. The folk arts of any any society thus serve as a mirror, clearly reflecting the dynamic aspects and living significance of that society and as such are of fundamental importance to the understanding of that society.

The Tamils of Sri Lanka have a rich heritage of folk arts, especially of folk drama. A study of the Sri Lankan Tamil folk theatre clearly reveals the part played by folk drama in the social life of the Tamils. This paper discuess in brief the folk traditions of the Tamils as found in the Batticaloa, Mannar, Jaffna Chilaw, Mullaitivu districts and in the hill country.

A comparative study of the Tamil folk traditions with the Sinhalese folk traditions reveals that the Tamils and Sinhalese possess a common heritage in Drama & Music. One of the Sinhalese dramatic traditions is certainly taken directly over from the Tamil folk tradition - this is what is called the Sinhalese Nadagama. The earliest Nadagamas were translated into Sinhalese from Tamil originals, though later works drew their themes from sources nearer home. The language of the early Nadagamas also shows considerable Tamil influence in fact their language is a peculiar mixture of Tamil and Sinhalese words. The verses are - in Tamil metres the common metres used being Viruttam, Innisai, Kalippa, Kochchakam, Venpa and Parani. Mostly all the melodies are of Tamil origin but the Sinhalese singers dropped the Tamil intonation and method of voice production when they sang them.

It is important that in a country like Sri Lanka which has undergone foreign domination for a number of centuries, we should try to rediscover over folk tradition, especially because there has been a general tendency to neglect the existing dramatic traditions.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு மக்கள் பழக்க வழக்கப் பண்பாடுகள்

வித்துவான் F. X. C. நடராசா

"பண்பெனப்படுதல் பாடறிந்து ஒழுகல்" என்று பண்புக்கு இலக்கணம் வகுத்துள்ளார்கள் ஆன்றோர்கள். மக்களின் நற்குண நற்செயல்களின் விளைவே பண்பாகும். இதனை இக்காலத்தினர் பண்பாடு என்பர். இது புதியதோர் திறமான சொல்லுருவம். இதனை உருவாக்கியவர் மறைந்த இரசிகமணி டி. கே. சிதம்பரநாத முதலியார்.

மக்களின் பழக்க வழக்கங்கள் முதிர்ச்சியடைய அவை மரபுகள் ஆகும். காலகதியில் வந்த மரபுகள் மக்கள் பண்பாடுகள் என்று அமையும்.

பரந்த உலகத்தில் வாழும் மக்கள் வேறு வேறு பண்பாடுகளை உடையவர்கள். காலதேச வேற்றுமைகளுக்கு அமையவும் சமயம், தொழில், சமூகம், கலைகள், சூழல் இவைகளுக்கு அமையவும் பழக்கவழக்கப் பண்பாடுகள் மாற்றமடையும். இந்த நியதிகளில் மட்டக்களப்பு மக்கள் பண்பாட்டினை ஆராய்தலே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

மட்டக்களப்புப் பிரதேசம் பொதுவாகக் கடல் மட்டத்திலிருந்து இருபது அடிகளுக்குமேல் உயர்ந்திருக்கின்றது. ஆகவே, தாழ்ந்த பிரதேசம் நெய்தல் நிலப்பாங்கையுடையது. வயல் வெளிகளும் நிறைய இருப்பதால் மருத நிலமுமாகும்.

நிலப்பாங்குகளுக்கு அமையச் சமூகங்களும் இரு பெரும் பிரிவில் அடங்குவர். கடற்றொழில் மக்கள், கமத்தொழில் மக்கள் நெய்தல் நிலமும் மருத நிலமும் அக்கம் பக்கமாக இருப்பதனால் மட்டக்களப்பு மக்கள் இருவகைத் தொழிலிலும் ஈடுபடுவர். ஆகவே, இரு சமூகங்களும் தம்முள் வேற்றுமை காட்டுவதில்லை. எல்லாவுயிர்க்கும் பிறப்பு ஒக்கும். செய்தொழில் வேற்றுமையால் சிறப்பு ஒவ்வாது. மட்டக்களப்பில் சிறப்பும் ஒக்கும்.

கடலோடிகளாகவும் நாடோடிகளாகவும் உலக மக்கள் பல்வேறு நாடுகளிற் கால் வைத்தனர். இங்கு மீன் பிடிக்கவும் வந்தனர்; பயிர் செய்யவும் வந்தனர். எனினும் சமூகத் தீவிரவாதிகளாக மாறினரல்லர்.

சமூகப் பண்பாடு

இவ்வண்ணம் பெருமைக்குரிய பாரம்பரியத்தில் வளர்ந்துவந்த மக்கள் சமூகங்களாகப் பிரிந்து வாழ்க்கை நடாத்தினர்கள். ஒருவருக்கொருவர் உதவி புரியும் வகையில் தொழில் அடிப்படையில் சாதிகள் பல தோன்றின. சாதிகளிலும் குலம், கோத்திரம், குடி, கத்தறை என்ற பிரிவுகளும் தோன்றலாயின.

மட்டக்களப்பு மக்கள் மத்தியில் வழங்கும் ஒவ்வோர் சாதி ஏழு, ஏழு குடிகள் தோன்றின. ஒவ்வோர் சாதிக்கும் ஏழு என்ற குடிவகை எவ்வண்ணம் தோன்றின என்று சொல்வதற்கு முடியவில்லை. கண்டியரசர் காலத்தில் வந்த இசுலாமியரும் ஏழு குடியினராகப் பிரிந்து கொண்டமை வியப்புக்குரியதாகும். ஒவ்வோர் குடியினர்க்கும் வேறு வேறு வரிசைகள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. இவ்வரிசை வகைகள்யாவும் பண்பாடுகளாக மாறி அமைந்துள்ளன.

சமயப் பண்பாடு

மட்டக்களப்பு மக்களின் சமயம் பொதுவாகச் சைவ சமயம் ஆகும். என்றாலும், கொக்கொட்டிச் சோலை தான்தோன்றீசுவரர் கோவில் ஒன்றே சிவன் கோவிலாகத் திகழ்கின்றது எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு கதிர்காமத்திற்கு அண்மையிலிருப்பதால் முருகன் கோயில்கள் இங்கு வெருகல் சித்திர வேலாயுதர் கோயில் தொடக்கம் திருக்கோயில் வரையும் பெரியனவும் சிறியனவுமாகச் சுப்பிரமணியசுவாமி கோயில்கள் பல இருக்கின்றன. இவற்றுட் சில சின்னக் கதிர்காமம் என்றும் பெயர் பெற்றுள்ளன.

அடுத்தபடியில் பிள்ளையார் கோவில்கள் இருக்கின்றன. மாமாங்கம் பிள்ளையார் கோவில் இலங்கைவாழ் சைவ மக்களின் மெய்யன்புக்குப் பாத்திரமாக அமைந்து கிடக்கின்றது.

சிறு தெய்வ வழிபாட்டிலேயே மக்கள் கவனஞ் செலுத்தி வருகிறார்கள். முதன்மையில் நிற்பது கண்ணகி வழிபாடாகும். ஊருக்கூர் கண்ணகி கோயில்கள் கட்டப்பட்டிருக்கும். திரு. சி. கணபதிபபிள்ளை அவர்கள் பதிப்பித்த "மகாமாரித்தேவி திவ்விய கரணி" என்ற நூலிலே தெய்வங்களின் பெயர்களையும் பத்திப் பாடல்களையும் பார்த்தல்கூடும்.

இவ்வகையில் வளர்ந்த சமயாசாரங்கள், அனுட்டானங்கள், சடங்குகள், நேர்த்திக் கடன்கள் இவையெல்லாஞ் சேர்ந்து மட்டக்களப்பு மக்களின் சமயப் பண்பாடுகளாக வேரூன்றின. சமயப் பண்புகளை உள்ளடக்கியும் சமூகப் பண்பாடுகளை நோக்கியும் மட்டக்களப்பு மான்மியம் என்ற நூலில் சமூகத் தெய்வங்களின் பெயர்கள் தரப்பட்டிருக்கின்றன.

உழவருக்குச் சிவனும்
முரசர்க்கு மாரியம்மன்
நழவருக்கு வயிரவனும்
நாடார்க்குக் கண்ணகையாம்
தொழவருக்குப் பிதுராம்
தொண்டருக்கு வேலவனும்
மழவருக்கு வீரபத்திரன்
மறையோர்க்கு நான்முகனே.
வேந்தருக்கு மாலாம்
வேடருக்குக் கன்னிகளாம்
ஏந்துபணி செய்வோர்க்குக்
காளியாம் தேந்துவைக்கின்
முட்டன் முடுவன்
முனிவரெவ ரார்வரினும்
பட்டமது கட்டிவைத்தான்
பாண்டிய மன்னன்.

இப்பாடல்கள்மூலம் சமூகங்கள் வழிபடுங் குல தெய்வங்கள் குறிக்கப்பெற்றிருப்பதைக் காண்டல் கூடும்.

தொழிற்பண்பாடுகள்

மட்டக்களப்பு மக்களின் தொழில்கள் இருபெரும் பிரிவுகளில் அடங்கும். ஒன்று கடற்றொழில்; மற்றையது கமத்தொழில். இவ்வகைத் தொழில் புரிவோர்க்கு உதவியாக மற்று தொழிலாளர் வந்து சேருவர். கடற்றொழிலுக்குரிய பழக்கவழக்கங்கள் இருக்குமாறில்லை. கமத்தொழிலுக்கு ஏற்பட்ட பண்பாடுகள் பல.

உழும்பொழுது, விதைக்கும்போது, வெட்டுதல், சூடு போடுதல் இவற்றிற்கான பண்பாட்டு முறைகள் நிறைய உண்டு. நெற்சாகுபடியில் மும்மாரி, கால வேளாமை, ஏற்றுலை, முற்றெட்டு, போடியார், முல்லைக்காரன், பொருத்தனை, குடிக்கணக்கு, வரிக்காவன், கணக்கன், பொலி முதலாம் சொற்கள் பண்பாட்டு வழக்குடையன.

சூடு போடுதலுக்குரிய நாள்களைக் கவனித்துப் பார்த்துச் சூடு மிதிப்பர். நாள்களுக்குரிய பாடல் வருமாறு:

இருபதி லொன்று காரி
இரவுக்குப் பத்திலொன்று
வருமதி எட்டிலொன்று
மங்கைசேய் ஏழிலொன்று
கருபுதன் நாலிலொன்று
களம்பெறு தானி எட்டே
குருபுகர் இரண்டை நீக்கிக்
கொள்ளுமாங் கூளித்தானே.

இப்பாடல் மட்டக்களப்பு நாட்டில் வழங்கும் சாதாரண பாடல். வயல் வேலையோடு சம்பந்தப்பட்டவர்கள் நாவில் விளையாடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும் பாடல் எனினும் கி. பி. 1310 அள விற் பாடப்பட்ட " சரசோதி மாலை" என்ற நூலிற் சொல்லப்பட்ட பாடலின் இன்னோர் பிறப்பு எனலாம். சரசோதி மாலைப் பாடல் வருமாறு :

இரவியிற் பத்திஞென்று
இந்து பன்ஞென்றி ஞென்று
வருபுதன் மூன்றிஞென்று
மண்மகற் கெட்டிஞென்று
இருபதின் ஒன்று காரிக்கு
இயல்புடைக் கூலிகொள்ளும்
குருபுகர் இரண்டு நன்ருங்
கொழுஞ்சூடு மிதிப்பதற்கே.

இரவி — ஞாயிறு மண்மகன் செவ்வாய்
இந்து — திங்கள் காரி — சனி
குரு — வெள்ளி புகர் — வியாழன்.

ஆகவே, வியாழன், வெள்ளிக் கிழமை களில் சூடு போடுதல் நலமாகும் என்பது பண்பட்ட செயலாகும் என்பது புலப்படு கின்றது.

கலைப் பண்பாடுகள்

நாட்டுப்புற மக்கள் தங்கள் வாழ்க்கை யில் அனுபவித்துவரும் அல்லது அனுசரித்து வருகின்ற சுகந்தரு கலைகளைப் பொதுவாக நாட்டுக் கலைகள் அல்லது நாட்டுப் புறக்கலை கள் என்பர். நாட்டுப் பாடல், நாட்டுக் கூத்து, நொடிகள், மகிடி விளையாட்டு, உவ கதைகள், மந்திரம், தந்திரம், வைத்தியம், வீடுகட்டல், சமயக் கலைகள் இவையெல் லாம் ஒரு பண்பட்ட முறையில் நடைபெறு கின்றன. எனவே இவைகள் நற்கலைகளாக மாற அவை மக்களின் பண்பாடுகளாகின் றன.

நாட்டுப் பாடல்களுக்கு இக்காலத்தில் பெருமதிப்பு. நாட்டுப் பாடல்களே பல வித இலக்கியங்களுக்கும் ஆதாரமாக இருந் தன என்பது ஒப்புக்கொள்ளப் பட்டதே. சங்க இலக்கியமெனப்படும் எட்டுத் தொ கைப் பாடல்கள் நாட்டுப் பாடல்களை ஒத் தவை என்பர். ஆனுல் இவற்றை நாட்டுப் பாடல் என்று அழைப்பதில்லை. ஏனெனில் அவற்றைப் பாடின புலவர்களின் பெயர்கள் தெரிந்தபடியால் என்க.

மட்டக்களப்பு மக்கள் ஆண் பெண் பலார் இருவரும் கவிகள்பாட வல்லார். வாதுகவியும் பாடுந்திறமை உடையவர்கள். இயற்றமிழ்ப் பாடல்கள் அன்றி இசைத் தமிழ், நாடகத் தமிழ்ப் பாடல்களும் பாட வல்லார்.

கிராமந்தோறும் ஆடப்படும் நாட்டுக் கூத்துகளுக்குரிய இசைப் பாடல்களை ஆக் கும் வன்மை இக்காலத்திலும் பரக்கக் காணலாம். மட்டக்களப்பு மாநிலத்தில் ஆடப்படும் நாட்டுக்கூத்து வேறு; இலங்கை யின் வேறிடங்களில் ஆடப்படும் நாடகங் கள் வேறு. தென்மோடி வடமோடி என்ற இருபெரும் பிரிவில் நாட்டுக்கூத்து நடை பெறும். காலிற் சதங்கை கட்டித் தாளத் திற்கிசையக் குதித்தும் மிதித்தும் ஆடப் படும் கூத்தே நாட்டுக்கூத்தாகும். ஆர்மோ னியம், மிருதங்கம் இவை நாட்டுக்கூத்திற் பயிலா. மத்தளமும் தாளமும் பயிலும்.

யாழ்ப்பாணத்தில் ஆரமோனியம் பயன் படுத்தப் படுகின்றது ; மிருதங்கம் வாசிக் கப் படுகின்றது. இவை நாடகப் பாங்கிற் குரியவை. நாட்டுக்கூத்துக்குப் பயன்படுத் தப்படும் மத்தளம் அடிக்கப்படும். காத தூரம்வரை முழங்கும்.

சிறு பிள்ளைகளும் ஒருவரை ஒருவர் நொடிசொல்லி மடக்குவர். பாரம்பரிய நொடிகள் வழக்கிலுள்ளன.

எட்டுக் காலூன்றி
இருகால் படமெடுத்து
வட்டக் குடைபிடித்து
வாருராம் வன்னியனுர்.

நண்டினை வன்னியனுராக உருவகப்படுத்தி யுள்ளார். வன்னியனுர் என்ற சொற்பிர யோகம் யாழ்ப்பாணத்திற் குரியதன்று.

பாட்டி வாயில் உவமைகள் தாண் டவமாடும். கிராமத்துக்குக் கிராமம் வேறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படும் உவகதைகள் இங்கு அநேகம். அடிப் படையில் மாறுபடாது வேறு கண், மூக்கு, காது வைத்து விரித்துரைக்கப்படும். மட் டக்களப்புக் கலாசாரப் பேரவை அண்மை யில் பதினேழு கதைகள் பொதிந்த உபகதை நூலொன்றினை வெளியிட்டுள்ளது.

மகிடிக் கூத்து, மகிடி விளையாட்டு என் ற பெயர்களில் புத்தாண்டு நாட்களில் சாகச விளையாட்டாக ஆடப்படும். தந்திரத்தால் மறைத்துவைத்த பொருளை மந்திரத்தால் வரவழைக்கும் ஒருவகைப் பொழுதுபோக் காகும். இஃதோர் அதிசய விளையாட்டாகும்.

பிணிகளை நீக்கவும் மந்திர வித்தையைப் பயன்படுத்துவர். வாகடங்களையும் நடை முறைப் படுத்துவர். நல்ல மூலிகைகள் நாட்டிலும் காட்டிலும் நிறைய வளர்கின் றன.

இரண்டு அறை வீடும் மண்டபமுஞ் சொண்டது வீடென்ற முறைமை நிறைய அனுசரிக்கப்படும். வீட்டுக்குரிய கிணறு இலத்தின் முன் கட்டப்பட்டிருக்கும். மனை யடி சாத்திரம் என்றநூல் வீடுகட்டும்போது பெரிதும் அவதானிக்கப்படும்.

பண்பாட்டுக் கலைகளில் பெரிதும் மக்க ளைக் கவர்ந்தவை சமயக் கலைகளாகும். சம யக் கலைகளாகிய காவடியாட்டம், கரகம், கோலாட்டம், வசந்தன, கொம்பு முறித் தல், குரவை கட்டுச் சொல்லல் இவை அதி முக்கியம் பெற்றவை.

அண்ணாமலையார் பாடிய காவடிச் சிந்து இருப்பினும், மட்டக்களப்பு மக்கள் தாங் கள் இயற்றிய காவடிப் பாடல்களைப் பாடி மகிழ்வர். தெய்வத்தை உருப்போட்டு ஆட வைக்கும் மந்திரங்களையும் உச்சாடணம் பண்ணுவர். காவடியாட்டம் பரவசமூட் டும் பத்திநெறி என்பதைப் புலப்படுத்துவ தாய் அமையும்.

பரவலாக நோய் ஏற்படும் காலத்தில் பாலரும், இளைஞரும், மடந்தையரும் கரக மாடிக் கோவில்களுக்குச் செல்வர். பலவித கரக ஆட்டங்களும் பாடல்களும் எல்லார் நாவிலும் கைவரப்பெற்ற பொருளாகும்.

கோவில் விழாக்கள் நடைபெறும்போது கோலாட்டம் வசந்தன் ஆடப்படும். வசந்த காலத்தில் மன்மதன்பேரில் ஆடப்படுதலை வசந்தன் என்பர். தொழில் சம்பந்தமான வசந்தனும் உண்டு. வசந்தன் கவிகளைத் திரட்டி முகாந்திரம் சதாசிவ ஐயர் நூலாக் கியுள்ளார் என்பது நினைவுகூரத்தக்கது.

கண்ணகை வழிபாட்டுடன் இணைந்ததே கொம்பு முறித்தல். இது சிங்கள மக்கள் மத் தியிலும் வழக்கிலுண்டு. வடசேரி தென் சேரி என்ற குலமுறையில் மக்கள் இருபகுதி யினராகப் பிரிந்துநின்று கொம்புமுறித்துக் கண்ணகைக்கு விழா எடுப்பர். இது இக்கா லத்தில் அற்றுப் போகும் நிலையை அடைந் திருக்கிறது.

பெண்கள் விழாக்காலங்களிலும் கலி யாண வைபவங்களிலும் குரவை வைப்பர். சங்க இலக்கியங்களில் குரவைக் கூத்து சொல்லப்பட்டிருக்கிறது. மலையாள நாட் டில் நிறைய உண்டு.

கோவில்களில் கட்டுச்சொல்லும் வழக் கம் உண்டு. நினைத்த காரியம் சொல்லல் என்பது இதன் பொருள். தெய்வம் ஆடி வருங்காலத்தில் நிகழ்வனவற்றைக் கடவுள் பேரால் இயம்பும் தொழிலைச் செய்பவர் கட்டாடியார் என்று வழங்குவர். இக் கலை வீடுகளிலும் பயிலப்பட்டு வருகிறது.

இன்னும் மட்டக்களப்பு மாநிலத்தில் சமூகமாக இயங்கும் பிறப்பு, இறப்பு, புத்தி யறிதல், மணவினை போன்ற காலங்களிலே அவதானிக்கப்படும் சடங்குகள், பண்பாடு கள் பல அனுசரிக்கப்பட்டு வருகின்றன. இந்தச் சடங்குகளும் பண்பாட்டு நெறியா னவை. மட்டக்களப்பு மாநில மக்கள் மத் தியிற் காணப்படும் பண்பாடுகள் ஒருவாற் றுன் கூறமுடிக்கலாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்துக் கண்ணகி

— மட்டக்களப்பு வி. சீ. கந்தையா —

கண்ணகி, தமிழரசு மூன்றும் கண்ட பெருமையள் என்று சிலப்பதிகாரம் கூறும். கண்ணகி பிறந்து தெய்வநிலை சான்ற தமிழ்த் திருநாட்டிலே அவள் பெயர் நிலை பெற்றுள்ள சிலப்பதிகாரம் என்னும் கலைக் கோயிலைத் தவிர்ந்த வேறு கோயில்கள் இல்லை என்றே சொல்லலாம். ஈழ மண்டலமாகிய இலங்கையிலோ எனில், கண்ணகி கோயில்கள் மிகப் பல விளங்கக் காணுகின்றோம். தமிழ் மணமோ, கண்ணகி வரலாறோ சற்றும் அறியாத சிங்கள மக்களும் கூட அவளை வழிபடுகின்ற பெருஞ்சிறப்பு ஈழ நாட்டிலே கண்ணகிக்கு உள்ளதாகும்.

சிங்கள மக்களிடை வழங்கும் ''பத்தினித் தெய்யோ'' வழிபாடு தான் ஈழத்திலுள்ள மிகப் பழமையான கண்ணகி வழிபாடு என்று தெரிகிறது. கண்ணகி தேவியின் உண்மை வரலாற்றைச் சிங்கள மக்கள் அறியாராயினும், இந்தியாவிலிருந்தே பத்தினித் தெய்வ வழிபாடு கொண்டு வரப்பட்டதென்பதை ''இராசாவளி'' என்னும் நூலினால் நன்கு அறிவார்கள். சிங்கள மக்களிடையே பரம்பரை பரம்பரையாகக் கேட்கப் பட்டுவந்த பத்தினித் தெய்வத்தின் ஈழநாட்டு வருகை கி. பி 16 ஆம் நூற்றாண்டில் எழுந்ததாகக் கருதப்படும் இந் நூலிலே தான் முதல் முதல் எழுத்துருவில் பொறிக்கப் பட்டுள்ளது.

சிலப்பதிகார வஞ்சிக் காண்டத்திலே பத்தினித் தெய்வத்துக்குச் சேரன் செங்குட்டுவன் கோயிலெடுத்த வரலாற்றினை இளங்கோவடிகள் கூறியிருக்கின்றார். சிங்கள நாட்டுக் கயவாகு மன்னனும் மற்றைய அரசரும் தமிழ் இலக்கியத்தில் இடம் பெறுகின்ற சூழ்நிலை அங்கு ஏற்படுகின்றது.

''வலமுறை மும்முறை வந்தனன் வணங்கி
உலக மன்னவன் நின்றோன் முன்னர்
அருஞ்சிறை நீங்கிய ஆரிய மன்னரும்
பெருஞ் சிறைக் கோட்டம் பிரிந்த மன்னரும்
குடகக் கொங்கரும் மாளுவ வேந்தரும்
கடல் சூழிலங்கைக் கயவாகு வேந்தனும்
எந் நாட்டாங்கண் இமய வரம்பன் இந்
நன்னாட் செய்த நாளணி வேள்வியில்
வந்தீ கென்றே வணங்கினர் வேண்டத்
தந்தேன் வரமென்றெழுந்த தொரு
குரல்'' என்பது சிலம்பு.

இதிற் கூறப்பெற்ற கயவாகு வேந்தன் அநுராதபுரியைத் தலைநகராகக் கொண்டு கி. பி 2ம் நூற்றாண்டிலே இலங்கையை ஆட்சி செய்தவனென்றும், தமிழகத்தில் கண்ணகி கதை நடந்த காலத்திலேயே ஈழத்துக்கு அவள் வழிபாடு இவனால் கொண்டு வரப்பட்டதென்றும் தெரிய வருகிறது. இம் மன்னன் இலங்கைக்கு மீண்டகாலை 'சம்பு கோளா' எனப்படும் சம்புத் துறைமுகம் வழியாக வந்தனன் என்பது வரலாறு. இத்துறை யாழ்ப்பாணத்தில் மாதகலுக்குக் கிட்டவுள்ள 'திருவடிநிலை' என்பதேயாகும் என்றும் அரசன் தான் இறங்கிய இடத்துக்கு அருகிலிருந்த 'அங்கணாமைக்கடவை' என்னும் இடத்திலே ஒரு கண்ணகி கோயிலைமுதலில் கட்டினானென்றும் அறிகின்றோம். பத்தினி வழிபாடு பற்றி ஈழத்திலே எழுந்த பழமையான கோயில் இதுவேயாகும், என்று இலங்கைப் பல்கலைக்கழகத்துத் தமிழ்ப் பேராசிரியராகிய கலாநிதி க. கணபதிப் பிள்ளை அவர்களும் கூறுகின்றனர். அங்கணாமைக்கடவை, பழமையும் பெருமையும் உள்ள ஒரு கண்ணகி தலமாகும் என்பதற்கு மட்டக்களப்பிலே வழங்கும் 'உடுகுச் சிந்து, என்னுந் நூற் குறிப்புகளும் பயன்படுகின்றன,

ஈழம் புகுந்த கண்ணகி வழிபாடு சிங்கள அரசனால் முதலிலே தலைநகரமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுராதபுரத்தில் நிறுவப் பெற்றது. மன்னவன் இத் தெய்வத்துக்கு ஆடிமாதம் தோறும் விழாவெடுக்க இசைந்து வந்தன னென்று சிலப்பதிகார உரைபெறு கட்டுரை கூறும். கயபாகு வேந்தன் காலத்திலிருந்து ஆடி (எசலா) மாதப் பூரணை தோறும் பெரஹரா என்ற பெயரிலே பத்தினித் தெய்வத்துக்கான திருவிழாவும் தவருது நடத்தப் பெறலாயிற்று. 'பெரஹரா' என்ற சிங்களச் சொல் 'பிராஹாரம்' என்ற சங்கதச் சொல்லின் திரிபுடையது, ஊர்வலமாக வரும் திருவிழாவென நாம் இதன் பொருளைத் தமிழிற் கொள்ளலாகும். பத்தினி விழாவாக விருந்தபோது இந்த ஊர்வலத்திலே "நாத தெய்யோ" (சிவன்) "விட்டுணு தெய்யோ" (கண்ணன்) "கதிர்காமத் தெய்யோ" (முருகன்) என்ற தெய்வங்களும் இடம்பெற்றன. சிங்கள மக்கள் எல்லோரும் மிகுந்த பக்தி செய்யும் விழாவாக இது நடந்தது. சிங்கள மன்னர்கள் தம் தலைநகர்களிலெல்லாம் காலந்தோறும் பெரஹராவை இடம் பெறச் செய்தனர். இற்றைக்கு இருநூறு ஆண்டுகளின் முன்னர் சீய நாட்டிலிருந்து இலங்கைக்கு வந்த புத்த பிக்குகள் சிலருடைய விருப்பப்படி புத்தர் பிரானின், புனித தந்தப் பேழையும் கண்டி நகரில் நடந்து வந்த இப் பெரஹராவிலே இடம் பெறலாயிற்று. சுமார் இரண்டாயிர வருடப் பழமை வாய்ந்த பத்தினித் தெய்வ ஊர்வல விழாவில் காலப் போக்கிலே புத்தரின் புனித தந்தத்துக்கே முதலிடம் சிங்கள மக்களால் அளிக்கப்பட்டுவிட்டது. எனினும், சிங்கள மக்கள் தம் வழிபாட்டு நிலையங்களுக்கு அருகிலெல்லாம் 'பத்தினித் தெய்யோ' வனுக்கும் கோயில் அமைத்து வைக்கத் தவறியது இல்லை. சிங்கள மன்னனால் ஈழம் சேர்ந்த கணணகி வழிபாடு மட்டககளப்பில் இடம்பெற்றவழிபற்றிய திட்டமானகுறிப்புகள நயக்குக்கிடைக்கவில்லையாயினும் அனுராதபுரத்திலிருந்து முல்லைத்தீவைச சேர்ந்த வற்றாப்பழைக்கும்,அங்கிருந்து கடல்வழியாக மட்டக்களப்புக்கும் இது கொண்டுவரப்பட்டிருக்கிறது எனப் பலர் கூறக் கேட்டுள்ளோம்.

மட்டக்களப்பிலேயுள்ள இருபத்தைந்துக்கும் அதிகமான ஊர்களில் கண்ணகையம்மன் கோவில்கள் விளங்குகின்றன. இவற்றுள் எந்த ஊரிலே கண்ணகை முதலில் எழுந்தருளினள் என்பதும் இலகுவிற் கூறமுடியவில்லை. கோயில் உள்ள ஊர்களிலெல்லாம் அங்கங்கே கண்ணகியம்மன் குடிபுகுந்தது பற்றிய பழமையான வரலாறுகள் பல கேட்கப்படுகின்றன. வீரமுனை, காரைதீவு, தம்பிலுவில் என்ற இடங்களிற்கிடைக்கும் சில சான்றுகளால் கண்ணகி அங்கிருந்தே வேறு இடங்களுக்குப் போயிருக்கிறள் எனத் தெரிகிறது. எனினும், மட்டக்களப்பிலே கண்ணகி வழிபாடு இடம் பெற்ற ஊர்களின் வரன் முறையானது மேலும் சான்று கொண்டு நன்கு ஆராய்ந்து நிறுவப்பட வேண்டிய ஒன்றுகவே உள்ளது. உடுகூச் சிந்தின் பாடலில்

> "பட்டி நகர் தம்பிலுவில் காரைநகர்
> வீரமுனை பவிசு பெறு கல்முனை, கல்
> லாறு மகிழூர் நெவில் செட்டிபாளையம்
> புதுக்குடியிருப்பு செல்வ முதலைக்குடா,
> கொக்கட்டிச்சேலை,
> அட்ட திக்கும் புகழு வந்தாறு மூலை
> அன்பான சிற்றுண்டி நகரதனில் உறை
> யும் வட்டிவப் பூங்குழல் மண்
> முனைக் கண்ணகையை மனதினில்
> நினைக்க வினைமாறுபோடிடுமே"

என்று கண்ணகி கோயில் கண்ட ஊர்கள் சில மட்டக்களப்பின் தென் கோடியிலிருந்து வரிசைபெற்றிருக்கக்காண்கின்றேம். துறைநீலவாணை, களுவாஞ்சிக்குடி, களுதாவளை, ஆரப்பற்றை, தாண்டவன் வெளி, கோறுவெளி முதலான ஊர்களும் கண்ணகை அம்மன் அங்கங்கே குடிகொண்டமை பற்றி வேறு வேறு பழமையான ஒவ்வொரு வரலாறு கொண்டிருக்கின்றன. மட்டக்களப்பெங்கும் இவ்வாறு நிறைந்துள்ள கண்ணகி கோயல்களிலே வருடந்தோறும் வைகாசி மாத வளர்மதி நாட்களில் மட்டுமே பூசனை நடத்தப் பெறும். பூசனைக்கான விழாக்களைச் சடங்கு என்றழைததலே மட்டக்களப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்கமாகும். 'வசந்தன் கூத்து' என்னும் ஆடல்களும் கண்ணகி விழாவின் தொடர்பாக இங்கே சிறப்புற நடப்பதுண்டு. இந்நூலையும் இனிமை நிறைந்த பாடல்களின் சிறப்புகளையும் பற்றியும் தனியாக வைத்து இன்புறத்தக்கன. இந்தச் சந்தர்ப்பத்தில் ஈழநாட்டின் கலைக்குழுவில் தலைசிறந்த அறிஞராக விபுலானந்த அடிகள் மட்டக்களப்பு காரைதீவில் தோன்றினார். அன்னார் "உடுக்குச் சிந்து" என்னும் மறுபெயர் கொண்ட ஊர் சுற்றுக் காவியம் முதலான கண்ணகி வழிபாடு பற்றிய கலையம்சங்கள் பலவற்றையும் உன்னிப்பாகக் கவனித்தார். அடிகளார் கண்ணகிமீது கொண்ட மதிப்பும், பற்றும் காரணமாக தம்முடைய தங்கைக்கு ஒரு பெண்குழந்தை பிறந்தபோது அதற்கு கண்ணம்மை என்று பெயரிட்டு, வாழ்த்தி மகிழ்ந்தார். அத்தகைய பெரியவர் சுவாமி விபுலாநந்தர்.

வடக்கிலுள்ளோர் கண்ணகி அருக சமயத்தைச் சார்ந்தவள் ஆதலால், அவள் பெயரால் வட இலங்கையில் எழுப்பப்பட்ட கண்ணகி கோயில்களை அழித்து ராஜராஜேஸ்வரி என்னும் பெயரால் சைவக் கோயில்களாக்கிவர விபுலாநந்த அடிகளார் மட்டக்களப்பில் கிராமந் தோறும் கண்ணகி பெயரால் சைவக் கோயில்கள் பல செழித்து ஓங்க வழிவகை செய்தார். இக் கோயில் தோறும் கண்ணகி வழக்குரை படித்தல், கொம்பு விளையாட்டுக் கொண்டாடுதல் அவ் விளையாட்டுக்கள் தோறும் படிக்கப்படும் "வாழைக்காயன் வடசேரியான்" என்றும், "பால்போல் நிலவெறிக்கப், படலை திறந்தவன் ஆர்தோழி, நான் தாண்டி தென் சேரியான், உனக்கு நாழிப் பணம் கொண்டுலாவுறண்டி" என்னும் வரும் வடசேரி, தென்சேரிப் பாடல்களை அறிவுறுத்தி வைத்தவர் அடிகளார். இந்தக் கோயில்களில் நடைபெறும் தமிழ்க் குரவை பெயர் போனது. இதனை அறிவுறுத்தினவர் அடிகளார். வசந்தன் ஆடல் என்னும் விளையாட்டு கண்ணகி கோயில்களில் பரவலாக நடைபெறுகிறது. இத்தகைய கண்ணகி விழாவிற்கும் அதனோடு அமைந்த மட்டுநகர் இலக்கியங்களுக்கும் உள்ளுணர்வும் ஊட்டி, உயிர் உறுத்தி, கலை துளும்பச் செய்தவர் அடிகளார். இத்தகைய அடிகளார் பெருமையை இதனோடு சேர்த்து தனியாக ஆராய்தல் மிகுதியும் வேண்டுவது.

இவை போக ஈழநாட்டிற்கு கண்ணகி வழிபாடு வந்த காலத்திலேயே யாழ்ப்பாணத்திலும் கண்ணகிக்கான பல கோயில்கள் அமைக்கப்பட்டன என்று தெரிய வருகிறது. ஆனால், சைவம் தொழிக்கும் அத்திருநாட்டிலே கண்ணகி சைவத் தொடர்புடையவளல்லள் என்று கருதப் பெற்றதனாற் போலும் சைவம் பரப்புவோர் சிலரின் முயற்சியால் கண்ணகி கோயில்கள் பல இராஜராஜேஸ்வரி அம்மன் கோயில்களாக மாற்றப்பட்டு விட்டன என்று முன்பு கண்டோம். இலங்கை அரசாங்கத்துப் பழைய மந்திரியும், தமிழறிஞருமான திரு. சு. நடேசபிள்ளை அவர்களும் இது பற்றிய தமது ஆராய்ச்சியில் இவ்வாறே கூறுகின்றனர். ஆயினும், கண்ணகி பெயரால் வழங்கும் ஒரு சில கோயில்கள் இன்றும் அங்கே இருக்கின்றன. முல்லைத்தீவைச் சேர்ந்த வற்றாப் பழையில் இருக்கும் கண்ணகை அம்மன் கோயில் வட இலங்கையிலே மிகப் பிரசித்தி பெற்றுள்ள ஒன்றாகும். வைகாசி மாதப் பூரணையினை அண்டிய திங்கட்கிழமையன்று அக் கோயிலில் நடக்கும் பொங்கலுக்கு யாழ்ப்பாணத்திலும்,திருகோண மலையிலுமிருந்து பெருந்திரளாக மக்கள் ஒன்று கூடுதல் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். வற்றாப்பழையம்மன் கோயிலுக்கும், பட்டக்களப்புக் காரைதீவிலுள்ள கண்ணகியம்மன் கோயிலுக்கும் நெருங்கிய தொடர்பிருந்ததாக மட்டக்களப்பில் வழங்கும் கதைகளிற் சொல்லப்படுகிறது. மட்டக்களப்பிற் கிடைத்த கண்ணகி சிலையொன்று கடல் கடந்து லண்டன் சென்று உலகப் புகழீட்டியுள்ளதாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிகிறோம். 'இந்திய, இந்தோனேசியக் கலை வரலாறு' (History of Indian and Indonesian Art-by Dr. K. Aannda Kumaraswamy-page 167) என்னும் நூலிலே கலாயோகி ஆனந்தக் குமாரசுவாமியவர்கள் பிரிட்டிஷாரின் 'மியூசிய'த்தில் இருக்கும் இந்த அற்புதமான கண்ணகி சிலையின் சிறப்பினை வியந்து எழுதியுள்ளார்கள். இது திருகோணமலைக்கும் மட்டக்களப்புச்கும் இடையிலுள்ள ஓரிடத்தில் அகப்பட்டிருக்க வேண்டுமென்பது அவர் கருத்து. பஞ்சலோகத்தினுற் செய்யப்பட்ட இச் சிலைதான் கலையறிஞர் இன்று கண்டு மகிழ்தற்குரிய கண்ணகியின் ஒரு முழுச் சிலையாக விளங்குகிறது. இலங்கையிற் பிரிட்டிஷாரின் ஆட்சிக்கால முதற்பகுதியில் சுமார் (1730 இல்) ஒரு கண்ணகி சிலை மட்டக்களப்புக் குளக்கட்டு ஒன்றில் நின்ற ஒரு புளியமரத்தின் கீழ் அவர்களால் கண்டெடுக்கப்பட்டதாகத் தெரிகிறது. எனினும் மட்டக்களப்புத் தமிழகத்தில் இதன் தொடர்பாகக் கூறப்படும் ஊர்கள் பலவற்றுள் உண்மையாக எவ்விடத்திலிருந்து இது இங்கிலாந்து சென்றதென்று திட்டமாகச் சொல்ல முடியவில்லை. ஒல்லாந்தர் தம் ஆட்சிக்காலத்திலே மட்டக்களப்பிற் செல்வம் நிறைந்து விளங்கிய சைவக் கோயில்கள் சிலவற்றைக் கொள்ளையடித்து வந்தனரென்றும், அன்னாருடைய துன்பப் பிடிப்பினின்று தமது உயிருக்குயிரான கண்ணகி தேவியைக் காப்பாற்றுதற்காக அவளுடைய இச் சிலையினை முதியோர் சிலர் கோயிலிலிருந்து வேறிடம் பெயர்த்து மறைத்து வைத்தார்களென்றும் தெளிவாகத் தெரிகிறது. இம் முழுச் சிலையின் அமைப்பினை நன்கு ஆராய்ந்து கண்ட கலைப் புலவர் க. நவரத்தினம் அவர்கள் வட இந்தியக்கலை அமைப்பினையுடையதாய் மகாயான புத்த மதச் சாயலும் திபேத்திய முத்திரையும் கொண்டு விளங்கும் இச் சிலை புத்தமதப் பெண் தேவதை ஒன்றினதாக இருத்தல் கூடும் என்று கருதுகிறார்கள். கொழும்பு மியூசியத்தில் வைக்கப்பட்டிருக்கும் கண்ணகி சிலையும் மேற் கண்டவாறான அமைப்பினையுடையதாய், லண்டன் 'மியூசிய'த்துச் சிலையினையே ஒத்திருத்தலும், இச் சிலைகள் ஒரு முலையிழந்த திருமாபத்தினியான கண்ணகிக்குரியனவல்ல என்ற அவர் கருத்தையே காட்டுகின்றது. சேரன் செங்குட்டுவன் சமைத்த கண்ணகியின் தமிழ்ச் சிலையினைப் படியொற்றியே கயவாகு மன்னன் இலங்கைக்குச் சிலை கொணர்ந்திருத்தல் வேண்டுமாயினும் காலஞ் செல்லச் செல்ல அத் தமிழ்ச் சிலையினைப் படியொற்றியெழுந்த வேறு படிமக்கள் இலங்கைப் புத்தர்களதும், பிற்காலச் சோழர்களதும் சிற்பக்கலைத் தொடர்பினால் மெல்லமெல்ல இவ்வுருவத்தினை அடைந்திருத்தல் கூடும் என்று கொள்ளுதலும், கலாயோகி ஆனந்தக் குமாரசுவாமியவர்களது கருத்துப்படி நாம் இவற்றைக் கண்ணகி சிலையாகவே கொள்ளுதலுமே பொருத்தமென்று எண்ணுகின்றேன்.

ஈழநாட்டிலே கண்ணகி வழிபாடு இவ்வாறு நிலைத்துநிற்க, பல்வேறு காரணங்களால் இந்தியத் தமிழகத்திலே அது மறைந்து போவதாயிற்று. சோழநாட்டு வரலாற்றுக் குறிப்பொன்றைப் பார்க்கும் போது ஈழத்து அரசி ஒருத்தியால் அங்குப் பத்தினித் தெய்வம் கோயில் கொண்டனளென்று தெரிகிறது. கி. பி 11 ஆம் நூற்றாண்டிலே தமிழகம் முழுமையும் ஒரு குடை கொண்ட சோழர் குலப் பெருமன்னனாகிய இராசராசன் என்பான், இலங்கியையும் அடிப்படுத்தி சிங்கள மன்னனாகிய ஐந்தாம் மகிந்தனையும் மனைவியையும் சிறைப்பிடித்துச் சென்றனன். தஞ்சையில் அமைந்த மாளிகை ஒன்றிலே அவ்விருவரும் மரியாதையுடன் வைத்துக் காவல் செய்யப்பட்டார்கள். சிங்கள மன்னனின் மனைவி பத்தினி வழிபாடு குன்றுதவளாகையால் அவ் வழிபாடிழந்து உயிர் வாழ்வதற்காகப் பெரிதும் வருந்தினுள். இராச

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராச சோழன் இதனை அறிந்து அவள் விருப்பப்படியே கண்ணகி கோயில் ஒன்றை அமைத்துக் கொடுத்ததோடு பத்தினி விழாவும் அங்கு ஒழுங்குற நடந்து வரச் செய்தான். இச் சோழ மன்னனது புகழினுக்கோர் சிகரம் போன்று விளங்கு ந் தஞ்சை இராசராசேசுவரப் பெரும் பள்ளி என்ற பிரகதீசுவரர் கோயிலுக்குச் சிறிது தூரத்தே இந்தக் கோயில் இன்றும் இருக்கிறது. சோழநாட்டில் பத்தினித்தெய்வ வழிபாடு மறைந்திருந்த அக்காலத்தில் மக்கள், கண்ணகி தேவியினைச் சிங்கள நாட்டிலிருந்து தம்மூருக்கு வந்த ஒரு தெய்வமாகக் கருதிவிட்டமையாற் போலும், ''சிங்கள நாச்சி'' கோயில் என அதனை அழைக்கலாயினர். நாச்சி என்பது, அம்மை என்ற பொருளில் வழங்கிய மிக உயர்ந்த ஒரு சொல்லாகச் சோழ அரசர்களது கல்வெட்டுக்கள் பலகுறிப்பிடுவ. சிங்களநாச்சி என்னும் சொல் பிற்காலத்தே திரிபு கொண்டு இன்று ''செங்களாச்சி''அம்மன் கோயில் என்று வழங்கப்படுகிறது. சிங்கள அரசியார் குறிப்பிட்ட வழக்கப்படி இன்னும் செங்களாச்சி அம்மன் கோயிலிலே வருடந்தோறும் திருவிழா நடந்து வருதலைத் தஞ்சையிற் காணலாம். அன்றியும், ''இனிய கண்ணகை'' ''அன்பான பத்தினி நங்கை'' என்று இவளைப் போற்றியுள்ள நூலாகிய உடுகுச்சிந்திலே, மூன்று பாடல்கள் 'மூர்க்கமாத' (துர்க்கை) என்று கண்ணகை அம்மனைக் குறிப்பிடுகின்றன. இதனால் கண்ணகியின் சிறிய கற்பு நிலையும், மதுரை எரித்த வீரப்பாங்கும் கொண்டு அவளைத் துர்க்கை என்றும் மக்கள் கொண்டனரெனலாம். மட்டக்களப்பிலுள்ள கண்ணகி கோயில்களிற் பெரும்பாலானவை காட்டோரங்களில் இருத்தலும், வைகாசிமாத விழா ஒழிந்த நாட்களில் அவற்றின் பக்கம் செல்லுதற்கு மக்கள் பயப்படுவதும், இக் கருத்தினை வலியுறுத்துவனவாகும். மலையாள நாட்டிலே கொடுங்கோளூர் (கொடும்பாளூர் சிருங்க ஊர், (Cranganore) என்ற நகரத்தில் 'ஒற்றைமுலைச்சி' என்னும் அம்மன் கோயில் ஒன்று மிகப் பிரபலமாக விளங்குகிறது. இப் பெயரினை ''ஒரு முலையிழந்த திருமா பத்தினி'' என்ற கண்ணகியின் பெயராகவே கருத இடமுண்டு. பங்குனி (மீன) மாதத்துப் பரணி நாளில் இப் பகவதிக்குப் பலிகள் பல கொடுத்து விழாக் கொண்டாடுகிறார்கள். இக் கோயில்தான் சேரமன்னன் பத்தினிக் கடவுளுக்கெடுத்த முதற் கோட்டம் என்று ஈழநாட்டுப் பேராசிரியர் கணபதிப்பிள்ளை அவர்கள் கொள்கின்றனர். ஆனால், கொங்கு நாட்டுக் கருவூரிலே வஞ்சியம்மன் வலங்கையம்மன் என்ற திசை காவற் தெய்வங்களுக்குக் கோயில்கள் உள்ளன. இவற்றுட் பின்னையது அங்கு நடைபெறும் வழிபாடுகளாலும், வரலாறுகளாலும் கண்ணகிக்கெழுந்ததோர் கோவிலேயாமென்று கருத இடந் தருகின்றது. இக் கோவில் கண்ணகிக்குச் சேரன் செங்குட்டுவன் எடுத்த முதற் கோவிலாதல் கூடும் என்று பேராசிரியர் மு. இராகவையங்கார் அவர்கள் கருதுகின்றனர். மலையாளத்தில் வழங்கும் கோவலன் கதையிலே கண்ணகியானவள் இறுதியில் மலைநாடு சென்று திருச் செங்குன்றில் பகவதியாகக் கோயில்கொண்டு தரிசனந் தருகிறாள் என்று காணப்படுகிறது. அதன்படி அங்குள்ள பகவதி கோயிலும் கண்ணகி கோயிலாகவே இருந்தமை புலப்படுகிறது. மதுரை மீனாட்சியம்மன் கோயிலுக்கருகிலே செல்வநதம்மன் கோயில் என்றழைக்கப்படும் துர்க்கை கோயிலில் ஒற்றைக்காற் சிலம்புடன் காணப்படும் சிலை கண்ணகியின் படிமமாகவே இருக்கலாமாயினும், துர்க்கை ஒருகாலிற் சிலம்பும் மற்றைக் காலில் வீரக்கழலும் பூண்டவள் என்று சிலப்பதிகாரத்துப் பழைய உரை கூறுகின்றதாகையால் இதனை நாம் மேலும் தெளிவு செய்து கொள்ளுதல் நன்றாகும். இவ்வாறு ஒற்றைக்காலிற் சிலம்புடைய சிலை என்று கங்கை கொண்ட சோழபுரத்துப் பெருங் கோயிலும் காணப்படுகின்றது. கன்னட நாட்டிலே தமிழ்ச் சிலப்பதிகாரம் கூறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறே கண்ணகி கதை நடந்து இறுதியில் மட்டும், வெட்டுண்ட கோவலன் கண்ணகி யின் கற்பினுக்கிரங்கிய சிவனருளால் உயிர் பெற்றெழ, அப்பால் இருவரும் தம்மூர் சென்று சுகமே வாழ்ந்தனரென்று திரிவு கொண்டு வழங்குவதாக அறிகின்றோம். கண்ணகி, கோவலன், மாதவி என்பார் முறையே சந்திரா, கொய்லா, மௌலீ என்ற பெயர்களுடன் அங்கு வழங்கவும் பெற்றுள்ளனர். மாளுவநாட்டு நாகோட்ஸ் சமஸ்தானத்தில் 'பதைனிதேவி' என்று எழுத்திற் பொறிக்கப்பட்டு விளங்கும் கோயிலிலே சிலப்பதிகாரத்திற் கூறப்பட்ட மாளுவவேந்தன் கண்ணகிக்கெடுத்த கோயி லாக இருக்கலாம் என்று கருத இடம் உண்டு.

வைசூரி, குக்கல், வெப்பு, சின்னம்மை, வயிற்றுக்கடுப்பு, மங்கமாரி, கண்ணோய், பெருஞ்சுரம் என்னும் சூட்டு நோய்கள் கண்ணகி அம்மனின் கோபத்தினாலேயே பரவுகின்றன என்று மட்டக்களப்பு மக்கள் பலர் கொள்கின்றனர். காளியின் அம்ச மான கண்ணகையம்மனின் 'பரிகலங்கள்' (அணுக்கத் தேவதைகள்) எண்மர் உளர் என்றும் அவர்களே இந் நோய்களுக்குத் தலை வர் என்றும் கூறப்படுகின்றது.

இவ்வாறு அருளன்னையும் வீரபத்தினி யுமாயுள்ள கண்ணகி தேவியினது சினம் நிறைந்தகால் அதனைத் தணித்ததற்காக மட்டக்களப்பு மக்கள் அவள் பொருட்டு 'கொம்புமுரிதல்' என்னும் ஆடலினை மேற்கொள்கின்றனர். அவ்வாடற் சிறப் பும், சுவையும், கண்ணகி விழா நிகழ்ச்சிக ளும் அக்காலைக் கேட்கப்படும் வழக்குரை, குளுத்தி முதலான பாடற் சிறப்புக்களும் தனித்தனி அறிந்து இன்புற வேண்டியன. (இதில் வரும் ஆராய்ச்சிக் குறிப்புகள் யாவும் மட்டக்களப்புத் தமிழகத்தில் இடம் பெற்றுள்ளன.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்து தமிழிலக்கிய வளர்ச்சிக்கு முஸ்லீம்களின் பங்களிப்பு

— எம். எம். மன்சூர் —

ஈழத்து முஸ்லீம்களின் வரலாறு கி. பி. 8 ஆம் நூற்றுண்டிலிருந்து ஆரம்பிக்கின்றது என்பர் அறிஞர். எனவே, இந்தநாட்டில் வாழும் முஸ்லீம்கள் ஏறத்தாழ 1200 வருடப் பாரம்பரியமும், வரலாறுமுடையவர்கள் என்பது அறியத்தக்கது.

ஈழம் வாழ் முஸ்லீம்கள் ஆதியிலே அரேபியாவிலிருந்து வணிகநோக்கோடு வந்து குடியேறினுர்கள் என்று ஒரு சாரார் நிறுவுகின்றனர். இன்னெரு சாரார் இவர்கள் தென்னிந்தியாவில் இருந்து வந்து ஈழத்தில் குடியேறினர் என்று கூறுகின்றனர். வந்துசேர்ந்த வணிகர்களான அரேபியர், முதன்முதலாக ஈழத்தின் தமிழ்ப்பிரதேசங்களிலேயே குடியேறி, அங்குள்ள தமிழ்ப் பெண்களேயே திருமணஞ்செய்து வாழ்ந்தனர் என்றும், பின்னர் படிப்படியாக, ஈழத்தின் ஏனைய பகுதிகளுக்கும்சென்று வாழ்ந்து வரத் தொடங்கினர் என்றும் நிரூபிக்கின்றனர் பிறிதொரு சாரார்.

யார் எதனைக்கூறிய பொழுதிலும் ஓர் உண்மைமட்டும் தெளிவாகத் தெரிகிறது. ஈழம் வாழ் முஸ்லீம்களின் தாய்மொழி தமிழாக இருப்பதுவே அந்த மறைக்கமுடியாத உண்மையாகும். மட்டக்களப்பில் வாழ்ந்தாலுஞ்சரி, மல்வானையில் வாழ்ந்தாலுஞ்சரி, யாழ்ப்பாணத்தில் வாழ்ந்தாலுஞ்சரி, யாப்பாகுவாவில் வாழ்ந்தாலுஞ்சரி, ஈழம்வாழ் முஸ்லீம்களின் வீட்டுமொழியாகவும், தாய்மொழியாகவும் விளங்குவது தமிழே ஆகும். எந்தக் காரணத்தைக் கொண்டும் இந்த உண்மையை மறுக்க முடியாது.

தமிழ் மொழியை மாத்திரமன்றி, தமிழர் தம் பண்பாட்டம்சங்கள் பலவற்றையும், தங்கள் இஸ்லாமிய கலாச்சாரங் கெடாத வகையில் கைக்கொண்டு வருகின்றனர். ஈழத்து முஸ்லீம்கள், உதாரணமாக திருமண வைபவங்களில் ஆலாத்தி எடுத்தல், தாலிகட்டுதல், கூறை அணிதல், குத்துவிளக்கேற்றல், கணவனை இழந்த பெண்கள் வெள்ளை உடைகளேயே உடுத்தல் முதலியவற்றைக் கூறலாம். மஹர் கொடுத்துப் பெண் எடுக்கும் முறை அருகி, மாப்பிள்ளைமார் சீதனம் வாங்கித் திருமணம் செய்யும் முறைகூட யாழ்ப்பாணத் தமிழர் பண்பாட்டின் தாக்கத்திஞல் ஏற்பட்ட வழக்கம் என்று கூறலாம்.

இந்தவகையிலே, தம்மைப் பெற்றுப் பாலூட்டி, சீராட்டி வளர்த்து, வாழவைக்கும் தாயின் மொழியாம்—தாய்மொழி—தமிழின்மீது தமிழக முஸ்லீம்களைப்போலவே ஈழத்து முஸ்லீம்களும் அன்பும், மதிப்பும் பேரபிமானமும் உடையவர்களாக இருந்து வருகின்றுர்கள். இதில் ஆச்சரியப் படுவதற்கொன்றுமில்லை. சிலர், ஐரோப்பிய இனத்தவரோ, சிங்கள இனத்தவரோ தமிழைப்பற்றி எழுதிஞல், அல்லது தமிழில் எழுதிஞல் வியப்படைவதுபோல ஈழத்து முஸ்லீம்கள் தமது தாய்மொழியில், தாய்மொழிக்கு ஏதாவது எழுதிஞல் அதிசயமாக எம்மை நோக்குகிறுர்கள். இதை எண்ணும் போது எமக்கு இது ஆச்சரியமாகவிருக்கின்றது.

தமிழ்நாட்டு முஸ்லீம்கள் தாய்மொழியாம் தமிழுக்கு—அதன் வளர்ச்சிக்கு ஆற்றி வரும் பங்களிப்பு அளப்பரியது. அதுபோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லவே, ஈழநாட்டு முஸ்லீம்களும் தங்களால் இயன்றளவு பங்களிப்பினை இன்பத்தமிழுக்கு வழங்கி வந்திருக்கிறார்கள் என்பதனைக் கூறும்பொழுது இறும்பூதெய்துகின்றோம்.

ஈழத்து முஸ்லீம்கள் சமயத்தை உயிராகவும், தமிழை மூச்சாகவும் கொண்டவர்கள். எனவே, சமயமொழியாம் அரபு மொழிக்கு முதலிடம் கொடுத்து வாழும் ஈழத்து முஸ்லீம்கள் அடுத்த இடம் தமிழ் மொழிக்கே கொடுத்துள்ளனர். இந்தவகையிலே ஈழத்து முஸ்லீம்கள் தமிழ்மொழியின் வளர்ச்சிக்கும், சிறப்புக்கும் ஆற்றிவரும் தொண்டும், நல்கிவரும் பங்களிப்பும் அளப்பரியன. தங்களது, இஸ்லாமிய தனித்துவமான வாழ்வியற் பின்னணியைத் தளமாகக்கொண்டு, அத்தளத்தில் நின்று, தமது சமூக, பொருளாதார, சமய, கலாச்சார பண்பாட்டுக் கூறுகளையும், விழுமியங்களையும் தமிழியற் சிந்தனையினூடாக, இனங்காட்டிக் கொள்வதுடன் நின்றுவிடாது, சமயக் கட்டுப்பாடுகள் என்னும் வட்டத்துக்கு வெளியில் நின்றும் யதார்த்த உலகினையும், சமூக நிலையினையும் உன்னிப்பாகக் கவனித்து உலகளாவிய உணர்வு பூர்வமான சிந்தனைகளையும் தமிழ் மொழியினூடாக வெளிபிட்டு வருகின்றார்கள். தமிழிலக்கிய வடிவங்களான செய்யுள், கவிதை, நாவல், சிறுகதை, நாடகம் போன்ற இன்னோரன்ன பல்வேறுபட்ட துறைகள் இவற்றுக்குச் சாதனமாகவும், வாகனமாகவும் அமைந்தன. இதனால் தமிழும் சிறப்புப் பெற்றது. ஈழத்தமிழ் இலக்கியமும் புதுப் பொலிவுடனும், புதுமெருகுடனும், பூரித்து, தழைத்துத் தளிர்த்து மதாளித்து வளர்ந்து வருகின்றதெனலாம்.

ஈழத்து முஸ்லீம்கள் செய்யுட்துறை, கவிதைத்துறை, நாவற்றுறை, சிறுகதைத் துறை, நாடகத்துறை, விமர்சனத்துறை போன்ற இன்னோரன்ன பல்வேறுவகைப்பட்ட துறைகளில் ஈழத்துத் தமிழிலக்கிய வளர்ச்சிக்குத் தமது பங்கினை அளித்துவந்து கொண்டிருக்கின்றனர்.

இதுபற்றிப் பூரணமான வரலாற்று விளக்கத்துடன் அறியத்தர முடியாவிட்டாலும் ஓரளவுக்கென்கிலும் எடுத்துக்கூறலாம் என்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

செய்யுட்டுறையை எடுத்துக்கொண்டால் பண்டைய தமிழ்ச் செய்யுள் மரபுகளான, யாப்பு, அணி, முதலிய தளைகளுக்குள் நின்று தமது வாழ்வியல் அடிப்படைகளான இஸ்லாமிய சமய, பண்பாடு, ஒழுக்கங்கள், வரலாறு முதலியனவற்றை உள்ளடக்கமாகக் கொண்டு, பழைய மரபோடொட்டிய செய்யுள் வடிவங்களிலும், இலக்கிய வடிவங்களிலும் வெளியிடும் செய்யுள் நூல்கள் செய்யுட்டுறையின் பாற்படும் எனலாம். இந்தவகையான செய்யுள் நூல்கள், நூல்அமைப்பு முறையிலும், நடையிலும் போக்கிலும் பேர்பெற்ற பழந்தமிழ் இலக்கிய நூல்களுக்குச் சமானமாக விளங்கும். கற்பனைத்திறனும், பொருட்சிறப்பும் சொல்லழகும் உணர்ச்சிவளமும் மிக்கனவாகம் விளங்கும்.

இந்தவகையிலும்கூட 19 ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலபகுதியில், எந்தவிதமான பங்களிப்பினையும் ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு ஈழத்து முஸ்லீம்கள் செய்துள்ளமைக்கு ஆதாரம் எதுவும் இல்லை. 19 ஆம் நூற்றாண்டிலிருந்தே இத்தகைய முயற்சிகள் நடந்தேறி வருவதை அறிய முடிகிறது.

பண்டைய செய்யுளிலக்கண மரபினைத் தழுவிச் செய்யுள் நூல்களைஇயற்றிய ஈழத்து முஸ்லீம் புலவர்களுள் அருள் வாக்கி அப்துல் காதிறுப் புலவரே முதன்மையானவராகக் கணிக்கப்படுகிறார். மதுரைத் தமிழ்ச் சங்கத்துடனும் இவருக்குத் தொடர்பு இருந்துவந்தது. திருமதீனத்துமாலை, கண்டிக்கலம்பகம், மெஞ்ஞானக் குறவஞ்சி, கோட்டாற்றுப் புராணம் முதலிய முப்பதுக்கு மேற்பட்ட செய்யுள் நூல்கள் இவரால் எழுதப்பெற்றன. 1909 இல் இவரால் இயற்றப்பெற்ற சந்தந் திருப்புகழ் அருணகிரி நாதருடைய திருப்புகழினை ஒத்த சிறப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்ந்தது எனப் பாராட்டப் பெற்றது. இவருடைய எழுத்தாற்றல், பேச்சாற்றல் என்பவற்றை வியந்து போற்றிய யாழ்ப் பாணத்து மக்கள் ''வித்துவதீபம்'' என்னும் பட்டத்தை வழங்கி இவரைக் கௌரவித் தனர். சீரு சரித்திரத்தைச் சுருக்கி 763 இசைப்பாடல்களில் அமைத்தவர் காலி செய்குநம்பிப்புலவர். தீன்மாலை என்னும் அரபுத் தமிழ்நூலை இயற்றியவர் கண்டி செய்கு முகமது லெவ்வை ஆலிம் புலவரும், முகைதீன் புராணத்தினை யாழ்ப்பாணம் பதுருத்தீன் புலவரும், சன்மார்க்க இலகு போத வினாவிடையினை யாழ்ப்பாணம் மீரான் முகைதீன் புலவரும், ஆரண முகம்மதுவின் காரணக் கும்மியை யாழ்ப்பாணம் சுல்தான் தம்பிப் புலவரும், ஞானத் திருப்புகழினை அக்குறணை இஸ்மாயில் லெவ்வையும், மீரான் மாலை, மெய்ஞ்ஞானத்தூது என்பவற்றை வேருவிலை செய்கு முஸ்தாபா ஆலிம் ஒலி யுல்லாப் புலவரும், மீமன் கப்பல், கும்மி முதலியவற்றை தி கோணமலை மதார்ப் புல வரும், மங்கள வாழ்த்து என்னும் நூலை தெல்தோட்டை கே. எஸ். முகம்மது முகை தீன் புலவரும், நவரெத்தின புராணத்தை மூதூர் முகைதீன் பிச்சைப் புலவரும், ஆசா ரக்கோவையினை கற்பிட்டி அப்துல் மஜீந் புலவரும், மனோரஞ்சிதத் தெம்மாங்கினை ராகலை துவான் இச்சில் ஐப்பார் புலவரும், நல்வழிக் கவிதைகளை பொத்துவில் மீரா லெப்பை என்பவரும் இயற்றியுள்ளார்கள். இவர்களுள் விசேடமாகக் குறிப்பிடப்படுப வர்கள் புகழ்ப்பாவணி என்னும் செய்யுள் நூலை இயற்றிய சு. மு. அசனா லெப்பை ஆலிம் புலவர் அவர்களும், சர்வசமய சம ரசக் கீர்த்தனைகளையும், கதிர்காமக் கடவுள் காரணக்கும்மி, ஆகியவற்றை இயற்றிய மாத்துறை முகம்மது காசிம் புலவரும் ஆவார் கள். முன்னவர் ஆறுமுக நாவலர் வழி நின்று, நாவலர் தமிழ்மூலம் சைவத்தை வளர்த்ததுபோல இவரும் தமிழ்மூலம் இஸ் லாமை வளர்த்தார். பின்னவர் வள்ளலார் வழி போன்றதொரு வழியில் நின்று. சர்வ சமய சமரச மனப்பாங்கோடு இஸ்லாம் நெறிமுறைகளை உணர்த்தியவர்.

இவ்வாறாக, புத்தளம் தொட்டுப் பொத்துவில் வரை, பருத்தித்துறை தொட் டுப் பாணந்துறைவரை, இலங்கை முழுவ தும் வாழ்ந்திருந்த, ஈழத்து இஸ்லாமியப் புலவர்கள், நூற்றுக்கு மேற்பட்டோர் பழைய மரபுவழி நின்று செய்யுட்களைச் செய்து ஈழத்துத் தமிழ் வளர்ச்சிக்கு அருந் தொண்டாற்றினர்.

தற்காலத் தமிழ்க் கவிதையை 20 ஆம் நூற்றாண்டுத் தமிழ்க்கவிதை அல்லது நவீன தமிழ்க்கவிதை என்று அழைக்கின்றோம். அதாவது பண்டைய பொருள்மரபு, செய் யுள்மரபு என்பவற்றிலிருந்து வேறுபட்டு சமூகத்தின் நிகழ்கால வாழ்க்கைநிலை, வாழ்வு முறை, நோக்கு, போக்கு என்பவற்றை ஆதாரமாகக்கொண்டு உள்ளடக்கத்திலும், உருவமைப்பிலும் வேறுபட்டுநிற்கும் கவிதை களை நவீன கவிதைகளாகும். மஹாகவி சுப் பிரமணிய பாரதி கூறியதுபோல ''பொருள் புதிது. சொற்புதிது, சுவைபுதிது இவையே சோதிமிக்க நவகவிதை'' இத்தகைய பண்பி லமைந்த நவீன கவிதைகளைப் படைக்கு மாறே, ஈழத்து மஹாகவி உருத்திரமூர்த்தி யும் கேட்டுக்கொள்கிறார்.

'' இன்னவைதாம் கவியெழுத
ஏற்றபொருள் என்று, பிறர்
சொன்னவற்றை நீர் திருப்பிச்
சொல்லாதீர், சோலை, கடல்,
மின்னல், முகில் தென்றலினை
மறவுங்கள். மீந்திருக்கும், ஏழ்மை,
உயர்வு,
என்பவற்றைப் பாடுங்கள் ''

என்பதே அன்னாரின் வேண்டுகோள் ஆகும்.

இந்த வகையிலே, ஈழத்து முஸ்லீங் களும் நவீன வடிவமைப்பு, எளிய மொழி யமைப்பு, பேச்சோசைப் பண்பு இவற்றி னூடாக இஸ்லாமிய சமய நெறிமுறைகள், கோட்பாடுகள் என்பவற்றையும், ஒழுக்கம், பண்பாடு போன்றவற்றையும் காதல், தியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம், பாசம், ஏக்கம், சோகம், விரக்தி போன்ற தனிமனித உணர்வுகளையும், நவீன கவிதைகளில் படைத்தளித்து வந்துள்ளனர் சாதி, அந்தஸ்து, பணம், முதலியவை காரணமாகச் சமுதாயத்தில் ஏற்படும், ஏற்றத் தாழ்வுகள், முரண்பாடுகள், மோதல்கள், என்பவற்றை இயக்கவியல் ரீதியாக அணுகி அவற்றுக்கான தீர்வுகளை வெளிப்படையாகவும், பூடகமாகவும் உணர்த்தி, சமூகப் பிரக்ஞை பூர்வமான கவிதைகளையும் எம்மவருள் அநேகர் இயற்றிவருகின்றார்கள். சமயப்பார்வையினளவோடு மாத்திரம் நின்றுவிடாமல், உலகளாவிய ரீதியில் சமுதாயப் பொதுநோக்கோடும் ஈழத்து முஸ்லீம்கள் நவீனகவிதைகளை ஆக்கிவருவதால், உலகளாவிய ரீதியில் தமிழ்மொழி சிறப்படைந்து வருவதற்கு ஏதுவாகின்றது.

நவீன தமிழ்க்கவிதைகள் மூலம் ஈழத்து இலக்கியத்தை வளம்படுத்திவரும் ஈழத்து முஸ்லீம் கவிஞர்களுட் குறிப்பிடதக்கவர்கள் சிலர். அச்சிலருள், 'புரட்சிக்கமால்' என்று புனைபெயர் பூண்டு நிற்கும் எம். எம். சாலிஹ், 'அண்ணல்' எம் சாலிஹ், 'யுவன்' எம். ஏ. கபூர் ஆகிய மூவரும் கிழக்கு மாகாணந்தந்த முன்னணிக் கவிஞர்களாவார்கள். புரட்சிக் கமாலின் கவிதைகளில் புரட்சிக்கனல் பறக்கும். அத்தோடு தமிழ்மீது அவர்கொண்டிருக்கும் அபிமானமும் விளங்கும். மார்க்கநெறி வழுவாத சீர்திருத்தக் கருத்துக்கள் சிறக்கும், ''புரட்சிக்கமால் கவிதைகள்'' தொகுதி அவரது ஆற்றலுக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். ''அண்ணல்'' அழகுதமிழ்க் கவிஞர். நவீன கருத்துக்களை அழகு தமிழில் சிறந்த ஓசை நயத்துடன் கவிதைகளில் ஆக்கித் தருபவர். அண்ணலின் ''அண்ணல் கவிதைகள்'' அவரது ஆற்றலை விளக்குகின்றது. யுவன், ஓர் உணர்ச்சிக் கவிஞராவார். ''பாட்டுத் திறத்தாலே...'' என்ற தலைப்பில் கவிதையொன்று பாடிப் பரிசுபெற்றுக் கவிதை உலகில் காலடி வைத்த யுவன், இன்று தமது பாட்டுத்திறத்தாலே ஈழத்துத் தமிழ்க் கவிதை உலகிலும் நின்று சிறக்கிறார். எம். ஸி. சுபைர் அவர்களின் ''குறிஞ்சிக்குயில்'' ''மலர்ந்த வாழ்வு'' என்பன சிறந்த கவிதை நூல்களாகும். எம். ஏ. நுஃமான், மருதூர்க்கனி கலைவாதி கலீல் போன்றவர்கள் முற்போக்கு அரசியற் சித்தார்தங்களுடன் தொடர்புள்ளவர்களாகையினுல் அவர்கள் கவிதைகளில் முற்போக்கு இலட்சியங்களே பிரதிபலிக்கக் காணலாம். எம். ஏ. நுஃமானின் ''தாத்தாமாரும் பேரர்களும்'' என்ற கவிதை நூலில், பொருட்புலப் பாட்டுக்கேற்ற வகையில் பேச்சோசை விளங்கும் பண்பு சிறப்பதை அவதானிக்கலாம். முற்போக்குவாதப் போக்கில் தம்மை இனங்காட்டிக் கொள்ள விரும்பாது, மார்க்கக் கருத்துக்களையும், சமுதாயச் சீர்திருத்தக் கருத்துக்களையும் உள்ளடக்கமாகக் கொண்டு கலைநயம் பொருந்தக் கவிதை படைத்தவர்களுள் ஏ. இக்பால், அன்பு முகைதீன் ''பாவலர் பஸீல் காரியப்பர் போன்றோரைக் குறிப்பிட்டுக் கூறலாம். அண்மையில் வெளியிடப்பட்ட அன்பு முகைதீனின் மாதுளம் முத்துக்கள்'' என்னும் 32 கவிதைகள் கொண்ட கவிதைநூல், அவரது உள்ளத்து எழுச்சிக்குச் சான்றாகும். இஸ்லாமிய வாழ்வியலின் தனித்துவத்திற்குள் நின்று, 'போலி நாடகங்களை' மிகத்துணிவுடன் சாடுகிறார். ''சிங்கம்போல் உயிர்க்கவிதை சீறி வீறிப் பாயட்டும்'' என்று உரக்கக் கூறுகின்றார். இதுவொன்றே அவரின் உணர்ச்சிக்கு முத்திரைகுத்தி நிற்கிறது. அகில இலங்கை ரீதியாக நடைபெற்ற கவிதைப் போட்டி ஒன்றில் முதலிடம் பெற்ற பாவலர் பஸீல் காரியப்பரின் ''தங்கம்மா'' தமிழ் நெஞ்சங்களை எல்லாம் ஒரு கணம் நின்று சிந்திக்கச் செய்து விடுகின்றாள். பாவலரின் ஆற்றலுக்குச் சான்றாகப் பிறந்தவள்தான் 'தங்கம்மா'. மேலும் மருதூர்க் கனி திக்குவல்லைக் கமால், மேமன் கவி, சரணு கயூம், மருதூர்க் கயாம், போன்றவர்களெல்லாம் வளர்ந்துவரும் ஈழத்துத் தமிழ்க் கவிஞர்களே. ஈழமேகம் பக்கீர்த்தம்பியின் ''மழையும் துளிகளும்'' ஈழத்துத் தமிழ்க்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைப் பரப்பினை எப்போதும் நினைத்துக் கொண்டே நிற்கின்றன.

பீறிட்டுவரும் உள்ளத்து உணர்வுகளையும், ஆசங்கை, அவசங்களையும் வெளியிடுவதற்கு, யாப்பிலக்கண மரபுச் சுவர்கள், தடையாக இருப்பதால், அவற்றை இடித்துத் தகர்த்துவிட்டு, புதிய நடையில், புதிய வடிவில், புதிய பொருளையும் உணர்வுகளையும் அமைத்து வடிக்கப்படுவது புதுக்கவிதை. புதுக்கவிதைத் துறைவளர்ச்சியும் வரலாறும் ஈழத்தில் அண்மைக்கால வரலாறாகவே இருந்தபோதிலும், இந்தக்கவிதைத் துறையிலும் ஈழத்து முஸ்லீம் புதுக்கவிஞர்கள் தங்கள் பங்களிப்பினை வழங்கியேயுள்ளனர். கவித்துவமும், கலைப்பெறுமானமும் உள்ள புதுக்கவிதைகள் பல இவர்களால் எழுதப்பெற்றன. ஈழத்தில் முதலாவது தொடங்கப்பெற்ற புதுக்கவிதை ஏடு, 1972 இல் தென்னிலங்கையில் தோன்றிய "க-வி-தை" என்னும் ஏடே ஆகும். திக்வெல்லைக்கமால், நீள்கரை நம்பி, சம்ஸ், யோனகபுர ஹம்ஸா போன்றோர், பாட்டாளி வர்க்க நிலை பற்றியும், அவர்களின் வாழ்க்கை நிலைபற்றியும், சமூகக் குறைபாடுகள் பற்றியும் "க–வி–தை"யில் புதுக்கவிதைகளாகப் படைத்தார்கள். அன்பு ஜவஹர்ஷாவின் 'சுவடுகள்' 'காவிகளும் ஒட்டுண்ணிகளும்' திக்வெல்லைக் கமாலின் 'எலிக்கூடு' மேமன் கவியின் 'யுகராகங்கள்' மூதூர் முகைதீனின் 'முத்து' போன்றவை தரமான புதுக்கவிதைத் தொகுப்புகளாகும்.

ஈழத்துத்தமிழ் நாவல் இலக்கியத்துறையினைப் பொறுத்தளவிலும் அதிகமான அளவில் இல்லாவிட்டாலும், கணிசமான அளவில் தமது பங்களிப்பினை நல்கியுள்ளார்கள் ஈழத்து முஸ்லீம் நாவலாசிரியர்கள்.

முதலாளித்துவ சமூக அமைப்பின் தோற்றம் ஆங்கிலக்கல்வி, மேலைநாட்டு இலக்கியப் பரிச்சயம் முதலியவை காரணமாக தமிழ் நாட்டிலும், ஈழநாட்டிலும் தமிழ் இலக்கியப் போக்கிலும் மாற்றம் ஏற்படலாயிற்று. அம்மாற்றத்தின் காரணமாகத் தோன்றியவைதாம், நாவல் சிறுகதை போன்ற புதிய புனைகதை வடிவங்கள். தமிழில் நாவல் இலக்கியத்தின் வளர்ச்சியிலும் வரலாற்றிலும் ஈழத்து எழுத்தாளர்களுக்கும் பங்குண்டு. இந்தவகையில் ஈழத்து முஸ்லீம் நாவலாசிரியர்களுக்கும் பெரும் பங்கு உண்டு என்பதும் மறுக்கமுடியாத உண்மையாகும்.

ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கியத் துறை வரலாற்றில் முதல்நாவலாகப் பலராலும் கொள்ளப்படுவது அறிஞர் சித்திலெவ்வை அவர்களால் எழுதப்பெற்ற "அஸன் பேயுடைய கதை" என்னும் நாவலே. இந்த நாவல் 1885 இல் முஸ்லீம் நேசன் அச்சகத்தில் பிரசுரிக்கப்பட்டது. மிஸர் தேசத்து அரசனாகிய அஸன்பே என்பவனுடைய கதைபற்றிய அம்சம் மர்மச் சம்பவங்களுடன் வீரசாகசச் செயல்களுடனும், இஸ்லாமிய சமய பண்பாட்டு அம்சங்களையும் பின்னித் தொடர்கிறது. இந் நாவலின் இரண்டாவது பதிப்பு 1890 இலும், மூன்றாவது பதிப்பு 1974 இலும் வெளிவந்தது.

நீண்ட இடைவெளிக்குப்பின்னர் மீண்டும், முஸ்லீம்களால் நாவலிலக்கிய முயற்சி மேற்கொள்ளப்பட்டது. 1950 களில் எனலாம். இந்தச்சந்தர்ப்பத்தில் முற்போக்கு எழுத்தாளன் இளங்கீரன் சுபைர் இடம் பெறுகிறார். ஐம்பதுகளில் ஈழத்துத் தமிழ் நாவற்துறைக்குப் புதிய பரிணாமத்தைக் கொடுத்தவர் என்ற வகையில் இளங்கீரன் ஈழத்துத்தமிழிலக்கிய வரலாற்றில் முக்கியத்துவம் அடைகின்றார் என்று, ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கிய ஆராய்ச்சியாளரால் பாராட்டப்படும் அளவுக்குச் சிறப்பும் முக்கியத்துவமும் வாய்ந்தவர் இளங்கீரன். ஏறக்குறைய 25 நாவல்கள் இவரால் எழுதப்பெற்றன. அவற்றுள் நூலுருப் பெற்றவை சில. பத்திரிகைகளில் தொடராக வெளிவந்தவை சில. இவரின் "தென்றலும் புயலும்" என்ற நாவல் 'ஆனந்தன்' இதழில் தொடராக வெளிவந்தது. பின்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1955 இல் நூலுருப் பெற்றது. ''நீதியே நீ கேள்'' 1959 இல் நூலுருப் பெற்றது ''புயல் அடங்குமா'', ''சொர்க்கம் எங்கே'' ''மனிதர்கள்'', ''இங்கிருந்து எங்கே'', ''காலம் மாறுகிறது'' ஆகியவை முறையே 1954, 1955, 1956, 1961, 1964 ஆகிய ஆண்டுகளில் தினகரன் பத்திரிகையில் தொடராக வெளிவந்த நாவல்களாகும். ''மண்ணில் விளைந்தவர்கள்'' 1960 இல் 'தமிழன்' பத்திரிகையில் வெளிவந்தது. ''அவளுக்கு ஒரு வேலை வேண்டும்'' 1972 வீரகேசரியிலும் ''அன்னை அழைத்தாள்'' 1977–78 சிரித்திரனிலும் வெளிவந்தன.

ஈழத்து முற்போக்கு எழுத்தாளர்களுள் மூத்தவரான இளங்கீரன் சுபைர் ஒரு முஸ்லீமாக இருந்தும், மார்க்க நெறியின் தளத்திலே நின்று இலக்கியம் படைத்தவரல்லர், மார்க்ஸீய நெறியின் தளத்திலே நின்று முற்போக்கு இலக்கியங்களைப் படைத்தவராவர். சமூகத்தில் நிலவும் ஏற்றத் தாழ்வுகளையும் முரண்பாடுகளையும் பொதுவுடைமைத் தத்துவத்தினூடாக அணுகி, தீர்வு காண விழையும் இளங்கீரன், காதல், தியாகம், பாசம் போன்ற தனிமனித உணர்வுகளையும் இணைத்துக் கதைகளை நடத்திச் செல்லுகிறார் தென்னிந்தியத் தி. மு. க. வின் போக்கில் ஊறித் திளைத்தவராகையால் அவரின் மொழிநடையிலும் அத்தகைய தன்மை படிந்திருக்கக் காணலாம்.

அடுத்து கிழக்கிலங்கைப் பிரதேச உணர்வு தொனிக்கும் வகையில் எழுந்த ''புதிய தலைமுறைகளை''த் தந்த, வை. அஹமத்தின் முயற்சியினைக் குறிப்பிடலாம். புதிய தலைமுறைகள் 1965 இல் சாகித்திய மண்டலப் பரிசினையும் பெற்றுக்கொண்டது. முதிய தலைமுறையினர்க்கும், புதிய தலைமுறையினர்க்குமிடையே உள்ளூர் அரசியல் தொடர்பாக எழுந்த, போட்டியைக் கதையம்சமாக்கி, வாழைச்சேனைப் பிரதேசமக்களின் வாழ்க்கைமுறைகள், பழக்க வழக்கங்கள், பண்பாட்டுக் கோலங்கள் என்பவற்றையெல்லாம் எடுத்துக்காட்டிக் கதைநடாத்திச் செல்லப்படுகிறது. 1962 இல் 'ஏமாற்றம்' நாவலை எழுதியவர் 'மாமா' என்ற புனைபெயரையுடைய என். எம். ஹனிபா அவர்கள். இவர், 1963 இல் 'மர்மக்கடிதம்' 1974 இல் 'இலட்சியப்பெண்' என்ற நாவல்களையும் எழுதி வெளியிட்டார். ஹமீதா பானு என்ற புனைபெயரில் டி. எம். பீர் முகம்மது 'கங்காணி மகள்' என்னும் நாவலையும், மருத புனையைச்சேர்ந்த மருதூர் வாணன் ஏ. லத்தீப் 'சூறாவளி' 'பெருநாள் பரிசு' ஆகிய நாவல்களையும் ஆக்கினர். சம்மாந்துறையைப் புகுந்த இடமாகக் கொண்ட எம். பி. முகம்மது ஜலீல் எழுதிய ''ஒரு வெள்ளைப்பூ சிரிக்கிறது'' ''ஒரு சரித்திரம் தொடர்கிறது'' ஆகிய இரண்டும் வாசகர்களின் பாராட்டுக்களைப் பெற்றன. மருதமுனை எம். ஐ. எம். முஸம்மில்; தினகரனில் ''பொய்மைகள் நிலைப்பதில்லை'' என்ற நாவலை 1977 இல் தொடராக எழுதி வந்தார். திக்வெல்லைக் கமாலும் அவ்வப்போது பத்திரிகைகளில் நாவல்கள் எழுதியுள்ளார்.

ஈழத்து முஸ்லீம் பெண்நாவல் ஆசிரியைகள் என்றளவில் வளர்ந்து விளங்குவதற்கு வாய்ப்புள்ள இருவரைக் குறிப்பிடலாம். ஒருவர் ஆசிரியையாகப் பணிபுரிந்து வரும் நயீமா ஏ. பஷீர். (இப்போது நயீமா சித்திக்) இவர் 1974 இல் 'வாழ்க்கைப்பயணம்' என்ற நாவலை எழுதினார். மற்றவர் கல்முனையைச் சேர்ந்த சட்டத்தரணி செல்வி பிரேஸா ஹுசைன் ''இரண்டு மனம் வேண்டும்'' 'தீ' ஆகிய இரு நாவல்களைப் பத்திரிகைகளில் எழுதியுள்ளார். மேலும் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் பாரதிவிழா தேசியகுழு 'தினகரன்' ஆதரவுடன் நடாத்திய குறுநாவல் போட்டியில், ஈழத்தின் குறிப்பிடத்தக்க இலக்கியகர்த்தாக்களான செ. யோகநாதன், செங்கை ஆழியான் ஆகியோருடன், தான் எழுதிய ''ஒருதாயின் குரல்'' என்ற குறுநாவலுக்கு இரண்டாவது பரிசினைப் பெற்றுக் கொண்டவரும் இவரே ஆவார்'

— 8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிபெயர்ப்பு நாவல் என்ற வகையில் பிரபல சிங்கள நாவலாசிரியர் மாட்டின் விக்கிரம சிங்காவின் ''கம்பரெலிய'' என்னும் கதையை ம. மு. உவைஸ் அவர்கள் தமிழில் 1964 இல், 'கிராமப் பிறழ்வு' என்னும் பெயரில் மொழி பெயர்த்துள்ளமையைக் குறிப்பிடலாம்.

இவ்வாறாக ஈழத்து முஸ்லீங்களின் பங்களிப்பு ஈழத்துத் தமிழ் நாவல் வரலாற்றில் முக்கிய இடம் பெறுவதோடு வளர்ச்சியிலும் கணிசமான இடத்தினைப் பெறுகிறது.

தமிழிலக்கியப் பரப்பின் இன்னொரு துறையான சிறுகதைபற்றிய துறையில், ஈழத்து முஸ்லீங்களின் பங்களிப்பு என்னும் பொழுது, இத்துறையில் குறிப்பிடத்தக்க வெற்றியினை இவர்கள் ஈட்டத்தவறி விட்டார்கள் என்று, இரசிகமணி கனக செந்திநாதன் அவர்கள், தமது 'ஈழத்து இலக்கிய வளர்ச்சி' என்னும் நூலில் கூறியுள்ளார். இதனையே இப்பொழுதும் கூறவேண்டியுள்ளதெனினும் ஈழத்தின் சிறுகதை இலக்கியத் துறைக்கு ஈழத்து முஸ்லீம்களால் அளிக்கப் பட்டுள்ள பங்களிப்பினைப்பற்றிப் புறக்கணித்து விடுவதற்கில்லை என்பதையும் கூறித்தான் ஆகவேண்டும்.

ஈழத்தின் முதற் சிறுகதைத் தொகுதியை வெளியிட்டவர் ஒரு முஸ்லீம் எழுத்தாளரான மு. மி. சாகுல் ஹமீது எனப்படுகின்றது. இக்கூற்றுச் சரியாயின் ஈழத்து முஸ்லீங்கள் பெருமைப்படலாம். முஸ்லீம் சிறுகதை எழுத்தாளர்களுள் முன்னோடியாக விளங்குபவர், 'பித்தன்' எனப் புனைபெயர் பூண்ட கிழக்கிலங்கையைச் சேர்ந்த கே. எம். ஷா ஆவார். இவர் 'சுதந்திரன்' பண்ணையில் வளர்ந்தவர். பித்தன் எழுதிய சிறுகதைகளுள், 'பாதிக் குழந்தை' 'தாம்பத்தியம்' என்பவை சிறந்தனவாகக் கொள்ளப் படுகின்றன. பித்தன் குறைவாக எழுதினாலும் ஈழத்துச் சிறுகதை வரலாற்றில் ஒரு சிறப்பான இடத்தினைப் பெற்றுவிட்டார். 'மதவாதிகளின் கபடதாரித்தனத்தை குத்திக் காட்டுகிறது இவரது 'பாதிக் குழந்தை'. அஸ. அப்துல்ஸமதுவும் கிழக்கிலங்கையைச் சேர்ந்தவரே. மரபு வழிநின்று அதிகமான சிறுகதைகளை இவர் எழுதியுள்ளார். ''எனக்கு வயது பதின்மூன்று'' என்ற சிறுகதைத் தொகுதியில் இவரது சிறுகதைகள் வெளிவந்துள்ளன. மருதூர்க் கொத்தன் (வி. எம். இஸ்மாயில்) எஸ். பொ. வின் பாணியைப் பின்பற்றிச் சிறுகதைகளை எழுதியவர். ''வேலி'' என்ற சிறுகதை இவரது படைப்பாற்றலை எடுத்துக் காட்டுகிறது. 'அ மு தன்' என்ற புனைபெயரில் எஸ். ஐ. நாகூர்க்கனி சிறுகதைகளை எழுதிவருகின்றார். இவரது சிறுகதைத் தொகுதி ''தூரத்துப் பூபாளம்'' அண்மையில் கொழும்பு வாழைத் தோட்டம் இஸ்லாமிய நலவுரிமைச் சங்கத்தினரால் வெளியிடப்பட்டது. இன்னும் மருதூர்க்கனி, மருதூர்க் கொத்தன், திக்வெல்லைக் கமால், எம். எல். எம். மன்சூர், எஸ். எம். ஹனிபா, எச். எம். பி. முகைதீன், ஏ. இக்பால், கலைவாதி கலீல் போன்றவர்களெல்லாம் ஈழத்துச் சிறுகதைத் துறைக்குத் தம்மாலான பங்களிப்பினைச் செய்து வரும் இளைய தலைமுறையினர் ஆவார்கள்.

நாடகத்துறையின் வளர்ச்சியில் முஸ்லீம் இலக்கிய வாதிகள் போற்றத்தக்க அளவு செய்யவில்லை என்பதை ஒப்புக்கொள்ளலாம். இதற்கு ஒரு காரணம் ஒருபாலார் இன்னொரு பாலாருக்குரிய ஆடைகள் அணிந்து வேடமிட்டு நடிப்பது இஸ்லாமிய மார்க்கத்தில் விலக்கப்பட்டுள்ளமை ஆகும். எனினும் நாடகம் விலக்கப்பட்டதாகவில்லை. எவ்வாறாயினும் அங்கொன்று இங்கொன்றாகச் சிலர் ஈழத்து நாடக வளர்ச்சிக்கு அளித்துள்ள பங்களிப்பினையும் மனங் கொள்ளத்தான் வேண்டும்.

மன்னார் மாதோட்டப் புலவர்களான பக்கீர் புலவர் என்பவர் ''சாந்தரூபி'' நாடகத்தினையும், சி. முகைதீன் ''கப்புடையார்'' ''கபுகரகு'' ''காஞ்சிநாடகம்'' ஆகியவற்றையும் ஆக்கியுள்ளனர். எம். ஏ. அப்பாஸ் ''கள்ளத்தோணி'' ''துரோகி'' ஆகிய நாடக நூல்களை எழுதியுள்ளார். 'கள்ளத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோணி' நாடகம் அப்பாஸின் துணிவுக்கு ஒரு சான்று என்று கூறப்படுகிறது. எம். நஸ்ருதீன் அவர்களின் மேடை நாடகம் "அழாதே கண்ணே" பெரும் பாராட்டினைப் பெற்றது. ஆர், என். ஸைபுத்தீன், எம். நஸ்ருதீன் போன்றவர்கள் சிறந்த வானொலி நாடகங்களை எழுதியுள்ளனர். சமகால, அரசியற் சமூக பிரச்சினைகளை உள்ளடக்கமாகக்கொண்டு 1970 களில் சுஹைர் ஹமீட் தயாரித்த "ஏணிப்படிகள்" "வேதாளம் சொன்னகதை" "பொம்மலாட்டம்" "நகரத்துக் கோமாளிகள்" ஆகியவற்றோடு, பௌசுல் அமீர் எழுதித் தயாரித்த "பிள்ளைப்பெத்த ராசா ஒரு நாயை வளர்த்தார்" என்ற நாடகத்தினையும் குறிப்பிட்டுச் சொல்லலாம். ஜுனைப் எஸ். முத்துமீரானின் ஐந்து நாடகங்கள் தொகுக்கப்பட்டு நூலுருப் பெற்றுள்ளமையும் குறிப்பிடத் தக்கது. இன்னும் எத்தனையோ இளம் நாடக எழுத்தாளர்கள் வானொலி நாடகங்களையும் எழுதி வருகின்றார்கள். ஈழத்து தமிழ் இலக்கியப் பாதையில் விமர்சனத் துறை இன்னும் வளர்ச்சியடையவில்லை. இந்தநிலையில் ஈழத்து முஸ்லீம்கள் விமர்சனத் துறைக்கு ஆற்றிய பங்களிப்புப் பற்றிய பேச்சு கனமற்றதொன்றாகவே தோன்றும். எனினும் ஈழத்து தமிழிலக்கிய விமர்சனத்துறையில் க. கைலாசபதி, கா. சிவத்தம்பி போன்று முன்னணியிலில்லாவிட்டாலும், ஏ. எம். ஏ. அஸீஸ், M. M. உவைஸ், எச். எம். பீ. முகைதீன், இளங்கீரன், எம். ஏ. நுஃமான், எஸ், எம். ஜே. பைஸ்தீன், எம். எச் எம் சம்ஸ், எம். எம். எம். மஃறூப் போன்றவர்கள் தங்களாலியன்ற பங்களிப்பினை வழங்கிவந்துள்ளார்கள் என்று துணிவுடன் கூறலாம்.

கட்டுரைவகையில் அறிஞர் ஏ. எம். ஏ. அவஸீஸ் அவர்கள் எழுதிய 'தமிழ்யாத்திரை', 'மிஸ்ரின் வசியம்', 'ஆபிரிக்கப் பயணம்' ஆகியனவும், எம். எம். உவைஸ் அவர்கள் எழுதிய 'இஸ்லாமும் இன்பத் தமிழும்', 'இஸ்லாமிய இலக்கிய ஆராய்ச்சி' என்பனவும், எச். எம். பீ. முகைதீன் எழுதிய 'இஸ்லாமும் தமிழும்', இக்பால் பற்றிய கட்டுரைகளும், பாரதிகண்ட சமுதாயம் என முற்போக்கு எழுத்தாளர் இளங்கீரன் எழுதிய கட்டுரையும் சிறப்பிடம் பெற்று விளங்குகின்றன.

இவ்வாறாக ஈழத்து முஸ்லீங்களும், காலத்துக்குக் காலம், தம் தாய்மொழியாம் தமிழின் வளர்ச்சிக்கும், சிறப்புக்கும், செய்யுள், கவிதை, சிறுகதை. நாவல், நாடகம், விமர்சனம், கட்டுரை போன்ற இன்னோரன்ன பல்வேறு துறைகளிலும், தம்மாலியன்ற பங்களிப்பினைச் செய்து வந்துள்ளனர் என்பதைக் கூறுவதில் மமிழ்ச்சியடையலாம்.

MUSLIM CONTRIBUTION TOWARDS TAMIL LITERATURE

Historically the origin of the Muslims of Sri Lanka can be traced up to the eighth century A.D. But from where they came is murky as some say that they hailed fromi Arabia and others say it was from South India and yet others say that the Arabian traders took wives from Tamil areas and hence merged as part of the citizenary, and latter spread out to the entire Island. Be it as it may, however the irrefutable fact remains thatTamil is their mother tongue, spoken in every muslim home whether it is in Batticaloa or Beruwala, or Jaffna on Yapahanu.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Not only is Tamil rieht mother tongue but also they have taken unto themselves several of the Tamil customs such as the thalii and kurai ceremony at weddings, the lighting of the traditional oil lamp on auspicious occassions, the widows wearing white and even the custom of asking dowry for the bridegroom discarding the Arabian tradition of asking a bride price.

Therefore the Muslims of Sri Lanka like the Muslims of South India are beholden to the Tamil culture and customs which have nuomilrtured them for more than one thousand two hundred years.

To the Sri Lankan Muslims, releigon is their soolwed and language their living breath. Therefore it is no wonder that they give first place to Arabic thier life force followvery closely by Tamil their mother tongue. Hence it is a natural corallory that they should give expression to their cultural heritage in their mother tongue. As such, the Sri Lankan Muslims contribution to the growth and development of the Tamil literature, poetry, drama, fiction and other literary fields have been very significant.

A whole catalouge of names of contributors and their literary works in whatever field of learning it may be, can be culled to adorn several pages of this article. The penetrating factor is that the authors have hailed from Batticaloa to Beruwala, Maruthamunai to Mannar, Pothuvil to Puttalam and from every nook and cornerof Sri Lanka where a Muslim lives. It can be very proudly laid down that the first Sri Lankan Tamil Novel "The Story of AZENBE" was written, in *1885* by the indomitable scholar Sithi Lebbe.

Several of the Muslim scholars have been contemporaries of the illustrious Sri La Sri Arumuga Navalar with whom several discourses in Islam Hindusm and Tamil cultural have taken place.

It is no cause for wonder that the Sri Lankan Muslims did yeoman service to the growth of Tamil literature, Art, Culture, Drama and Poetry. It is but natural that they should do so because he became articulate in this own beloved mother tongue giving expression to his innermost soul.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைத் தமிழ்மொழி

— சு. சுசீந்திரராசா —

இலங்கையில் தமிழ் மொழி பல நூற்றாண்டுகளாக வழக்கில் இருந்து வருகின்றது. இதன் காரணமாக இலங்கைத் தமிழ் மொழி சில சிறப்பான இயல்புகளைப் பெற்றுள்ளது. அவ்வியல்புகளில் சிலவற்றைச் சுருக்கமாகக் கூறுவதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

இலங்கையில் தமிழ் மொழி பல நூற்றாண்டுகள் வழக்கில் இருந்து வந்த காரணத்தினாலே தமிழ் மொழி அறிவும் சிங்கள மொழி அறிவும் கொண்ட மக்கள் சமுதாயம் ஒன்று பண்டைக் காலத்தில் உருவாகி இருந்தது. இச் சமுதாயத்தில் இருந்த இரு மொழி அறிவு பெற்ற மக்கள் தொகையைப் பற்றிக் கூறுவதற்கு ஆதாரம் எதுவும் இல்லை. ஆயின் தமிழ் மொழிக்கும் சிங்கள மொழிக்குமேற்பட்ட தொடர்பையும் அத் தொடர்பால் சிங்கள மொழியில் தோன்றிய விளைவையும் நோக்கும் போது இரு மொழி அறிவு கொண்ட மக்கள் சமுதாயம் ஒன்று இருந்தது என்பதையும் அச் சமுதாயம் மூலம் தமிழ் மொழியின் செல்வாக்கு குறிப்பிடத்தக்க அளவிற்குச் சிங்கள மொழியில் பரவியது என்பதும் புலனாகிறது. தமிழ்ச் சொற்கள் பலவற்றையும் தமிழ் மொழி (திராவிட மொழி) அமைப்புக்களையும் சிங்கள மொழியில் காண்கிறோம். தமிழ் மொழியையும் சிங்கள மொழியையும் ஒப்பு நோக்கி ஆராய்வோர் சிங்கள மொழியையும் ஹிந்தி போன்ற வட இந்தோ ஆசிய மொழிகளையும் ஒப்பு நோக்கி ஆராய்ந்தால் தமிழ் மொழித்தொடர்பால் சிங்கள மொழியில் தோன்றிய மொழிவிளைவுகளை எளிதில் உணர்வர்.

அப்பா, அக்கா, அய்யா போன்ற உறவுப் பெயர்களும், சோதி (ஹொதி) இடியப்பம் போன்ற உணவுப் பெயர்களும் கத்தி, மூட்டி, கொட்டில் போன்ற பொருட் பெயர்களும், மூளை, மணிக்கட்டுப் போன்ற உடல் உறுப்புப் பெயர்களும், பாத்தி, வயல் (வெல்) போன்ற உழவுத்துறைப் பெயர்களும், கால், அரைக்கால், படி, சேர், சுண்டு போன்ற அளவுப்பெயர்களும் வீசு, நடத்து பாவி, உதவு, அடிக்கு போன்ற வினைகளும் சிங்கள மொழியில் வழங்கக் காண்கிறோம். 'எனக்கு வேண்டும்,' நான் படிக்கிற புத்தகம் நல்லது,' 'நண்பர் மூன்று பேர்,' கோப்பிசரி தேநீர் சரி' போன்ற வாய்க்கிய அமைப்புக்களையும் சிங்கள மொழியில் காண்கிறோம் தமிழில் இன்று வழக்கிலில்லாத வட்டக்கா(ய்) போன்ற சில சொற்களையும் சிங்கள மொழியில் காண்கிறோம்.

இத்தனைக்கும் இலங்கைத் தமிழ் மொழியில் சிங்கள மொழியின் செல்வாக்கு என்றோ தொடர்பு என்றோ எதனையும் விதந்து கூறுவதற்கு இல்லை எனலாம். முருங்கை என்னும் சொல்லை சிங்களச் சொல் என்று காட்டப்பட்டு வந்தது. ஆயின் அதுவும் திராவிட மொழிச் சொல் என்று அண்மையில் சான்றுகளுடன் நிலைநாட்டப்படாது. இலங்கையில் சிங்களவர் மத்தியில் நெடுங்காலம் வாழ்ந்து வரும் தமிழ் மக்களின் பேச்சுத் தமிழில் மட்டும் ஒரு சில சிங்களச் சொற்கள் புகுந்துள்ளன.

இந் நிலையில் நமக்கு சில ஐயங்கள் எழலாம். முன்னர் குறிப்பிட்ட இரு மொழி அறிவு பெற்ற அன்றைய சமுதாயத்தில் வாழ்ந்தோர் யார்? தமிழர்களா? சிங்களவர்களா? தமிழர்களும் சிங்களவர்களுமா? இரு மொழி அறிவு ஓர் இனத்தின் பாற்பட்டதாக மட்டும் இருந்ததா? இரு இனத்தின் பாற்பட்டதாக இருந்ததா? அன்றைய சமுதாயத்தில் வாழ்ந்தவர்கள் தமிழர்கள் என்றால் அல்லது தமிழர்களும் சிங்களவர்களும் என்றால் தமிழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழி சிங்கள மொழியின் இயல்புகளைப் பெறவில்லையா? அன்றைய சமுதாயத்தின் மொழி நோக்கைப் பற்றி கூற முடியுமா? இவற்றை விரிவாக ஆராய்தல் வேண்டும்.

அன்று சிங்கள மக்கள் இலங்கையில் வழங்கி வந்த தமிழ் மொழியுடன்தான் இந்தியாவில் வழங்கி வந்த தமிழ் மொழியுடன் அன்று—நெருங்கிய தொடர்பு கொண்டுஇருந்தார்களென்று கொள்வதில் தவறில்லை, கி.பி. 15ம், 16ம் நூற்றுண்டுகளில் வாழ்ந்த சிங்களக் கவிஞர்கள் தமிழ், வடமொழி, பாளி, ஆகியமூன்று மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்றவர்களையே அறிஞர் எனக் கருதினர். இதன் மூலம் மொழி பெற்றிருந்த சிறப்பை ஓரளவு உணர்ந்து கொள்ள முடியும்.

இந்தியாவில் வழங்கும் தமிழ் மொழியோடு இலங்கைத் தமிழ் மொழி காலப் போக்கில் தொடர்பற்றகாரணத்தால் இலங்கைத் தமிழ்மொழியில் குறிப்பாக இருவிளைவுகள் தோன்றின.

மொழியில் காலப்போக்கில் மாற்றங்கள் தோன்றுவதுண்டு. இந்தியத் தமிழ் மொழி மாற்றமடைந்து கொண்டு வந்தது. இலங்கைத் தமிழ்மொழியும் மாற்றமடைந்து கொண்டு வந்தது. நெருங்கிய தொடர்பற்ற நிலையில் இந்தியத் தமிழும் இலங்கைத் தமிழும் மாற்றத்தைப் பொறுத்த வரை ஒன்றை மற்றது தாக்கியதாகத் தெரியவில்லை. இரண்டிலும் பெரும்பாலும் தனித்தனிப் போக்குகளையே காண்கிறோம், எனவே சிறப்பாகப் பேச்சைப் பொறுத்தவரை இரு மொழிவகைகளும் பிரிந்து நிற்கக் காண்கிறோம். இந்தியத் தமிழில் தோன்றிய மாற்றங்கள் அனைத்தும் இலங்கைத் தமிழில் எழவில்லை. எனவே இலங்கை தமிழில் பழைய இலக்கண அமைப்புகளையும் சொற்களையும் காண்கிறோம் இதனால் ஒரு கால கட்டத்தில் இந்தியத் தமிழர் இலங்கைத் தமிழுக்கு மதிப்பளித்தார்கள். இலங்கைத் தமிழ் சிறப்பாக யாழ்ப்பாணத் தமிழ் செந்தமிழ் என்றனர். மிகச் சிலர் இக்கருத்தை மறுத்தனர். மேலும் முன்புஎன்றுமே மொழியில் இருக்காத சில இயல்புகள் —அமைப்புகள், சொற்கள்—இந்தியத் தமிழில் தோன்றின. இவை இலங்கைத் தமிழில் தோன்றவில்லை. இவைஇவ்விருவகை மொழிகளையும் தனிப் போக்குடையனவாக்கின.

இலங்கைத் தமிழ் மொழி பிறமொழித் தொடர்பிலும் இந்தியத் தமிழில் இருந்து வேறாக நின்றது. அதன் சிங்களத் தொடர்பைக்காட்டினேம். சிங்கள மொழியிலிருந்து விதந்துகூறும் அளவிற்கு எதனையும் பெருத இலங்கைத் தமிழ்மொழி பிற மொழித் தொடர்பால் டச்சு, போத்துக்கேயம், ஆங்கிலம் போன்ற மொழிகளிலிருந்து பல சொற்களைப் பெற்றுள்ளது. அவை இன்னும் வழக்கில் உண்டு இந்தியத் தமிழின் பிறமொழித் தொடர்பும். அதன் முறையும் விளைவுகளும் வேறு வகையில் அமைந்துள்ளன.

இறுதியாக அண்மையில் எழுந்துள்ள ஒரு சில வேறுபாடுகளைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். இன்று இந்தியத் தமிழ், இலங்கைத்தமிழ் ஆகிய இரண்டும் தொழிற்பாட்டிம் பயன்பாட்டிலும் வேறுபடக் காண்கிறோம். இதற்குக் காரணம் நாடும் நாட்டு மக்களும், நாட்டு மக்களின் மொழி மனப்பான்மையும், நாட்டின் அரசியலுமே ஆகும். இந்தியாவில் தமிழ் எழுத்துக்களில் சீர் திருத்தம் செய்துள்ளார்கள். இலங்கையில் அதனைப் பின்பற்றுவதில் அக்கறை கொள்வாரைக் காணேம். இவற்றை எல்லாம் விரிவாக ஆராய்தல் வேண்டும்.

Sri Lanka Tamil Language

Sri Lanka Tamil language has a number of unique features as a result of its use and development in Sri Lanka through several centuries. Some of its unique features particularly in its structure, vocabulary and language contact are briefly pointedout herein.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Towards an understanding of the Culture and Ideology of the Tamils of Jaffna

Kartigesu Sivathamby

"Although the hero of this book is the Jaffna man, be certainly does not think himself in any heroic terms; it is for others to praise this representative of the human race: economical, conservative, religious, dour, hospitable, industrious, utilitarian, sober, generally educated, pessimistic, fatalistic, cynical, suspicious, competitive, litigious, emotional, fissiparous, expert on persons, speech-loving, caste ridden, superstitious, clerical-minded, family-centred tolerant of oppression, not civic-minded, authoritarian, male chauvinist, materialistic—these characteristics, some harmonious, some contradictory, describe a good portion of the Jaffna race. No individual is all of these."

Robert Holmes **Jaffna** 1980
Jaffna *1980* p.*4*

The Tamils of the Jaffna peninsula of Sri Lanka constitute the dominant Tamil group in the island. It is largely their experience at the national level and their perceptions of the Sinhalese and their motivations that have defined the Tamil grievances and decided the pattern of the struggle to redress them.

An attempt is made here to understand the Jaffna man in relation to two of the most important ideological perceptions he has of himself (a) the preserver of the great Saiva-Tamil tradition and (b) the heir to the liberal traditions of the West and the reformist traditions of Gandhi symbolised by the Jaffna Youth Congress Movement.

The Sri Lankan image of the Jaffna Tamil, as quite often seen in the cartoon of the national dailies, is that of "national wearing, verti-clad, and shawl wearing man with a "pottu" on his forehead, thereby implying that he is basically a Hindu. The relevant census figures of the Jaffna district for *1971* were Hindus *85.2%*, Roman Catholics *11.1%*, Muslims *1.5%*, Protestant *1.3%* & Buddhist *·8%*. Hindus have been considered the typical Jaffna Tamils, but of late, seen in terms of the socio political struggles, the Roman Catholics and Protestants, with their characteristic concern for the human predicament, have demonstrated their fidelity to their ethnic identity. The Muslims of Jaffna constitute a subcultural group within the Muslims of Sri Lanka. They are never taken for or viewed as Jaffna Tamils.

DEFINITION OF TERMS

If, as Stuart Hall observed "ideology is a term which does not tr p lightly off an English tongue" and "has stubbornly refused to be "naturalised" (S. Hall: *1978.* p *9*), it is such a "far-away" concept to the Jaffna man, whose door to the modern world is through his English language. There isn't yet an accepted glossary term for ideology in Tamil and the effort this writer to familiarise "Karuttunilai" as the Tamil equivalent has not met with much success. If at all an effort is made to understand it, it is to take it as almost offensive, political by loaded term, a synoymn for Marxism.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

It is true that in Marxism, especially in the writings of the French & the German Marxists, 'ideology' has been the subject of intensive & extensive analysis. But to brand it purely as marxist is to be not familiar with the writings of European sociologists (Lauis Dumont: 1980 p. 343).

James Klngman (undated: p.*15* explains it as follows

> "*As social intercourse develops, men form general concepts and views about the world and about their own social life, ideas of God, property, morality justice etc. Thus these develop the general systems of abstract ideas of society, of political, legal, religious. artistic and philosophic view-often called ideology. Such views and systems ot views are formed in men's minds as a product of their active relationship with external nature and with one another.*"

Althusser, defined ideology as a system (with its own logic and rigour) of representations (images myths, ideas or concepts, depending on the case) endowed with historical existence and role within a given society", insisted that "it is a structure essential to the historical life of societies" and emphasised that

> **"ideology (as a system of mass representations) is indispensable in any society if men are to be formed, transformed and equipped to respond to the demands of their conditions of existence"**

(Althusser: *1969*: pp *231-35*) f

Thus ideology is very important in any effort at social transformation.

Culture, on the other hand, is"*the sum total of material and spiritual values created by man in the course of social and historical development. It depicts the level of technical progress, production, education, science, lterature and the arts reached at a given stage of social development*(" (*Osipov. 1969p91*)

The relationship of "ideology" to "culture" is not far to seek. Ideology is the system of values & ideas and it could arise only from within a particular culture and, if it concerns itself with a changed environment of human living, is again concerned with a new culture. Ideology thus is the ideational abstracttion of a culture as a whole. Any ideology is bound to reveal its culture but with a difference, that culture and ideology which is emphasised by the group and extolled as its representative is not an arithmetical aggregate of all the varied forms of material and spiritual existence within the group., **but the ideational aspects of the social life of the dominant social group within it.**

Thus an effort at identifying the major ideology of a social group would also reveal to us the "dominances" within the group and if one has a vision to become essential to look carefully into the need for the change in "dominances" within that group.

One of the vital needs fcr the study of the culture and ideology in any particular society, especially by those who are interested in social change, is to understand how the culture and its institutions are saturated with the ideology of the dominant group and how this 'hegemony' obtains for the group in authority.

Antionio Gramsci formulated this concept of hegemony. In his analysis

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

of how the working class has come to accept capitalism, he showed how the "hegemonic system of power was used to obtain 'consent' from the popular masses which it dominated'. "Hegemony means the ideological subordination of the working class by the bourgeouise" (Perry Anderson: 1977. p27) "Its mechanisms of control for securing this consent lay in a ramified network of cultural institutions—schools, churches newspapers, parties, associations—inculcating passive subordination in the exploited classes via an assemblage of ideologies woven from the historical past and transmitted by intellectual groups auxiliary to the dominant class" (Perry Anderson: 1976. pp 79-80)

This concept of hegemony is of particular interest to societies of the third world. In their effort to establish their identity, most of these societies highlight pre-modern cultural symbols, which carry within themselves feudalistic non-egalitarian ideologies. Many a country in the South and the South East Asian region have adopted 'policies' by which, in their anxiety to preserve pre-colonial art forms, have only consolidated the patron-client relationship, the state being the new patron. This had meant, in practical terms, political acqueisance by artistes to those in power. And thus the very state support has inhibited the growth of any dissident tradition in the arts.

It is therefore important that the ideology of the traditional society and the manner of its transmission in present society is fully studied.

—9

PAUCITY OF SOCIAL RESEARCH ON JAFFNA

It is when we launch on a study like this motivated by the need to know more about our society to understand it adequately, that we find that Jaffna lacks in width and depth the sociological and the anthropological analyses that one finds so readily available relating to the Sinhalese. Sciences services have not been able to attract as many as those attracted by the Physical and the Technical Sciences and by Medicine. The few outstanding sociologists we have, have not been specialising on The Sri Lankan Tamils. It is a pity that we do not have scholars of the calibre of Gananath Obeyasekara Newton Gunasinghe writing on Tamil society and its culture.

The number of foreign scholars interested in the study of Sri Lankan Tamils are also few when compared with the number working on Sinhala society. The foreign scholars who have done work on the Jaffna Tamils are M.D Raghavan, Michael Banks, Kenneth David, Bryan Pfaffenberger, E.Skjonsberg. Banks, David and Pfaffenberger gone into the social structure of the Tamils, especially into the caste system, as it operates in Jaffna. Skjonsberg's study relates to the women workers working in the Cey-Nor project. None of these studies has gone into the problem of social formation in Jaffna, which is perhaps the most urgent academic task facing the analysts of Jaffna. Newton Gunasinghe, in the course of his research on "'Peasant Agrarian systems and structural transformation in Sri Lanka" (A study conducted by the Social Scientists Association of Sri Lanka for

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SAREC) went into the question of the land tenures in a note on "Towards a conceptional framework for the study of classes and castes in Jaffna Peninsula" (undated *1982*?)

Of those writing from Jaffna, Balakrishnan, Nithiyananthan and Sivathamby have to their credit some publications on the economic and the socio political aspects-the first two writing on the former and the third on the latter.

This study does not claim to have used all of the researches that have been done in Jaffna; it is more intended to attract the attention of scholars to this problem.

A SOCIO-ECONOMIC DESCRIPTION OF THE SOCIETY

Balakrishnan describes the basic pattern of the socio-economic arrangement that sustain Jaffna thus.

"*Agriculture business and trade professional employment and fishing constitute the major segments of economic activity involving the people of the region. The major economic activities and the corresponding social relations had been in many respects conditioned by the traditional caste system. The development of the major economic activities also reflected the emerging class division making caste-class interelationship a dominant facet in the social relations of production*"

(**Balakrishnan** 1983)

Perhaps the most important aspect of the social structure of Jaffna is the **caste system.** The implications of the term 'caste system' are quite important. As Dumont pointed out "the caste system is above all a system of ideas and values, a formal comprehensible rational system a system in the intellectual sense of the term" (Louis Dumont 1980 p 35) And an effort should be made to understand the **system.** It is not merely a question of various castes existing independent of the other; it is essentially a question of studying the inter relationships of these castes which constitutes a social system peculiar to Jaffna.

All the sociologists who have studied the Jaffna system have identified the main characteristic of the caste system in Jaffna—the dominance of the vellala caste. Pfafferberger has gone into the implications of the sudra domination (for in the varna hierarchy the vellalas would be only Sudra's)Pfaffenberger1982) It would be useful here to remind the concept of cat-sudras (the good sudras) advocated by Arumuga Navalar in his effort to preserve the ritual hierarchy.

The unassailable fact that this is a caste society makes this a hierarchical one, and the hierarchy the caste system imposes is seen in

(a) contact and untouchability and

(b) power and territory.

The significiant fact about this hierarchy is that it has religious sanction or at least as Dumont says, it is religious in nature. The status ranking that the hierarchy implies is adhered to best when there is a caste profession continuous Religion insists on it only in certain cases. The historical conditions in Jaffna (like availability of education through missionary activities) created a situation in

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

which the various caste groups could get into 'neutral jobs' in relation to religious practice. Jobs in government service are good examples of such neutral jobs.

Kenneth David classifies the caste relations in Jaffna as (a) the bound modes. and (b) unbound relation—the bound mode refers to the relations between the dominant landowner caste and the serving castes and the non-bound relations refer to the relationship "between artisans and fishermen on the one hand and the other castes" (K. David 1973. pp 31-33)

The process of "westernisation", (coming thorugh education in missionary schools. the concept of equality on the eyes of the law etc) brought in many changes and the dependance in the dominant caste has been severed rather early. The unbound groups were the first to emerge on par with the dominant caste.

In the colonial set-up social power came through the "government job" and any body who could get a government job had the necessary social authority. So the main task of the priviledged groups was to see that these benefits are shut away from the lower groups, who were legally entitled to it. This led to problems in admitting children of so called lower castes to schools. There was an attempt at a social control of education at the rural level.

Because the absence of merchant capital and industrial capital in Jaffna, the (educationally) enterprising went into public service with the professional jobs (engineering, medicine) coming up high in the list of preferences.

Caste hierarchy imposes endogamy within the same status group. Until the fifties, the lineages (pakutis) within the castes were the units of endogamy, but now even the distinction of the sub-castes are forgotten and the tendency is to form "mega-caste" groups. Thus many sub-caste groups like Akampadiar, Madapalliar etc are "forgotten" and all of them are subsumed under the mega-vellalla group. Like wise the distinctions between Mukkuvar and Karaiyar etc are forgotten and a mega-karaiyara group is evolving.

Placed hierarchically, the middle groups had problems of determining their exact rank. As is usual, ranking within a village depended on the socio-economic power the group could wield. This led to many castes hostilities earlier.

Caste hostilities were also fanned by religious conversions for conversion to Christianity offered equal status, atleast theortically. There had been many nations tn which the Catholic and the Protestant churches had to agonizingly take cognizance of the (a) class formaton and (b) political problems which all Tamils face as one ethnic group until the caste contradiction is played down.

It is against the back ground of this description that we have to analyse some of the important ideologies relating to Jaffna society.

THE SAIVA—TAMIL IDEOLOGY

The most important, if not the charcteristic feature of the culture of the

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Tamils of Jaffna, according to its Hindu publicists is the unity of the Saiva-Tamil traditions, ie, Jaffna culture is based on the Saivite principles as enumerated in the Tamil religio- literary texts. Saivaism, the religion and Tamil, with its literary tradition, are taken as constituting one indivisible unit.

The Saiva-Siddhanta school of Hinduism is taken as the philosophical sheet-anchor of this world view of Saiva-Tamil amalgam. Arumuga Navalar (1822-1879) who fought against Christians, especially the Protestant missionaries is taken as the fountain and the symbol of this Saiva-Siddhanta based Saiva-Tamil legacy.

The implications of this ideology are far-reaching. This ideology which evolved out of the nineteenth century movement in Jaffna to preserve the traditional identity of the Jaffna Tamils in the face of the educational and cultural onslaught of the Christian missionaries is keen to establish the Tamil literary and cultural tradition as something exclusive to the Saivaites.

In fact this view of the Tamil heritage would not be true as it rejects also the contribution of the Buddhists, the Jains' the Ajivilkas and the Muslims to the formation of Tamil culture.

The exclusiveness it advocates has a social meaning within Jaffna for Saiva-Tamil indivisibility would enable the continuity of the pre-western social structure of Jaffna.

By basing this 'indivisibility of Saiva Tamil traditions on the philosophy of Saiva Siddhanta, the religio-cultural importance of the dominant caste is maintained for Saiva Siddhanta, as a school of thought is generally associated with the non- Brahmin, Vellala aristocracy of Tamil Nadu. The formulation of the doctrine of Saiva Siddhanta & the fostering of its tradition has largely been in the hands of non-Brahmin, Vellalas. It is significant to note that Saiva Siddhanta is critical of the Advaita concept as expounded by Sankara, and has always maintained that its (Saiva Siddhanta) exposition is the undiluted Advaita.

Saiva Siddhanta school of thought upholds hierarchy. While it accepts that the devotees in the four stages Caryai, Kiriyai, Yogam & Gnanam, are entitled for liberation, if categorically that they would be at different levels of the liberated state (Saloka, Samipa, Sarupa, Sayucciya). The liberated state is not one where all are equal in the presence of the God. (Sivathamby 1983 pp 103—128)

The politico-cultural figure that emerges out of this ideology is Ponnambalam Ramanathan. The great Navalar fought for his nomination. It is interesting to note that P. Arunachalam is not given this distinction. If one takes into count the bare political conservatism ofRamanathan, his refusal to support adult franchise, one could understand the social significance of this ideological tie-up.

The hegemonic function of this ideology should be analysed more closely. Understanding the historical necessity for the rise of Saiva Tamil ideology is

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

one thing, insisting that it constitutes the core of Jaffna culture is another.

THE LIBERAL IDEOLOGY OF THE YOUTH CONGRESS

It is interesting to note that while at the level of the continuity of tradition there is an effort to emphasise the exclusive Saiva-Tamil tradition, in the political arena, the liberal tradition that exuded out of Jaffna College that is symbolised in the activities of Handy Perinbanayagam is always highlighted to demonstrate to the non-Tamils the truly nationalist and rationalist approach to politics. (Silan Kadirgamar. 1980)

The Jaffna Youth Congress Movement was one of the important radical movements in Sri Lanka and it is historically true that some of the leading Tamil leftists were exposed to political activism through this movement.

But the crucial factor one has to take note of is the subsequent history of this movement within Jaffna. The failure of this movement resulted in the unpopularity of radicalism, whether intellectual or political. And thereafter until the recent impasse it had been a case of 'establishment politics'.

The quantitative and qualitative changes that bave taken place in the evolution of Tamilian nationalism, should be seen in the perspectivity of the liberal Youth Congress tradition. That would provide the nationalist ideology with a contiunity and possibility of development on social democratic lines.

REFERENCES

Althusser, Louis

For Marx (Tr B. Brewster)
Penguin Press - London 1965

Anderson, Perry

Considerations of Western Marxism
Verso Edition - London 1976
"The Antinomies of Antonio Granisci" in New Left Review 100 th issue London - 1977

Balakrishnan N.

A note on the Jaffna Peasantry
Paper presented at SSA/ISS Seminar, Recent, Economic, Political and Social Developments in Sri Lanka Dec. 1983

David, Kenneth

Spatial Organization and Normative Schemes in Jaffna, Northern Sri Lanka in Modern Ceylon Studies Vol 4: 1&2 January & July 1973 Peradeniya
The New Wind-Changing Identities in South Asia-Hague 1977

Dumont, Louis

Homo Hierarchinchus London1980
On Ideology London 1977

Holmes, R. W.

Jaffna 1980 - Jaffna 1980

Kadirgamar Silan

Handy Perinbanayagam:
A Memorial Volume Jaffna 1980

Klugman James

in Essays on Socialist Realism and the British Cultural Tradition
London (undated)

Osipov. G

Sociology Moseror 1969

Pfaffenberger B

Caste in Tamil Culture
Vikas New Delhi 1982

Sivathamby. K

Tamil Ilakkiyattil Matamum Manudanum Madras - 1983

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Notes

1. S. J. Tambiah, easily the leading Jaffna Tamil sociologist specialist in Thai Buddhism. His contribution in Bridewealth and Dowry (C.U.P. 1973) contains a detailed discussion on Dowry and the Property Rights of Women as found among the Jaffna Tamils. R. S. Perinbanaya, gam's Karmic Theatre-deals with Jaffna.

2. Dennis B. Mc Gilvary has worked on the Tamils of Batticaloa (Caste-Ideology and Interaction ed. Mc Gilvary C.U.P 1982) & K. Jeyaraman on Plantation Tamils.

3. Michael Banks Caste in Jaffna in Aspect of Caste in South India Ceylon & N. W. Pakistan (Ed) Leach CUP 1960
Kenneth David (see reference)
Bryan Pfaffenbergen (see reference)

4. Balakrishnan N. (see reference)
Nithiyanandan V. Economic Grievances of the Tamils–SSA Seminar 1981
Sivathamby K. Some Aspects of the Social Organization of the Tamils in Sri Lanka in Ethnicity & Social Change in Sri Lanka–Colombo 1984
The Sri Lankan Tamil Question ISS/SSA Seminar in Recent Develop ment in Sri Lanka Dec 1983

5. I am indebted to Professor Kumari Jayawardena for this point. I am grateful to her for the discussion I had with her on this problem.

6. Sivathamby. (See reference.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The Jaffna Public Library System

பொன்விழாப் பொலிவு காணும் பொதுசன நூலகம்

க. சி. குலரத்தினம்

தமிழ் நாட்டில் தஞ்சாவூரில் புகழ்பெற்ற சரஸ்வதிமகால் உண்டாவதன் முன், யாழ்ப்பாணத்தில் தமிழரசர் நாயன்மார் கட்டு என்னும் குளக்கரையில் நூலகம் ஆரம்பித்திருந்தனர். சென்ற நூற்றுண்டில் 1842 ஆம் ஆண்டில் நீதிமன்றக் காரியதரிசி கிறினியர் ஒரு நூலகத்தை ஆரம்பித்திருந்தார். அதன் பின் நீதிமன்றத்துச் சட்டத்தரணிகள் தங்கள் உபயோகத்துக்கென ஒரு சட்ட நூலகத்தை ஆரம்பித்திருந்தார்கள்.

இந்த நூற்றுண்டில் 1933 ஆம் ஆண்டில் நீதி மன்றக்காரியதரிசி க. மு. செல்லப்பா அவர்களின் சிந்தனையில் ஒரு நூலகம் வாசிகசாலையளவில் உதிப்ப அவர் கந்தமடத்து முதல் நூற்றுவர் என்னும் இளைஞர் முன்னேற்றச் சங்கத்தாரிடம் கருக் கொள்ளச் செய்தார். இளைஞர் விடுகள் தோறும் சென்று நூல்கள் சேகரிக்கத் தொடங்கினர்கள்.

இதற்குள் செல்லப்பா அவர்கள் பட்டணப்பகுதியில் லங்காஹோம் என்னும் மனைக்கு இடம் பெயர்ந்து, அங்கிருந்து 11-12-1933 ஆம் நாளில் உருக்கமான அறிக்கை விட்டார். அது செந்தமிழிலும் ஆங்கிலத்திலும் பிரசுரிக்கப் பெற்றுப் பரப்பப்பெற்றது. "a central Free Tamil library in Jaffna" என்பதே அதன் பழைய பெயராயும் அமைந்தது.

முதற்கூட்டம்

யாழ்ப்பாண மாவட்ட நீதிபதிகனம் C. குமாரசுவாமி C. C. S. தலைமையில் 9-6-34 ஆம் நாள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மண்டபத்தில் கூடிய கூட்டத்திலே குடாநாட்டின் பெரியவர்கள் பலரும் பல துறைகள், பண்ணைகள், திணைக்களங்கள் முதலிய நிறுவனங்களின் பிரதிநிதிகளெனக் கருதும் அளவில் வந்திருந்து கருத்துப் பரிமாறினர்கள்.

நீதவான் குமாரசுவாமி அவர்கள் தலைவராயும் கலாநிதி வணக்கத்துக்குரிய ஐசாக் தம்பையா அவர்கள் உபதலைவராயும், அரியாலையூர் அப்புக்காத்தர் C. பொன்னம்பலம் அவர்களும் செல்லப்பா அவர்களும் இணைச்செயலாளராயும் தெரியப்பெற்ருர்கள். காரிய நிர்வாக சபையில் பெரியவர்கள் பலர் இடம்பெற்றிருந்தார்கள். கல்வித்துறையின் பெரியவரான அருள் நந்தியும் காரிய நிர்வாக சபையை அலங்கரித்தார்கள். கல்லூரிகளின் அதிபர்கள் சிலர் இடம் பெற்றிருந்தார்கள்.

உருக்கமான வேண்டுகோள் ஆக்கபூர்வமான முயற்சி

செல்லப்பா அவர்கள் தமிழ்ப் பிள்ளைகளின் மேற்படிப்புக்கு வசதி செய்தலையே அழுத்தமாகப் பேசி, அதற்காகக் கிராமங்கள் தோறும் வாசிகசாலைகள் கிளம்ப வேண்டும். யாவும் மத்திய நிலையத்தோடு இணைதல் வேண்டும். அங்கத்தவர்கள் மாதாந்தம் 20 சதமாவது கொடுத்து தவுதல் வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். உடனடியாக அவருக்குக் கிடைத்த பணத்தில் 160 ரூபாவைத் தளபாடங்கள் செய்வதற்குக் கையளித்தார்.

வாசிகசாலை ஆரம்பம்

உயர் நீதிமன்றத்துப் பதிவாளராயிருந்து ஓய்வு பெற்ற பெரியார் R. C. புரொக்ரர் இளைஞர்களுக்கு வழிகாட்டியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் முகாமையாளராயும் கௌரவமான சேவை செய்வதற்கு முற்பட்டதும், முயற்றசியுள் முன்னேற்றத்து முதல் நூற்றுவரின் முதலாம் இளைஞரான C. S. இராசரத்தினம் கௌரவ நூலகராகப் பணிபுரிவதற்கு முற்பட்டுத் தம் நண்பர்கள் சேகரித்து வந்த நூல்களைத் தூசுதட்டி வரிசைப்படுத்தி வைத்திருந்தார்.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிவீதியில் மின்சார நிலயத்துக்குஎதிர்ப்பக்கமாகவுள்ள கடைகளில் ஒன்றை வாடகைக்கு எடுத்து அங்கே 1-8-1934 ஆம் நாள் வாசிகசாலையை ஆரம்பித்தார்கள். பலர் குவிந்திருந்து படிக்க ஆரம்பித்தார்கள். இருக்கை வசதி போதாமையால் பக்கீஸ் பெட்டிகள் மீதும் இருந்து படித்தார்கள்.

உள்ளூராட்சி மன்றம் பொறுப்பேற்றல்

யாழ்ப்பாணம் கொழும்புக்கு அடுத்த பெரிய நகராயிருந்தும் அக்காலத்தில் லோக்கல் போட், ஏர்பன்டிஸ்ரிக் கவுன்சில், ஏர்பன் கவுன்சில் என்று படிப்படி முன்னேறியே மாநகர சபையானது. நூலகம் ஆரம்பித்த காலத்தில் 1931 ஆம் ஆண்டில் தோன்றிய ஏர்பன்டிஸ்ரிக் கவுன்சில் J. U. D. C. இயங்கிவந்தது. அதன் முதல் தலைவர் அரியாலையூர் ஆ. கனகரத்தினம். அடுத்த தலைவர் R. R. நல்லையா அவர்கள். அதில் அரியாலையூர் சட்டத்தரணி R. சுப்பிரமணியம் ஒரு பெரியார். அவர் இந்த வாசிகசாலையை உள்ளூராட்சிமன்றத்திடம் ஒப்படைப்பதற்கான முயற்சியெடுத்தார்.

கையளிப்பு வைபவம் 1 . 1. 1935 ஆம் நாளில் கோலாகலமாக நடைபெற்றபோது, யாழ்ப்பாணத்து வரலாற்று நிபுணர் முதலியார் C. இராசநாயகம், முகாமையாளர் புரொக்டர், செயலாளர் செல்லப்பா ஆகியோர் தமிழர் கன்னிகாதானம் செய்த பாவனையில் வாசிகசாலையை உள்ளூர் ஆட்சி மன்றத்தலைவர் நல்லையா அவர்களிடம் ஒப்படைத்தார்கள். இங்ஙனம் ஒப்படைத்தபோது 844 தரமான நூல்களைக் கையளித்தார்கள். இவற்றுள் 694 நூல்கள் பொது மக்கள் அன்பளிப்புச் செய்தவை. எஞ்சியவைஅவ்வப்போது விலைக்கு வாங்கியவை.

உபகரித்த பெரியவர்கள்

நூல்களை ஒன்றிரண்டு எனத் தந்தவர் பெயர்களை விட்டு எட்டுப் பத்து பதினைந்து என அள்ளித்தந்தவர்கள் சிலரை இங்கே குறிப்பிடுதல் அமையும். வணக்கத்துக்குரிய கலநிதி தம்பையா அவர்கள், நாயன்மார் கட்டு வைத்தியர் இராமநாதன், வித்தியாதரிசி நல்லூர் கந்தையா, வணக்கத்துக்குரிய நல்லூர் ஞானப்பிரகாசர், ந. சி. கந்தையா பிள்ளை, சட்டத்தணி T. H. சுப்பையா. இவர்களோடு மன்றங்கள் சபைகள், சமயத்தாபனங்கள் கொடுத்த கொடையும் பெரிது. அதிமேற்றுணியார், கிறிஸ்தவ சேவாசங்கம், சென்னை பைபிள்சங்கம், வெஸ்லியன் சங்கம், கொழும்பு முஸ்லீம் சங்கம், யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை ஆகியோரை மறக்கலாகாது.

இடம் பெயர்ந்த வரலாறு

பெரிய கடைச் சூழலில் தினமும் காலை 8-00 முதல் மாலை 7-30 வரை திறந்திருந்த வாசிகசாலையில் தினமும் சராசரி ஐம்பதின்மர்நன் றுகக்கருத்தூன்றிப் படித்துப் பயன் பெற்றனர். இடவசதிரயின்மையால்வாசிகசாலையை உடனடியாகப் பறங்கித் தெருச்சந்தியில் உள்ள விசாலமான கடைக்கு மாற்றினுர்கள். அங்கும் இடம் போதாமையால் விரைவில் வாடிவீட்டுக்குத் தெற்கில் அமைந்த மழவராயர் மனையின் மேல் மாடிக்கு மாற்றினுர்கள். மேல்மாடியில் இருபெரும் விசாலமான மண்டபங்களும் ஒரு நீளமான விறுந்தையும் அமைவாக இருந்தன. மழவராயர் கட்டடத்துக்கு மாறிய காலம் 1936ஆம் ஆண்டாகும் அன்று தொடக்கம் நீண்ட காலமாக நிலவி வந்த நூலகத்தின் முதுகெலும்பாக நின்று பிடித்தவர் முன்னர் கௌரவ சேவை செய்த இராசரத்தினம் ஆவர், உள்ளூராட்சியார் நிரந்தர நூலகர் தேவையென விளம்பரஞ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்த காலத்தில் விண்ணப்பித்த பட்டதாரிகள் பலரைப் புறக்கணித்தவர்கள் மெற்றிக்குலேசன் சித்தியெய்திய இராசாத்தினம் அவர்களையே நியமித்தார்கள். அவர் தனியொருவராய்க் காலை 7 மணி முதல் மாலை 7 மணி வரை கடமையாற்றினர். நூலகத்தின்வளர்ச்சிக்கு நகரசபையாய் மலர்ந்த உள்ளூராட்சி மன்றத்துத் தலைவர்களும் காரியதரிசியராய்க் கடமையாற்றியவர்களும் கைகொடுத்து வந்தார்கள். நாளடைவில் தனியொருவர் நூலகத்தை நடத்துவது முடியாது எனக்கண்டவர்கள், ஜோர்ச்,சுப்பிர மணியம் ஆகிய இரு இளைஞர்களை உதவியாளர்களாக நியமித்தார்கள்.

புதிய நூலகர்

இராசாத்தினம் அவர்கள் பன்னிரண்டு ஆண்டுகள் வரைபணி புரிந்தபின் 1-2-1947 இல் புதிய நூலகர் க. நாகரத்தினம் அவர்களுக்கு இடங் கொடுத்து இளைப்பாறிக் கொண்டார். நாகரத்தினம் அவர்களின் முயற்சியும் பணியும் சுறு சுறுப்பானவை. இவர் பார்குமாரகுல சிங்கம் அவர்களின் உதவியால் வணக்கத்துக்குரிய ஐசாக்தம்பையா அவர்களின் நூல்கள் பலவற்றை நூலகத்துக்குப் பெற்றார். மேலும் பல பெரியார்கள் நூல்களை அன்பளிப்புச் செய்த வேளையில் நகரசங்கத்தார் ஆண்டு தோறும்நிதியொதுக்கி நூல்கள் வாங்கிக் குவித்தார்கள், தலைவர் சாம்சபாபதி அவர்களையும், காரியதரிசி பாலசுப்பிரமணியம் அவர்களையும் நினைவிற் கொள்ள வேண்டும்.

நூலகத்தின் அகலிப்பு வேலை

சுதந்திர இலங்கையில் யாழ்ப்பாண நகரம் மாநகர சபையினல் பரிபாலிக்கப் பெறத் தொடங்கிய வேளையில் நல்ல தொரு நூலகம் தனியாக அழகாக எழும்புதல் வேண்டும் யாழ்ப்பாணம் இலங்கை என்பன வோடு அமையாது, தென்கிழக் காசிய நாடுகள் புகழும் வண்ணம் அமைதல் வேண்டும் என்று நகர பிதா சாம் சபாபதி அவர்கள் நினைத்த போது, அப்படியே ஆகுக என்று வணக்கத்துக்குரிய லோங்பிதா ஆசீர்வதித்தார்.

அடிக்கல் நாட்டு விழா

பாரிய நூலகத்தை மாடிக் கட்டடமாகக் கட்டுவதற்கான நல்ல தொரு இடத்தை நகர் நிர்மாண நிபுணர் வீரசிங்கா முனியப்பர் கோயில் முன்னுள்ள முற்ற வெளியில் வகுத்ததைத் தமிழ் நாட்டுக் கட்டடக்கலை நிபுணர் நரசிம்மன் ஒத்துக் கொண்டதும் நல்ல ஆரம்பமானது. நகரபிதா சபாபதியவர்கள் 16-5-1952 முதல் '' யாழ்ப்பாண, மத்திய நூலகசபை '' என ஒரு ஆளுநர்சபையினை ஆரம்பித்தார்.

நகரபிதா, வணக்கத்துக்குரிய லோங்பிதா, பிரித்தானிய தானிகர் செசில் சையேஸ் அமெரிக்காதூதுவர் பிலிப் குரோல், இந்திய தானிகரின் முதற் காரிய தரிசி சித்தாந்தசாரி ஆகிய ஐவரும் 29-5-54 மாலை அடிக்கல்நாட்டினர். ஆசிய அபிவிருத்திப் பணி நிதி மூலம் அமெரிக்கர் 104000 ரூபா நன்கொடை நல்கும் வழி கண்டவர் லோங்பிதா. இந்திய தானிகரும் உடனடியாக 10, 000 ரூபா உதவினர்.

கைகொடுத்த களியாட்ட விழாக்கள்

யாழ்ப்பாணம் கண்டிரா வகையில் களியாட்ட விழாக்கள் காலந் தொறும் நடைபெற்றன. அவை 1952, 1954, 1959, 1963 என்னும் ஆண்டுகளில் கலை விழாக்கள். அதிருஷ்டலாபச் சீட்டிழுப்புகள் முதலான வருமானவழிகளோடு நடை பெற்றன. வர்த்தகப் பிரமுகர்கள் பெரும் பரிசுகளாகப் புதிய மோட்டார் வண்டிகளை அன்பளிப்புச் செய்திருந்தனர்.

புதுப் பொலிவும் பெயரும் திறப்பு விழாவும்

கட்டட வேலைகள் நடைபெற்ற காலத்திலேயே 17-10-1958 முதலாக 'யாழ்ப்பாண பொதுசன நூல்நிலையம்' என்னும் பெயர் வழங்கலாயிற்று. அதற்குப் பொது மக்களின் உபகரிப்பு 26-11-1958 நடைபெற்ற கொடித்தினத்தில் அதிகமாயிற்று. அன்றி 1959 ஆம் ஆண்டுக் களியாட்ட விழாவும் கை கொடுத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகத்தில் இடநெருக்கடி தவிர்க்க முடியாது போனபோது, கட்டிடம் முற்றாக மாடியீராகக் கட்டி முடிக்கப்பெறுமுன்பே கீழ்மண்டபத்தில் 11-10-1959 ஆம் நாளில் நகரபிதா அல்பிறெட் குடிபுகும் வைபவத்தை நடத்தினர். பாரிய நூலகத்துக்குப் பழம் பெரும் நூல்கள் பல கோப்பாய் வன்னியசிங்கம் அவர்களின் நினைவாகவும் வவுனியா பண்டிதர் இராசையனார் நினைவாகவும் கிடைத்தன. முதலியார் குலசபாநாதனிடம் பலவரிய நூல்கள் விலைக்குக் கிடைத்தன.

பட்டம் பெற்ற நூலகர்

அமெரிக்காவில் அற்லான்ராப் பல்கலைக் கழகத்தில் நூலகப் படிப்பில் எம் எஸ் சி என்னும் முதுமானிப் பட்டம் பெற்ற இ.வே. பாய்க்கியநாதன் அவர்களின் சேவை 28-8-1964 முதல் கிடைத்தது. அவருக்குப்பின் சுறுசுறுப்பான இளைஞர் பலரும் சேவையில் இடம்பெற்றனர். நூலகம் நன்கு விசாலித்து பல்லாயிரம் அங்கத்தவர்களைக் கொண்டு நிலவியது. பாக்கியநாதன் பழந்தமிழ் ஏடுகள் பலவற்றை உள்ளூராட்சி மந்திரியார் திருச்செல்வம் அவர்கள் உதவியால் தேடிச் சேகரித்து வைத்தார்.

கட்டட வேலையில் திராவிட நாகரீகம் பொலிவுபெறப் பொறியியலாளர் இ. வைத்திலிங்கம் பாடுபட்டார். ஆணையாளர் ஜெயசிங்கா தமிழறிந்தவராயிருந்து உதவி செய்தார். விசேட ஆணையாளகர்ள் நடேசன் மாணிக்கவாசகர் நல்ல உதவியாயிருந்தார்கள். காலந்தோறும் நகர பிதாக்களாயிருந்தவர்களான பெரியவர்கள் முயற்சி யெடுத்தார்கள்.

அமெரிக்க நூலகம் சங்கமித்தது

இருவேறு நதிகள் கங்கையமுனை ஒன்றிணைந்தாற் போல யாழ்ப்பாணத்தில் நிலவிய அமெரிக்க நூலகம் யாழ் நூலகத்தோடு இணைந்தமை பெரிய வரப்பிரசாதமாயிற்று. ஆயிரக்கணக்கான நூல்கள், ஒலிப்பதிவுகள், நாடாக்கள் முதலானவை கிடைத்தன. இன்னும் அனுபவம் வாய்ந்த நூலகர் ஒருவரும் வந்து வாய்த்தார். திரிவேணி சங்கம் என்பது கங்கை, யமுனை, சரஸ்வதி நதிகளின் கூட்டம். இதில் சரஸ்வதி அந்தர் வாகினியாக வடக்கில் உள்ளது. இங்கே சரஸ்வதி பிரதியட்சமாய் இரு நூலகங்களை இணைத்து நடுவே அழகிய திருவுருவில் காட்சி தருகிறது.

உலகப்புகழ்பெற்ற ஒப்பற்ற ஒரு நூலகம்

உடம்பெங்கும் குருதி பாய்ச்சும் இதயத்தின் நான்கு அறைகள் போல நூலகத்தின் மேல்மாடி கீழ்மண்டபம் ஆகியவற்றின் வட தென்பாகத்து மண்டபங்கள் நான்கும் அறிவூட்டிவந்தன. ஆயிரக்கணக்கான தேனீக்கள் மலர்ந்த பூக்களில் தேன் திரட்டினாற்போல இளைஞர் யுவதிகள் விரித்த நூல்களில் அறிவைத் தேடிப்போயினர். நூல்களின் தொகை, சஞ்சிகைகளின் தொகை, தளபாடவரிசை, நூலகத்தாரின் பணிவானசேவை படிப்பார்வத்தைவளர்த்த பான்மை சொல்லமுடியாது, எழுதமுடியாது.

நூலகர் பாக்கியநாதன் உத்தியோக உயர்வுபெற்று விரிவுரையாளராகப் போனதும், நாகரத்தினம் அவர்கள் ஓய்வுபெற்றதும், நகரபிதா அல்பிறெட் துரையப்பா அவர்கள் பகீரதப் பிரயத்தனத்தால் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக முதுமானிப் பட்டதாரியும் பரமேஸ்வராக்கல்லூரி அதிபராய் ஓய்வுபெற்றவருமான சி.சிவபாதசுந்தரம் அவர்களின் மேற்பார்வை சிலகாலம் வரப்பிரசாரமாயிற்று.

இன்றைய வளர்ச்சி

மறுபிறப்பெடுத்து மலர்ந்துவரும் நூலகத்துக்கு உலகம் உபகரித்துள்ளது. விசேட ஆணையாளர் சிவஞானம் நல்ல முயற்சி எடுக்கிறார். நூலகப்பணியில் பயிற்சிபெற்ற பெண்கள் பலர் நல்ல முறையாகப் பணிபுரிகிறார்கள். நூலகர் திருமதி ரூ. நடராசா தலைமையில் நூல்கள் பல்லாயிரக்கணக்காக வந்துள்ளன. தளபாட வரிசைகள் தயாராகின்றன. மெல்ல மெல்ல உய்தியும் உயர்வும் அடையும் நாள் நெருங்குகிறது. செல்லப்பரின் நினைவு நிலவுவதாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். பொது நூலகத்தின் அமைப்பும் சேவைகளும்

திருமதி ரு. நடராஜா

யாழ்ப்பாண பொது நூலகம் தன் அறிவொளியினை எரிக்கப்பெற்ற பல்லாயிரக் கணக்கான விலைமதித்தற்கரிய நூல்களது சாம்பல் மேட்டிலிருந்து மீண்டும் கதிர் பரப்பத் தொடங்கியுள்ளது. அறிவுலகமே பெருமைப்படக்கூடிய முறையில் நவ நூலகமொன்று உதயமாகி வருகின்றது. அறிவாலயங்களதும், அறிவாற்றல் பெற்ற பெரியோர்களது வரலாறும் என்றுமே முற்றுப் பெற்றதில்லை, எனும் வாக்குக்கிணங்க, நூலக அறிவு விருட்சம் வெட்டப்பெற்ற கிளைகளினின்றும், புதிய கிளைகளைத் தோற்றுவித்துப் பரந்த வளர்ச்சியினை மேம்படுத்த ஆரம்பித்துள்ளது. புதிய நூலக கட்டிடத்தின் நான்கு பெரும் மண்டபங்களும் நவீன நூலகங்களது செயற்பாடுகளைப் பின்பற்றியும், தமிழ் மக்களது பாரம்பரிய கலை, கலாச்சாரங்களை உலகறியச் செய்யும்வகையிலும் செயற்படவுள்ளது. மாநகர மக்களுக்கு மட்டுமன்றி யாழ் மாவட்ட எல்லை வரை தனது சேவையினைப் பரப்ப இந்நூலகம் முன்னிற்கின்றது.

பிரதான சேவைகளாவன —

உடமைகள் பாதுகாப்பிடம் —

நூலகத்தின் எப்பகுதியினையும் உபயோகிக்க விரும்பும் வாசகர்களது சொந்தப் பொருட்கள் யாவும் இவ்விடத்தில் வைத்துச் செல்ல வேண்டப்படுவர். இதற்குரிய அடையாளச் சின்னம் வழங்கப்படும். வெளியே செல்லும்பொழுது இச்சின்னத்தைக் கொடுத்து உடைமைகளைத் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம். பிரதான நூலக வாயிலில் இப்பாதுகாப்பிடம் அமைந்துள்ளது.

நூல்கள் பாதுகாப்பிடம் —

படிப்பகத்திற்குச் செல்பவர்கள் மட்டும் இப்பகுதியில் நூல்களைப் பதிந்து கொள்ளத் தேவையில்லை. நூலகத்தின் ஏனைய பகுதிகளிலிருந்தும் எடுத்துச் செல்லும் நூலகத்திற்குச் சொந்தமான நூல்கள் யாவும் இப் பகுதியில் பதிந்து செல்ல வேண்டப்படுவர். நூலக பிரதான வாயிலில் இப்பாதுகாப்புப் பகுதி அமைந்துள்ளது.

காட்சிக்கூடம் —

பிரதான நூலக கீழ்தரை நடுமண்டபமே காட்சிக்கூடமாக அமைந்துள்ளது. இனத்திற்கும், மொழிக்கும் தொண்டாற்றிய பெரியோர்களது உருவப்படங்கள் இப் பகுதியில் ஏற்றப்படவுள்ளது. புராதன கால நூல்களும், ஏட்டுச் சுவடிகளும், கையெழுத்துப் பிரதிகளும், கலாச்சாரத்தை விளங்கவைக்கும் கைப்பணிப் பொருட்களும் இங்கு வைக்கப்படும். நூலகத்திற்குப் புதிதாகச் சேர்க்கப்பட்ட நூல்களும் காட்சிக்காக இங்கு வைக்கப்படும்.

தமிழ் மக்களதும், நாட்டினதும் சிறப்பினை எடுத்துக் காட்டும் காட்சிப் படங்கள் இங்கு விற்பனைக்கு விடப்படும்.
நூல் இரவல் வழங்கும் பகுதி—

நூல் இரவல் வழங்கும் பகுதி —

பிரதான நூலக கீழ்த்தள வடபாகம் இரவல் வழங்கும் பகுதியாக இயங்குகிறது. மாவட்ட எல்லைக்குள் வசிக்கும் 14 வயதிற்கு மேற்பட்ட குடிமக்கள் அனைவருக்கும் இப்பகுதி தன் சிறந்த சேவையினை வழங்கி வருகின்றது. நூல்களை இரவலாக வழங்கலும், மீண்டும் பெறலும், அங்கத்தவர்களைப் புதிதாகச் சேர்த்தலும், துப்புர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பித்தல் செய்தலும், நூல்களை ஒதுக்கீடு செய்ய உதவுதலும், தண்டம் பெறலும், நினைவூட்டும் கடிதங்களை அங்கத்தவர்கட்கு அனுப்புதலுமான சேவை இப்பகுதியி லேயே நடைபெறும். 1981-ன் பின்னர் மீண்டும் 14.7.1983-ல் தற்போதைய மா நகர சபை ஆணையாளரது விடா முயற்சி காரணமாக இரவல் வழங்கும் சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டது. இயற்கை வெளிச்சமும், சுத்தமான காற்றோட்டமும் நூலகத்தில் பரவும் வண்ணம் இருக்கைகள் யாவும் ஒழுங்கு முறையாக நிரைப்படுத்தப் பட்டுள்ளன. அங்கத்தவர்கள் வசதிக்காக இருக்கைகளில் பொருள் அட்டைகளும், வகுப்பெண்களும் வழிகாட்டியாக இணைக் கப்பட்டுள்ளன.

அன்பளிப்பாகக் கிடைத்து வந்த நூல் களது பெரும்பகுதி ஆங்கில நூல்களாகவும் சிறுபகுதி நூல்கள் மட்டுமே தமிழ் நூல்க ளாகவும் இப்பகுதியில் இடம்பெற்றுள்ளன. தமிழ் நூல்களுக்கான கேள்வியினைப் பூர் த்தி செய்ய முடியாதவிடத்து ஒதுக்கீடுக ளைச் செய்து ஓரளவு வாசகர்களை ஆற்றுப் படுத்த முடிகிறது. தமிழ் நூல்களைக் கொள்முதல் செய்யும் நடவடிக்கைகள் மேற்கொண்டு வந்தபோதிலும் சந்தையில் தமிழ் நூல்களுக்கும் பற்றுக்குறை இருப்ப தனல் ஓரளவே கொள்முதல் செய்தலும் சாத்தியமாகவுள்ளது.

இதுவரை காலமும், இடம் பற்றுக்குறை காரணமாக சிறுவர் பகுதியும், இரவல் வழங்கும் பகுதியின் ஒரு புறத்தில் செயற் பட்டு வந்தது. எரிக்கப்பெற்ற சிறுவர் நூலக புனருத்தாரண வேலைகள் யாவும் முடிவுற்றுள்ளமையினுல் சிறுவர் பகுதி தனக்குரிய இடத்திற்கு மாற்றப்படவுள் ளது. இதன் காரணமாக மேலும் இடவச திகளைப் பெற்று இரவல் சேவை விஸ்தரிக் கப்படுகிறது. இரவல் வழங்கும் பகுதியில் போடப்பட்டுள்ள புத்தக இருக்கைகள் யாவும் யாழ் கிறிஸ்தவ சங்கத்தினது தாராள மனப்பான்மையால் கிடைக்கப் பெற்றவையாகும்.

கீழ்த்தள தென்பாகத்தில் உள்ள எரிக் கப்பெற்ற முன்னைய இரவல் வழங்கும் பகுதி, திருத்த வேலைகளின் பின்னர், மீண் டும் இரவல் வழங்கும் சேவையினை வாசகர் கட்கு வழங்கவுள்ளது. 4,200 சதுர அடி விஸ்தீரணம் கொண்ட பகுதியாக இரவல் பகுதியினை விஸ்தரிக்கத் திட்டமிட்டுள் ளோம்.

இப்பகுதி அங்கத்தவர்கட்காக பொது விடுமுறை, திங்கட்கிழமை தவிர்ந்த ஏனைய வார நாட்களில் 08.00மணி முதல் 19.30 மணிவரை தனது சேவையினை வழங்கிவருகின்றது.

சிறுவர் பகுதி—

பிரதான நூலகத்தினையும், புதிய கட்டி டத்தையும் இணைக்கும் இரண்டாம் கட் டப் பகுதியில் இச்சிறுவர் நூலகம், புனருத் தாரண வேலைகளின் பின், தனது சேவை யினைச் சிறுர்கள் மத்தியில் செயற்பட ஆரம் பித்துள்ளது. சர்வதேச அரிமாக் கழகம் 306 'பி'யின் பெரும்பான்மை ஆதரவுட னும், றெட்பான நிறுவனத்தின் ஆதரவுட னும் புதுப்பொலிவு பெற்று இப்பகுதி காட்சியளிக்கின்றது.

மாநகரசபை எல்லைக்குள் வசிக்கும், படிக்கும் 14 வயதுடையவர்களும், கீழ்ப் பட்டோரும், இப்பகுதியினைப் பயன்படுத்த அனுமதிக்கப்படுவர். பொது விடுமுறை திங்கட்கிழமை தவிர்ந்த ஏனையநாட்களில் இந்நூலகம் சேவைக்காகத் திறக்கப்பட்டி ருக்கும். பாடசாலை விடுமுறை தினங்களி லும், சனி, ஞாயிறு தினங்களிலும் 08.30 மணி தொடக்கம் 18.00 மணி வரை செய லாற்றும் இந்நூலகம் ஏனைய வார நாட்க ளில் 11.30 மணி தொடக்கம் 18:00 மணி வரையிலும் சேவைக்காகத் திறக்கப் படும்.

உயரம் குறைந்த புத்தக இருக்கைகள், வகுப்புப் பொருள்வாரியாக நிரைப்படுத் தப்பட்டுள்ளது. கண்கவர் வண்ண வட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேசைகளும், கதிரைகளும் சிறுவர்களை மகிழ்விக்கும் என்பதில் ஆச்சரியமில்லை. சிறுவர் நூலகத்திற்கு அருகே அமைக்கப் படவிருக்கும் சிறுவர் பூங்கா எல்லையில்லா மகிழ்ச்சியைச் சிறுவர்களிடையே தோற்று விக்கவுள்ளது. அத்துடன் சிறுவர்களை நூலகத்திற்கு ஈர்க்குமுகமாக நடாத்தப் பெறும் விரிவு சேவைகளான சித்திரவேலை, கதை வேலை, கைப்பணி வேலை, கட்டுரைப் போட்டி, பேச்சுப்போட்டி, பொது அறி வுப் போட்டி போன்ற ஏனைய போட்டிகள் யாவும் நடாத்தப் பெறும். நூலகத்தினை, அறிவுக்கருவூலங்கள் மத்தியில் தோன்றியு ள்ள கனவுலகமாகவே சிறுவர் கருதுவர்.

இரவல் வழங்கும் நூல்கள் மட்டுமன்றி, உடனுதவும் நூல்களான கலைக்களஞ்சியங் கள், அகராதிகள், பொது அறிவு நூல்கள் ஆங்கிலம், தமிழ் மொழிகளில் உண்டு.

சஞ்சிகைகளும், வார இதழ்களும் இப் பகுதியில் போடப்பட்டுள்ளன. வீடியோ படக்காட்சிகளும், சங்கீத மாலைகளும் சிறு வர்கட்காக ஒழுங்குபடுத்தப்படவுள்ளன. இதற்கான உபகரணங்கள் கிடைத்தவுடன் இச்சேவை விரைவில் ஆரம்பிக்கப்படும்.

வாசிகசாலைப்பகுதி –

புதினப் பத்திரிகைகளும், வார மாத சஞ்சிகைகளும், அரசாங்க தனியார் ஸ்தா பன வெளியீடுகளும், ஸ்தாபனிகராலயங்க ளால் இலவசமாக அனுப்பப்பெறும் சஞ்சி கைகளும், இப்பகுதியில் முக்கிய இடத் தைப் பெறுகின்றன. 1981-ம் ஆண்டு நடைபெற்ற வன்செயலின் பின்னர் தற் காலிகமாக வாசிகசாலைப்பகுதி மாநகர சபை அறையொன்றினுள் ஆரம்பிக்கப்பட் டது. எரிக்கப் பெற்ற பிரதான நூலக வட பகுதி புனருத்தாரணம் செய்யப்பட்டுப் பொது மக்களது பயனுக்காகச் சேவையிலி டப்படும் வரை தற்காலிக அறையொன்றி னுள்ளேயே இப்பகுதி சேவையினை ஆற்றி யது. புனருத்தாரண வேலைகள் பூர்த்தி யாக்கப்பட்ட பின்னர் நூலக நடுத்தரைப் பகுதிக்கு மாற்றம் செய்யப்பட்டது.

பொது மக்கள் தினசரிகளைத் தினந்தோ றும் வாசிக்கும் வண்ணம் வாரத்தின் எல்லா நாட்களிலும், அரசாங்க பொது விடுமுறை தினங்களுட்பட 8.00 மணி முதல் 20.00 மணி வரை இப்பகுதி சேவைக்கு விடப்பட் டுள்ளது. மும்மொழிகளிலும் இரு பிரதி களில் புதினப்பத்திரிகைகள் போடப்படுவ துடன், ஜனரஞ்சகமான பொது, முக்கிய சஞ்சிகைகளும், அரசாங்க வெளியீடுகளும் சந்தா முறையில் பெறப்படுகின்றன.

பழைய சஞ்சிகைகள் வாசிகசாலைப் பகுதி அங்கத்தவர்கட்குத் தவணை முறை யில் இரவல் வழங்கப்படுகின்றது. இப் பகுதி புதிய கட்டிடத் திறப்பு விழாவுடன் கீழ்மாடி வடபாகத்திற்கு மாற்றம் செய் யப்படவுள்ளது. 2,100 சதுர அடி விஸ்தீ ரணம் கொண்ட இம்மண்டபம் பொது மக் களுக்கு வசதி கொண்ட ஆசனங்களையும் இயற்கையான வெளிச்சம், சுத்தமான காற்றோட்டத்தைக் கொண்டும் விளங்கு மென்பதில் ஐயமில்லை.

கேட்போர் கூடம் –

புதிய கட்டிடத்தின் கீழ்த்தளத் தென் பாகப் பகுதியில் இக் கேட்போர் கூடம் அமைக்கப்படவுள்ளது. 2,100 சதுர அடி விஸ்தீரணம் கொண்ட இம்மண்டபச் சுவர் கள் மரவேலைப்பாடுகளைக் கொண்டும், நிலத் தளம் சரிவாகவும், 200 வசதியான ஆச னங்களைக் கொண்டும் விளங்கவுள்ளது. இப் பகுதி விரிவுரைகள், கலந்துரையாடல்கள், கண்காட்சிகள், படக்காட்சிகள் போன்ற ஏனைய தேவைகளுக்காக உபயோகப்படுத் தப்படும். பகல் வேளைகளிலும் படக் காட்சி காண்பிப்பதற்காகப் பலகணிகளுக் குத் திரைகள் இடப்படும்.

வலது குறைந்தோர்க்கு –

வலது குறைந்தோர்க்கான வசதிகளை யும் புதிய கட்டிடத்தில் ஆரம்பித்துள் ளோம். இதற்காகத் தாம் இயக்கும் வண் டிகளிலிருந்து நூலகத்திற்குள் உட்செல்ல சற்றே சாய்வான நிலத்தளம் கொண்ட சாய்வளைவு அமைக்கப்படுகிறது. இது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலப்போக்கில் வாசிகசாலைப்பகுதி, சிறுவர் பகுதி, இரவல் வழங்கும் பகுதி, கேட்போர் கூடம் ஆகிய பகுதிகளுக்கு விரிவாக்கப்படும்.

விழிப்புலன் இழந்தோர்க்குக் ஹெலன் கெல்லரது நாமம் என்றுமோர் வரப்பிரசாதமாகும். ஆகவே சிறிய அளவிலாயினும் 'பிரெய்ல்' பகுதியொன்றினை ஆரம்பித்து விழிப்புலனற்றோர்க்கு வழங்குதல் எமது முக்கிய நோக்கமும் கடமையுமாகும்.

நூற்களஞ்சியப் பகுதி—

சிறுவர் நூலகத்திற்கு மேல் உள்ள பகுதியே களஞ்சிய அறையாகவுள்ளது. அரசாங்க வெளியீடுகளதும், பொது, விசேஷ சஞ்சிகைகளதும், செய்தித்தாள்கள், துண்டுப் பிரசுரங்கள், அதிக பாவனையிலீடுபடுத்தப்படாத நூல்களும், ஆண்டறிக்கைகளதும் பழைய இதழ்களும் இப்பகுதியில் மட்டைகட்டப்பட்டு உடனுதவும் பொருட்டுச் சேகரிக்கப்பட்டுள்ளன. திறந்த இருக்கைகளில் இவைகள் ஒழுங்கு நிரையாக அடுக்கப்பட்டுள்ளன.

உடனுதவும் பகுதி –

பிரதான நூலக முதல்மாடி வடபாகத்தில் இப்பகுதி அமைந்துள்ளது. பொது மக்கள் அனைவருக்கும் கட்டுப்பாடுகள் எதுவுமின்றி சேவையாற்றுகிறது. திறந்த இருக்கைகளில் வகுப்பு நூல்கள் அடுக்கப்பட்டிருப்பதனால் வாசகர்கள் எவ்வித தடங்கலுமின்றி இலகுவில் நூல்களைப் பெற வழி வகுக்கப் பெற்றுள்ளது. அகராதிகள், கலைக் களஞ்சியங்கள், ஆண்டு நூல்கள், நூற்பட்டிகள், தேசப்படங்கள் போன்ற உடனுதவும் நூல்கள் தனி இருக்கைகளில் வைக்கப்பட்டுள்ளன.

அன்பளிப்பாகக் கிடைக்கப்பெற்ற அநேக நூல்கள் ஆங்கில நூல்களேயாகும். தமிழ் நூல்கள் வாசகர்களது தேவைகளைப் பூர்த்தி செய்யுமளவிற்குப் போதியதாக வில்லை. மாணவர்கள் தமது பாடங்களுக்கேற்ற உடனுதவும் நூல்கள் தமிழ்மொழியில் இல்லாமை குறித்துக் குறைப்படுகின்றனர். ஆராய்ச்சி மாணவர்கள் போதிய வுள விடயதானம் வழங்கும் ஆராய்ச்சி நூல்கள் இல்லையென அங்கலாய்க்கின்றனர். கிடைத்தற்கரிய தமிழ் நூல்கள் முதற்பதிப்பு நூல்களாகவும், அச்சில் இல்லாத நூல்களாகவும் இருப்பதனால், புத்தகசாலைகளில் கொள்வனவு செய்யும் வசதி இல்லை. இத்தகைய கிடைத்தற்கரிய நூல்களைத் தமிழ்க் குடிமக்களிடம் இருந்தே நூலகத்திற்குச் சேர்த்துக் கொள்ளல் அவசியமாகின்றது. ஆதலினால் கருணை உள்ளம் படைத்தவர்கள், நூலகத்தில் எரிக்கப் பெற்ற, மீண்டும் பெறற்கரிய நூல்களை உடன் உதவும் பகுதிக்கு வழங்குமாறு பணிவன்புடன் வேண்டுகின்றோம். கையெட்டுப் பிரதிகளையும், ஓலைச் சுவடிகளையும் கூட நூலகம் ஏற்றுக் கொள்ள முன்வருகின்றது. விலைமதிப்புள்ள நூல்களைத் தந்துதவிய ஆசியா பவுண்டேசன் நிறுவனம், தூதரங்கள், பிரிட்டிஷ் கவுன்சில், அமெரிக்க நிறுவன நூலகம், யாழ் ஐக்கிய கிறிஸ்தவ சங்கம், யாழ் பல்கலைக்கழக மாணவரவை, மற்றும் பொதுமக்கள், பாடசாலைகள், தனியார் ஸ்தாபனங்கள், அனைவருக்கும் பொது மக்கள் சார்பில் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம். உடனுதவும் பாடநூல்கள் மட்டுமன்றி, அரச வெளியீடுகளும், செய்தித்தாள் கட்டுரைகளும், ஆங்கிலமொழி நாடாக்களும் இப்பகுதியில் காணப்படுகின்றன.

விசேட சேர்க்கைப் பகுதி –

உடனுதவும் பகுதிக்கு எதிர்த்திசையில் காணப்படும் பகுதி புனருத்தாரணம்செய்து முடிக்கப்பெற்றவுடன் இச்சேவை அப்பகுதியில் ஆரம்பிக்கப்படவிருக்கின்றது. இலங்கை சம்பந்தமான நூல்களும், யாழ்ப்பாண மாவட்டம், மாநகரம் பற்றிய நூல்களும், கையேடுகளும், பிரசுரங்களும், ஏட்டுச் சுவடிகளும் சேகரிக்கப்படவுள்ளன. ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்களால் எழுதப்பெற்ற சகலநூல்களும், யாழ்ப்பாணம்பற்றி உள்நாட்டிலும், வெளி நாட்டிலும் பிரசுரிக்கப்பெற்ற நூல்களும் இப்பகுதிச் சேர்க்கையில் அடங்கும்.

எழுத்துருப் பெற்றவைகள் மட்டுமன்றி உபகரணங்களும், நாணயங்கள், சிலைகள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற பண்டைக்காலக் கலாச்சாரங்களை எடுத்துக்காட்டும் சின்னங்களையும் இச்சேர்க்கையில் அடக்கப்படவுள்ளது.

மாணவர்கட்கும், ஆராய்ச்சியாளர்கட்கும் தேவையான தகவல்களைச் சேகரிக்க உதவும் வண்ணம் நிழற்படப் பிரதிச்சேவை உபகரணம் இப்பகுதியில் ஏற்படுத்தப்படும்.

கிடைத்தற்கரிய நூல்களை நிழற்படப்பிரதிகளாகத் தொகுத்தும், பிறநாட்டு நூலகங்களிலிருந்து மைக்ரோ படச்சுருள்களாகக் கொள்முதல் செய்தும், ஆராய்ச்சியாளருக்கு உதவும்பொருட்டு வைக்கப்படலாம். மைக்ரோ ரீடர் எனும் நிழற்படச் சுருள்களை வாசிக்க வல்ல கருவி எமது நூலகத்திற்கு அன்பளிப்பாக ஆதரவாளர் ஒருவரினால் கிடைத்துள்ளமையால், இச்சேவையினை நாம் வழங்கும் காலமும் அதிக தூரத்தில் இல்லையென்றே கூறவேண்டும்.

கட்புல செவிப்புலப் பகுதி –

வீடியோ படக்கருவிகளையும், படச்சுருள்களையும், கசெற் நாடாக்களையும், இசைக் கருவிகளையும் கொண்டதாக இப்பகுதி அமைக்கப்படவுள்ளது. கல்வி சம்பந்தமான படச்சுருள்கள் இப்பகுதிச் சேவைக்காகக் கொள்வனவு செய்யப்படும்.

படிப்போர் கூடம் –

புதிய கட்டிடத்தின் மேல்மாடி வடபகுதியில் நூறு இருக்கை வசதிகள் கொண்ட படிப்போர் கூடம் அமைக்கப்படும். சொந்தப் பாடநூல்களையும், பயிற்சி நூல்களையும் கொண்டு செல்ல இங்கு அனுமதிக்கப்படுவர்.

நிர்வாகஸ்தர் பகுதி –

பிரதான நூலகத்தின் மேல்மாடி நடுத் தளப் பகுதியில் தற்பொழுது இப்பகுதி இயங்குகின்றது. அன்பளிப்பாகக் கிடைக்கும் நூல்களைப் பெறுவதும், பாவனைக்குதவாத பழைய பதிப்புகளையும், உருக்குலைந்த நூல்களையும், பல பிரதிகளிலான நூல்களையும் விடுவித்தல் செய்தலும், இப்பகுதியிலேயாகும்.

நூலகத்திற்கு உபயோகமுள்ள நூல்கள் யாவும் நூலகவியலில் தேர்ச்சிபெற்றநூலகர்களினால் பகுக்கப்படுகிறது. நூலக கோவையில் பதிதலும், வகுப்பெண்பொறித்தலும், விவரண அட்டைகளை எழுதலும் ஏனைய, மட்டை கட்டுதல், அறிவித்தல், திகதி அட்டவணைகளை ஒட்டுதலுமான நுட்ப வேலைகளும் இப்பகுதியிலேயே நடைபெறுகின்றன. புதிய நூலகக் கட்டிடம் பூர்த்தியானதன் பின்னர் மேல்மாடியின் தென்பாகத்திற்கு இப்பகுதி மாற்றப்படவுள்ளது. நூலகரது அலுவலகமும் இப்பகுதியிலேயே இயங்கும்.

கலைக்கூடம் –

பிரதான நூலகத்தின் இரண்டாம் தளப் பகுதியில் கோபுரக்கூம்பின் நேர்கீழாக உள்ள பகுதியே இக்கலைக்கூடமாகும். தமிழுக்குச் சிறப்பாகத் தொண்டாற்றிய அறிஞர்களது உருவப்படங்களை இங்கு ஏற்றும் வண்ணம் இப்பகுதி அமைக்கப்பட்டுள்ளது இப்பகுதியினை அடுத்து இடவலப் புறங்களில் உள்ள மொட்டை மாடி முற்றம் யாழ் மாநகரத்தின் எழிலினை ரசிக்கும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது ஓர் சிறப்பம்சமாகும்.

விசேட வேண்டுகோள் –

நூலகத்திலுள்ள நூல்கள் யாவும் எமது தேசிய சொத்தாகக் கருதி பொறுப்புணர்வுடன், பொதுமக்கள் பாதுகாக்கவும், உபயோகிக்கவும் வேண்டும். நூல்களில் பக்கங்களை வெட்டுதல், கிழித்தல், கிறுக்குதல் போன்ற செயல்களைச் செய்தல் கூடாது. எரிக்கப்பெற்ற நூலகம் மீண்டும் பொதுமக்களுக்காகவே செயலாற்றத் தொடங்கியுள்ளமையினால், பலரும் இச்சேவையினைப் பயன்படுத்த வேண்டி இவ்வாறான செயல்களைச் செய்ய வேண்டாமெனக் கேட்கப்படுகின்றீர்கள். நூலகக் கட்டிடத்தையும், நூலக உபகரணங்களையும் கூட உங்கள் சொத்தாகவே பேணவும், நூலக உத்தியோகத்தர்களுடன் ஒத்துழைக்கவும் அன்புடனும், பணிவுடனும் கேட்கப் படுகின்றீர்கள். மிகப் பொறுப்பான இவ்வேண்டுகோளுக்குப் போதிய ஆதரவு கிடைக்குமென்பது எமது நம்பிக்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Institutional Services of the Jaffna Public Library

Mrs. R. Nadarajah, Librarian

Phoenix-like the Jaffna Public Library has risen from its own ashes of the burnt library as a symbol of immortality the Jaffna man's cultural heritage. It is now a standing monument of the indestructibility of the vision that inspired our forbears.

Temples of knowledge and men of profound scholarship never perish. They pass on to the future generation all that is estimable and the library is one of those gifts. Our Jaffna Public Library is an excellent example of this fact, it has emerged with a new life and a new glory. The library with its original 13,000 Sq.ft. has spread itself all over the Public Library Square and now covers almost twice its form erarea. This expansion has facilitated the assembling of the undermentioned sections of an institution under a single roof.

CLOAK ROOM

Bags, parcels, books, files etc. brought by readers are expected to be handed over here and a token obtained, and returned before collection of articles. This will not apply to readers proceeding upstairs to the study.

SECURITY DESK

Every borrower removing books from the library should produce them at the exit security desk for checking.

EXHIBITION AREA

The lobby will form a permanent exhibition area with the display of oil paintings of revered leaders, photocopies of ancient books, manuscripts, works of art, handicrafts, etc., of indigenous items. Also an illuminated glass almirah will display latest additions of books in the library.

Picture post cards of the Jaffna scener will also be available for sale.

LENDING SECTION

At present the lending section covering an area of 2,100 Sq.ft is housed in the right wing of the ground floor. This section after the June, 1981 fire mishap was opened to the public on 14th of July, 1983. For lack of space, the children's section which is now housed in this area will, with the opening ceremony be shifted to the renovated building of the former children library that was burnt.

As the space allocated to the lending section has become inadequate, it is proposed to convert the entire ground floor into the lending section making a square area of twice 2,100 Sq.ft. With over four hundred readers a day, and the additions of several thousands of books, this expansion has become imperative.

Lending section is open to all members of the Jaffna Public over 14 years of age with special conditions to residents outside Jaffna Municipal limits. It is opent o members from 08.00 to 19.30 on all days excepting Mondays and Public Holidays.

The lending section is well stocked with books in English and Tamil to suit the tastes of the most a stute and discerning readers. Books in various subjects from up-to-the minute fiction to old historical novels, biographies, travel, literature, art, religion, science, economics, etc. are available.

The book shelves have been arranged in accordance with the standard library practice to enable readers to have access

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

to books without any delay. The entire section is well ventilated with natural light pouring in.

CHILDREN'S SECTION

This section is housed in the connecting link between the main and new building covering an area of 1,600 Sq. ft. Special thanks are due to Lion's "International District 306 B" and Reddbarna of Norway who provided funds for the complete renovation, re-decoration, furniture, fittings andtoilet facilities of this section.

It is open on all days excepting Mondays and Public Holidays. On week days (excluding Mondays) it is open from 11. 30 to 18. 00 and during week-ends and school vacation, it is open from 08.30 to 18. 00 Books in all three languages, English Tamil and Sinhala are well stocked in shelves easily accessible to children. Also, furniture is specially designed and executed in various colours to suit children from 07 to 14 years. Regular children's programmes such as handicraft hours, drawing hours, story telling hours, musical programmes are conducted. The story hours, singing speech making, intelligent quiz etc. will be conducted in the miniature park just adjoining this section.

NEWS-PAPER AND PERIODICAL SECTION

Soon after the burning of the library on First of June 1981, this section and the children's section were the first to be re-opened to the public. Temporarily they were housed in the Town Hall building. After the renovation the former was shifted to the ground floor lobby. As this is the most widely patronised area of the library, it will be shifted again to a more spacious area of the new wing covering an extent of 2,100

Sq. ft. This section is open from 08.00 to 20.00 to all members of the Public on all days of the year.

Special feature of this section is the lending of general periodicals to card-holding members.

A wide range of popular periodicals for recreational reading and current information in local and foreign affairs is available.

English and Tamil news-papers, both local and foreign are available; and some Sinhala dailies are also available to cater to the Sinhala reading public. There are also Government Publications.

AUDITORIUM

This section is to be housed in the right wing of the ground floor of the new building covering an area of 2,100 Sq ft. Auditorium walls will be specially constructedwith wooden panels and floor tiered with special seats to accommodate 200 patrons.

This section will be used for seminars lectures, conferences, exhibition, film shows, etc.,

For the Handicapped

The needsof the disabled and the handicapped are receiving our attention. Mention must be made of the fact that in the new wing steps are taken to construct a Ramp to enable disabled persons to en ter the library in their own wheel chairs. Also devices are being planned to provide easy access for such persons into the Newspaper and Periodicals Section, Children's Section, lending library and to the Auditorium.

To those deprived of their eyesight the name of Hellen Keller is an eternal

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

inspiration. It's therefore, our desire and prime duty to go all out to offer even in a small way a 'Braille' section to develop the potential of this category of the handicapped.

THE STACK AREA

This is housed in the mezzanine floor of the inter-connecting link covering an area of 1,600 Sq.ft. Bound volumes of Government Publications, back numbers of special and general periodicals, Newspapers, pamphlets, and less used books are stored here.

REFERENCE SECTION

At present this section is housed in the right wing of the main building covering an area of 2,100 Sq.ft. This section is open to all members of the Jaffna Public. Books in every field of learning mostly in English received as donation from various sources are well stocked in open shelves according to Dewey Decimal Classification and are readily available with a knowledgeable librarian in charge.

Collections of ready reference books such as Dictionaries, Encyclopaedias Year Books, Bibliographies, Hand-Books, Atlases are shelved separately. learning in educational, historical Scientific and cultural areas.

Majority of books received as donations are mainly in English and very few in Tamil and Sinhala. The public need for Tamil reference books has not been fulfilled even to a small extent and the call for same is increasing daily. Therefore, it will be a great boon if this dearth is fulfilled by way of complimentary copies, from those who can kindly place them with the library. As many of these books are out of print and are not procurable this short-coming can only be met by the rare breed of avid collectors of such volumes who should willingly respond to this appeal. Invaluable Ola and Hand-written Manuscripts and rare special collections which are now on the ash heap can perhaps never be replaced, but we still hope that there are families and individuals who own such rarities. We also appeal to them to donate such collections to this library. Our special thanks are due to Embassies The Asia Foundation, The British Council, American Centre, The Canadian Organisation for Development Through Education, The Central British Fund for Tamil Refugees Rehabilitation, The Jaffna Christian Union, The Citizen Committee of Sri Lanka and National Library Services Board of Sri Lanka. The Jaffna University Students Council which has donated several latest editions of books of educational and cultural value deserves special mention. Also our thanks are due to Leo Club of St. John's College, J/Central College, Jaffna and Several individuals too numerous to thank individually who have unstintingly brought their entire collections to our very door.

Other than educational books, Government Publications, Newspaper clippings pamphlets, TOEFL Casettes are also available.

SPECIAL COLLECTION ROOM

This section will be situated opposite the reference section. Books pertaining to Sri Lanka, Jaffna District and City will be kept here. Jaffna Collection will consist of both books on Jaffna from

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ancient times to the presentday and books written by Sri Lankan Tamil Authors. Books and other materials will be stored in glass cupboards for this purpose. Ten glass cupboards have been bought and the collection work has started. Research books, rare books, books on Sri Lanka and books written by foreign authors on Sri Lanka also will be collected.

A photo-copying service will be made available to facilitate taking photo copies of relevant documents needed by students and researchers.

A Micro-Form Reader Unit has been donated by a well-wisher and it will be accommodated in this section. Micro photocopying services will commence soon after the completion of the building.

AUDIO VISUAL SECTION

This will house a Video-viewing equipment with cassettes of topical interest such as science, space travel, animal life and other allied subjects of an educational nature.

Facilities for listening to cassettes and records also will be provided.

STUDY ROOM

This section is to be situated with individual seating accommodation for a Hundred in the left wing upper floor of the new building to enable students to use it for study with books and notes of their own or those borrowed from the library.

ADMINISTRATION SECTION

This section is situated in the lobby of the upper floor of the main building covering an area of 900 Sq.ft. Donations are received and old editions, out dated multiple copies etc. are disposed of at this point. Processes of work such as accessioning, classifying, cataloguing, binding are done here.

This section will be shifted to the right wing upper floor of the new building. In due course the Librarian's Office and the office of the staff will also be shifted to this area.

ART GALLERY

This section is situated on the second floor of the main building right under the dome. This dome has been specially designed with glazed windows for sufficial lighting. Also niches are provided to enable portraits and paintings to be hung conveniently. On both left and right of this gallery the flat roof gives panoramic view of the entire Jaffna Town making it possible to view a few square miles of our scenic beauties.

Special Appeal

This resume of an invaluable social amenity would be incomplete if the readers - the co-partners in this enterprise were not taken into confidence, the Jaffna Public Library resurrected so marvellously and within a comparatively short time is the nerve-centre of Jaffna's intellectual system. The story of its rebirth is the story of the splendid response to our call for help. It is therefore, up to the users of this facility to make themselves worthy of it, by using the books and periodicals with care letting no room for vandalism of any sort, not even disfiguring or much less mutilating articles in their care. It has become necessary to make a special appeal. In the new set up the need for a new out look on the part of our is particularly great and we are confident they will co-operate.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ACKNOWLEDGMENTS

Very many persons and Institutions were involved either directly or indirectly in the rehabilitation and re-construction of the Jaffna Public Library. Without in any way under-rating the services and contributions made by others, special mention has to be made of the following as an expression of gratitude for record purposes:-

1) His Excellency J. R. Jayewardene President of the Republic of Sir Lanka for releasing Rs. 2 million out of the President's Fund and for future contributions to be made.

2) The Jaffna Municipal Council in Office up to 31st May, 1983 headed by Mr. Rajah Visuvanathan, Mayor, for the initiative and involvement in the project.

3) Mr. A. Amirthalingam, former M.P for Kankesanthurai and Leader of the Opposition in Parliament for securing contributions, especially for having been responsible for obtaining compensation from the Government.

4) Mr. M. Sivasithambaram, former M.P. for Nallur, Mr. V. Yogeswaran, former M.P. for Jaffna and Mr. A. M. Alalasuntharam former M.P. for Kopay for their assistance in securing contributions

5) Mr. V. S. Thurairajah, Architect his Associates and Staff for the architectural drawings and plans of the buildings and for making themselves available at all required times.

6) Rev. Fr. G. A. Francis Joseph, Rector, St.Patrick's College, Jaffna for having organised the Flag Day collections in the various schools which brought in more than Rs. 2 lakhs. Reference must be made to the Principals of Schools also for their co-operation along with the Director of Education for giving the required approval.

7) The Student's Council of the University of Jaffna for having collected contributions and donated books to the value of about Rs.2 lakhs.

8) The Jaffna Public Library Restoreation Project Colombo Committeeconsisting of Messrs. V. S. Thurairajah (Architect), V. R. Vadivetkarasan, K. Kandasamy (Attorney at-Law), S. Thiruchelvam, I. T. Sambanthan, E. Shanmugam and S. P. Samy for organising the Library Week in Colombo and assisting in the collections. Mr. Vadivetkarasan deserves special mention for having organised the Dance recital of Tamil Nadu State Dancer Miss Swarnamuke in aid of the Fund. We are very thankful to Miss Swarnamuki also.

9) Mr. R. Paskaralingam, Secretary Ministry of Local Government, Housing & Construction for granting the necessary authority for the expenditures, engagement of staff and for the rendition of

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

services by the Officers of the Buildings Department especially Dr. (Miss) P. Sivapragasapillai, Chief Structural Engineer and Mr. P. Naganathar, Senior Structural Engineer.

10) Dr. (Miss) P. Sivapragasapillai for having guided us in regard to the revised structural designs of the buildings.

11. Mr. P. Naganathar, Senior Structural Engineer of the Department of Buildings for providing continuous advice on the spot and for making available his services at all required times during the progress of the constructions.

12) The World Council of Churches for the generous contribution of Rs. 1:5 lakhs in cash the donation of books and 100 book-shelves through the Jaffna Christian Union.

13) The Lions Club and Redd Barna for contributions towards the rehabilitation of the Children's Section and NORAD for their generous contribution of Rs. 322,580/-

14) Members of the Library Committee — Mr. K. Nesiah Rev. Fr. J. A. Francis Joseph, Messrs. E. Sabalingam, H. M. Shahul Hameed, S. Thiagarajah, N. Mylvaganam, K. Murugaratnam, S. Murugavel, S. Ambikaipahan, Mrs. R. Ratna Navaratnam and Mr. N. Sabaratnam for their involvement in the project.

15) The Librarian and the Staff for the classification, cataloguing and arrangement of books, and making them available to the public.

16) The Officers and Employees of the Jaffna Municipal Council for their effective involvement and contributions towards the project.

17) Mr. V. Satchithananthan, former. Works Engineer for the initial involvement in the drawings, plans and specifications etc, Mr. Er Vaithialingam sometime Consulting Engineer and Mr.N. Nadesan for serving as Resident Engineer of the project with keen interest from October, 1983.

18) Mr. A. Jayarajah, Contractor, for having taken pains during the period of construction and for having completed the work with dedication and interest. His personnel too deserve special reference for the interest with which they worked on the project.

19) All those living beyond the shores of this Country who had made contributions towards the project, Reference should be made to the Tamil Association of Alberta, Canada, Mauritius Tamil Temple Federation of Rose Hill, Mauritius, Tamil Association of Australia, Tamil Organisations of U.K. like Standing Committee of Tamil Speaking Peoples, London, Thiruvalluvar Tamil School etc., France Tamils Organisation, Norway Tamil Association, and Tamils living in Germany, Zambia, Nigeria,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Nairobi, Brunei, Norway, Botswana, U.S.A., Malaysia, Tamil Nadu and other countries who had made contributions.

20) The Tamil Nadu Government headed by Chief Minister, Hon. M. G. Ramachandran, Finance Minister Hon. V. R. Nedunchelian Minister of Education Hon. V. Aranganayagam, the Director of Public Libraries Tamil Nadu for donating books to the value of Indian Rs. 5 lakhs.

21) The Indian High Commission in Sri Lanka for taking up the responsibility for transporting the books from Madras to Jaffna.

22) The Canadian and British High Commissioners and the American Ambassador and the British Council for donating books.

23) All those who had made contributions in cash and donated books who may not have been specifically mentioned here or elsewhere.

C. V. K. Sivagnanam
Municipal Commissioner
Jaffna

Municipal Office
Jaffna
21. 05. 84

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண மாநகரசபை நூல்நிலைய நம்பிக்கை நிதி.

30. 4. 1984 வரையுள்ள வரவு செலவு விபரம்.

வரவு.

01.	மீதி முன்கொண்டுவரப்பட்டது	19,926.09
02.	ஸ்ரீலங்கா ஜனநாயக சோஷலிஸக் குடியரசின் கௌரவ ஜனாதிபதி அவர்களின் நஷ்டஈடு	20,00,000.00
03.	கொடித்தினம், நூலகவாரம் (யாழ்ப்பாணம், கொழும்பு)	7,38,114.15
04.	நோர்வே ஏஜென்சி, நொறாட்	3,22,580.00
05.	யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திச்சபை	3,00,000.00
06.	செல்வி. குமாரி சுவர்ணமுகியின் நிகழ்ச்சி வசூல்.(யாழ்.கொழும்பு)	1,56,476.47
07.	உலகத்திருச்சபைகள் கழகம்	1,50,000.00
08.	சாம்பியாவில் வாழும் இலங்கையினர்	1,18,934.55
09.	வங்கியில் நேரடியாக வைப்பிலிடப்பட்ட தொகை (விபரம் தெரியாதவர்கள்)	1,18,023.29
10.	ஜேர்மனியில் வசிக்கும் இலங்கையர்	1,12,996.64
11.	இலங்கைத் தமிழர் சங்கம், விக்ரோறியா, அவுஸ்திரேலியா	1,01,098.43
12.	கனடாவில் உள்ள இலங்கையர்	82,566.28
13.	போரு சமூகம்	82,000.00
14.	லண்டன் வாழ் இலங்கை மக்கள்	78,860.50
15.	மாநகர முதல்வரும், உறுப்பினர்களும்	76,433.55
16.	புணேயில் வசிக்கும் இலங்கையர்	75,728.42
17.	நிலையான வைப்பிலிருந்து மீளப்பெற்ற தொகைக்குரிய வட்டி	66,500.00
18.	தனிநபர் வரவு	60,584.51
19.	லயன்ஸ் கழகம், யாழ்ப்பாணம்	60,000.00
20.	கற்றன் தேசிய வங்கி, கொழும்பு	50,000.00
21.	''றெட்பாணு'' (இலங்கையில் நோர்வே ஸ்தாபனம்)	50,000.00
22.	நைஜீரியாவில் வாழும் இலங்கையர்	49,881.80
23.	நோர்வே நாட்டில் வாழும் இலங்கையர்	49,485.30
24.	சவுதிஅரேபியாவில் வசிக்கும் இலங்கையர்	44,203.00
25.	மொறிஜீயஸ் தமிழ்க் கோவில்கள் கூட்டிணைப்பு	38,444.22
26.	இலங்கைத் தமிழர் சங்கம், நோர்வே	34,510.79
27.	நலவிருத்திச்சங்கங்கள், கழகங்கள், சம்மேளனங்கள், இயக்கங்கள்	25,146.67
28.	அமெரிக்காவில் வாழும் இலங்கை மக்கள்	23,261.00
29.	கென்னியாவில் உள்ள இலங்கையர்	23,164.34
30.	ஆண்டகையும், மெதடிஸ்தசபையும் (கொழும்பு)	17,619.86
31.	அவுஸ்திரேலியாவில் வசிக்கும் இலங்கையர்	13,673.35
32.	திரு. எம். எம். சிவசண்முகம், முட்டை ஓவியர், தமிழ்நாடு	11,172.00
33.	பாக்தாத், அபுதாபி, துபாய், அக்கிறேயா, குவைத், சுவீடன்	10,944.60
34.	பிரான்ஸ் நாட்டில் உள்ள இலங்கையர்	10,000.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35.	இலங்கை புகையிலை ஸ்தாபனம், கொழும்பு	10,000.00
36.	இலங்கை வரையறுக்கப்பட்ட வர்த்தக வங்கி, கொழும்பு	10,000.00
37.	ஆண்டகை, யாழ்ப்பாணம்	10,000.00
38.	இலங்கை சர்வோதயச் சங்கம்	10,000.00
39.	குருநாகல் சைவமகாசபை	6,290.00
40.	ஆடற்கலைக்கழகம், கொழும்பு	6,037.90
41.	குண்டன் மால்ஸ், கொழும்பு	5,000.00
42.	ஸ்ரீலங்கா நூலகச்சங்கம், கொழும்பு	5,000.00
43.	ரொட்டறிக் கழகம், மட்டக்களப்பு	2,500.00
44.	இந்தியா, பீக்கிங், மலேசியா வாழ் மக்கள்	2,200.00
		52,39,357.71

செலவு.

01.	நிலையான வைப்பு:- தேசிய சேமிப்பு வங்கி, யாழ்ப்பாணம்	32,50,000.00
02.	நூலக 3ஆம் கட்ட வேலைக்குரிய கொடுப்பனவு	11,40,548.06
03.	நூலக கட்டிட புனரமைப்பு மின்வேலைக் கொடுப்பனவு	1,40,550.00
04.	நூலக கட்டிட புனரமைப்பு	1,00,213.43
05.	நூலக தளபாடக் கொள்வனவு	81,368.75
06.	கட்டிட மேற்பார்வைச் சம்பளங்கள், கூலிகள்	28,439.90
07.	கொடித்தினம், நூலகவாரம் (யாழ்ப்பாணம், கொழும்பு)	19,371.99
08.	புத்தகங்கள் பெற்றமை தொடர்பான கொடுப்பனவுகள்	16,056.00
09.	அச்சடித்தல், தபாற்கட்டணங்கள்	9,285.92
10.	சுவர்ணமுகியின் நிகழ்ச்சி (யாழ்ப்பாணம்)	6,229.95
	காசு மிகுதி	4,47,293.71
		52,39,357.71

*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

JAFFNA MUNICIPAL COUNCIL PUBLIC LIBRARY - TRUST FUND

RECEIPT / PAYMENT ACCOUNT AS AT 30.04.1984

Receipts

01.	Brought forward balance	19,926.09
02.	His Excellency the President of Sri Lanka - Compensation	20,00,000.00
03.	Proceeds of Flag Day - Colombo & Jaffna	7,38,114.15
04.	Norwegian Agency - NORAD	3,22,580.00
05.	Jaffna District Development Council	3,00,000.00
06.	Proceeds of Dance Recital Swarnamuhi - Colombo & Jaffna	1,56,476.47
07.	World Council of Churches	1,50,000.00
80.	Contribution from Sri Lankans in Zambia	1,18,934.55
09.	Direct Credits to Bank (Particulars not known)	1,18,023.29
10.	Contribution from Sri Lankans in Germany	1,12,996.64
11.	Ceylon Tamil Association, Victoria, Austrilia	1,01,098.43
12.	His Holiness Dr. Syedna Mohamed, Bohara Community	82,000.00
13.	Contribution from Sri LankanCanada	82,566.28
14.	Contribution from Sri Lankan in London	78,860.50
15.	Mayor & Members of the Jaffna Municipal Council	76,433.55
16.	Contribution from Sri Lanka in Buruni	75,728.42
17.	Interest on Fixed Deposits	66,500.00
18.	Contribution from Individuals	60,584.51
19.	Lions Club, Jaffna	60,000.00
20.	Hatton National Bank, Colombo	50,000.00
21.	Redd Barna - Sri Lanka (Norwegian)	50,000.00
22.	Contribution from Sri Lankan in Nigeria	49,881.80
23.	Contribution from Sri Lankan in Norway	49,485.30
24.	Contribution from Sri Lankan in Soudi Arabia	44,203.00
25.	Mauritius Tamil Temple Federation	38,444.22
26.	Ceylon Tamil Sangam - Norway	34,510.79
27.	Contribution from Welfare Socities, Clubs etc	25,146.67
28.	Contribution from Sri Lankan in Americia	23,261.00
29.	Contribution from Sri Lankan in Kenniya	23,164.34
30.	Bishop of Colombo & Methodist Mission	17,619.86
31.	Contribution from Sri Lankan in Austrilia	13,673.35
32.	Mr. M. M. Sivashanmugam, Artist (egg), Tamil Nadhu	11,172.00
33.	Contribution from Sri Lankan in Bagdad, Abudabi, Dubai, Akkiroya, Kuwait & Swdeen	10,944.60
34.	Contribution from Sri Lankan in France	10,000.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35.	Ceylon Tobacco Corporation, Colombo	10,000.00
36.	Commercial Bank of Ceylon Ltd, Colombo	10,000.00
37.	Bishop of Jaffna	10,000.00
38.	Sarvothaya Movement, Moratuwa	10,000.00
39.	Hindu Maha Sabai, Kurunegalla	6,290.00
40.	Adatkalai Kalagam, Colombo	6,037.90
41.	Kundanmals Ltd, Colombo	5,000.00
42.	Sri Lanka Library Association	5,000.00
43.	Rotary Club, Batticoloa	2,500.00
44.	Contribution from Residents - India, Peking & Malasiya	2,200.00
		52,39,357.71

Payments

01.	Fixed deposits	32,50,000.00
02.	3rd Stage of the Library (Construction)	11,40,548.06
03.	Electrical wirings and installations	1,40,550.00
04.	Renovation of the Northern Wings and Lobbies	1,00,213.43
05.	Purchase of Furnitures	81,368.75
06.	Salaries & Wages	28,439.90
07.	Flag Day - Colombo & Jaffna	19,371.99
08.	Transport of Books etc	16,056.00
09.	Printing, Stationary & Postage	9,285.92
10.	Dance Recital Swarnamuhi - Jaffna	6,229.95
11.	Cash at Bank	4,47,293.71
		52,39,357.71

★ ★ ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாண பொது நூலகத்தின்
புதிய கட்டிடத் தோற்றம்

View of the New Building
Jaffna Public Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலத்தளம்

1. புகுமுக மண்டபம்
2. உடைமைகள் பாதுகாப்பிடமும் நூல்கள் பாதுகாப்பிடமும்
3. காட்சிக் கூடம்
4. 5. } இரவல் வழங்கும் நூலகம்
6. சிறுவர் நூலகம்
7. வாசிகசாலை
8. கேட்போர் கூடம்
2. வலது குறைந்தோர் புகு மண்டபம்

GROUND FLOOR

1. Porch
2. Cloak Room and Security Desk
3. Exhibition Area
4. 5. } Lending Library
6. Children's Library
7. News Paper and Periodicals Section
8. Auditorium
2. Entrance Hall for Disabled



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேல்தளம்

10. உடனுதவும் நூலகம்
11. விசேட சேர்க்கைப் பகுதி
    அ. இலங்கை, யாழ்ப்பாண சேர்க்கைகள்
    ஆ. கட்புல செவிப்புலப் பகுதி
    இ. நிழற்படப் பிரதியாக்கம்
12. நூற்களஞ்சியப் பகுதி
13. பொது நிர்வாகப் பகுதி
    அ. நூலகர் காரியாலயம்
    ஆ. நூலக ஊழியர்கள் காரியாலயம்
    இ. தொழில் நுட்ப பகுதி
    ஈ. புத்தகம் கட்டுதல் விடுவித்தல்
14. படிப்போர் கூடம்

FIRST FLOOR

10. Reference Library
11. Special Collection Area
    a. Sri Lanka and Jaffna Collection
    b. Audio Visual Library
    c. Photocopying Section
12. Stack Room
13. General Administration
    a. Librarian's Office
    b. Staff Office
    c. Technical Area
    d. Binding and Withdrawals
14. Study



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org